# இந்து ஒளி
HINDU OLI

தீபம் - 19 சுடர் - 08



மாத்தளை குமரமலை அருள்மிகு குமரப்பெருமான் மகா கும்பாபிஷேக சிறப்பிதழ்

மன்மத வருடம்
ஐப்பசி

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

October
2015

## இந்து ஒளி – நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழ் வெளியீட்டு விழா (10.09.2015)



இந்து ஒளி - நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழ் வெளியீட்டு விழா கடந்த செப்டம்பர் மாதம் 10ஆம் திகதியன்று நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவரும், யாழ் மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம் பெற்றது. இதன்போது ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபை செயலாளர் திரு எஸ். தவநாதன், ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் தாயார் திருமதி சிவலோஜனி கனகரத்தினம், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையைச் சேர்ந்த திரு எஸ். நித்தியானந்தன், வர்த்தகப் பிரமுகர் திரு. அ. சுந்தரலிங்கம் ஆகியோர் இந்து ஒளி சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதை படங்களில் காணலாம்.



மாமன்றத் தலைமையகத்தில் 17.09.2015 அன்று நடைபெற்ற ஆவணி சதுர்த்திப் பூசை வழிபாடு



மாத்தளை சிந்தாகட்டி குமரமலை அருள்மிகு குமரப்பெருமான் ஆலயத்திற்கு மணியொன்றைப் பெறுவதற்காக மாமன்றத்தால் நிதியுதவி வழங்கப்படுகிறது



கண்டி மாவட்ட தெஹியன்னவல ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அம்மன் விக்கிரகம் பெற்றுக்கொள்வதற்கு திரு. டப்ஸி கனகரத்தினம் நிதியுதவி வழங்குகிறார்





கொழும்பு கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் நவராத்திரி கொலு

பொதுசனநூலகம்
04 NOV 2015
மாநகரசபை
யாழ்ப்பாணம்

உ
சிவமயம்

தீபம் – 19

# இந்து ஒளி

சுடர் – 08

மன்மத வருடம் ஐப்பசித் திங்கள் 8 ஆம் நாள் (25.10.2015)

## பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம் மலர்நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிவ நெய்த்தானமெ னீரே!

### திருவாசகம்

கடவுளே போற்றி என்னைக்
கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே உருக்கி என்னை
ஆண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைத்திட் டொல்லை
உம்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி!

### திருவிசைப்பா

தன்னடி நிழற்கீழ் என்னையும் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
என்னிடைக் கமலம் மூன்றினுள் தோன்றி
எழும்செழுஞ் சுடரினை அருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக்கு அடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டுகொண் டேனே!

### திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே!

### திருப்புராணம்

வேத ஓசையும் வீணையின் ஓசையும்
சோதி வானவர் தோத்திர ஓசையும்
மாதர் ஆடல் மணிமுடிவு ஓசையும்
கீத ஓசையுமாய்க் கிளர்வு உற்றவே!

திருச்சிற்றம்பலம்

## மதுபாவனை நிறுத்தப்படுவது அவசியம்

மதுபானம் மற்றும் புகைத்தல் தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதி எடுத்த தீர்மானம் பாராட்டுக்குரியது. இலங்கையில் இளைய தலைமுறையை வேகமாக மாசுபடுத்தி வரும் மதுகலாசாரத்தை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை அரசு எடுக்கும் நன்முயற்சிகள் குறித்து அகில இலங்கை இந்து மாமன்றம் தனது வாழ்த்தினை தெரிவித்துள்ளது. இலங்கையில், என்றும் இல்லாதவாறு மதுவுக்கு அடிமையாகும் மக்கள் தொகை வேகமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் மது அருந்தும் மக்கள் தொகை திடீரென உயர்ந்துள்ளது. மலையகத்திலும் மதுவுக்கு அடிமையாகி கசிப்பு போன்ற ஆபத்தான மதுசாரத்தை அருந்தும் மக்கள் தொகை அதிகரித்துள்ளது. கௌரவ ஜனாதிபதியின் தலைமையில் நிதி அமைச்சு மதுபானம் மற்றும் சிகரட் போன்றவற்றின் வரியினை அதிகரித்திருப்பது மனிதநேயமுள்ள மக்களுக்கு ஓர் ஆறுதலைத் தரும் செய்தியாகும்.

பல மதுபானச்சாலைகள் கட்டுப்பாட்டு ஒழுங்குகளுக்கு அப்பால் கோயில்கள், பாடசாலைகள், பொதுமக்களின் குடியிருப்புக்கள் போன்றவற்றின் சூழலில் இயங்கி வருவது துன்பகரமான செய்தியாகும். சமீபகாலத்தில் போதைவஸ்து பாவனையும் மாணவர்களைச் சூழ்ந்து வருவது அனைவரும் அறிந்ததே. எனவே இலங்கை அரசு மதுபானசாலைகள் அமைந்திருக்கும் இடங்கள் பற்றி மீள் அக்கறை செலுத்தவேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகச் சுற்றாடலில் கடந்த ஆட்சிக்காலங்களில் மதுபானச்சாலைகள் பல திறக்கப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்ததே. எமது எதிர்காலச் சந்ததியின் நன்மை கருதி பாடசாலைகள், பல்கலைக்கழகங்களுக்கு சமீபமாக உள்ள மதுபானச் சாலைகள் உடனடியாக மூடப்படுவதற்கு தகுந்த அக்கறை செலுத்த வேண்டும்.

இவ்விடயங்கள் தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றம் கௌரவ ஜனாதிபதி அவர்கட்கும், பிரதம மந்திரி அவர்கட்கும், மீள்குடியேற்ற புனர்நிர்மாண இந்து சமய விவகார அமைச்சர் அவர்கட்கும் அவசரக் கடிதங்கள் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பௌத்த மதம் மது அருந்துதலை பஞ்சமாபாதகங்களில் ஒன்றாக வெறுக்கிறது. இந்து மதம் ஒழுக்கவியலை உலகத்திற்கு உணர்த்தியது.

இத்தகைய வரலாற்று மதங்கள் எக்காலத்திலும் மதுகலாசாரத்தை ஏற்காது என்பது உறுதி. எவ்வகையில் மதுகலாசாரத்தை நிறுத்தலாமோ அதற்கு எமது சமய நிறுவனங்களும் அரசாங்கமும் இணைந்து செயற்பட்டு வெற்றி காண வேண்டும்.

## மாத்தளை சிந்தாகட்டி குமரமலை அருள்மிகு குமரப்பெருமான் ஆலய மகா கும்பாபிஷேக சிறப்பிதழ்



இலங்கை மணித்தீவிலுள்ள மத்திய மாகாணத்தில் நீர்வளமும் நிலவளமும் நிறைந்து, பல மலைகளால் சூழப்பட்டதும், புராதன திருக்கோயில்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டதுமான மாத்தளை மாநகரிலுள்ள சிந்தாகட்டி எனும் திருநாமம் கொண்ட குமரமலைமீது வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ வள்ளிதேவசேனா சமேத குமரப்பெருமான் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழாவையொட்டி மலர்ந்துள்ள இந்து ஒளி சிறப்பிதழை அருள்மிகு குமரப்பெருமானின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி!

**அடுத்த சுடர்**

**மன்மத வருடம் கார்த்திகை**

### வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க! வாழ்கசீ ரடியா ரெல்லாம்!!


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்ற
இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு
மாத்தளை அருள்மிகு குமரப்பெருமான் மகா கும்பாபிஷேக சிறப்பிதழ்
மன்மத வருடம் ஐப்பசி (25.10 .2015)



ஆசிரியர் குழு :
திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
திரு. த. மனோகரன்
திரு. அ. கனகசூரியர்



| | |
|---|---|
| ஒரு பிரதியின் விலை | ரூபா 50.00 |
| வருடாந்தச் சந்தா (உள்நாடு) | ரூபா 300.00 (தபால் செலவு தனி) |
| வருடாந்தச் சந்தா (வெளிநாடு) | US டொலர் 15 |



**அகில இலங்கை இந்து மாமன்றம்**
A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி : 0112434990, தொலைநகல் : 0112344720



இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.



# HINDU OLI

**Publication of**
**HINDU RESEARCH CENTRE OF ALL CEYLON HINDU CONGRESS**
Matale Arulmihu Murugan Temple Maha Kumbabisheha
Special Issue - 25.10.2015



**Editorial Board :**
Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Dr. Muthiah Kathirgamanathan
Dr. M. Balakailasanatha Sarma
Mr. D. Manoharan
Mr. A. Kanagasooriar



| | |
|---|---|
| Price | Rs. 50.00 |
| Annual Subscription (Inland) | Rs. 300.00 (Excluding Postage) |
| Annual Subscription (Foreign) | U. S. $ 15 (Including Postage) |



**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo - 2, Sri Lanka.
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720



**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**



**ISSN : 2012 - 9645**



## ஆன்மீகச்சுடரின் அருள் மடல்



# தனித்துவமான மாத்தளை மாநகர்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலய மகோற்சவத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். ஆலய வழிபாடுகளில் கலந்து கொண்டதோடு அங்கு கூடியிருந்த அடியவர்களுக்கு சிறிய உரையொன்றை ஆற்றும் பாக்கியத்தையும் அம்பாள் அடியேனுக்கு அருளினார். திருவிழா நிறைவுற்ற பின்னர் அங்கு எம்மை சந்தித்த சில வர்த்தகப் பெருமக்கள் எம்மை ஓர் மலைமீதில் அமைந்துள்ள ஒரு முருகன் கோவிலுக்கு அழைத்துச் சென்றனர். அப்பொழுது அந்த முருகன் ஆலயத்தில் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அந்த மலையில் இருந்து பார்க்கும் பொழுது மாத்தளை மாநகர் முழுவதையுமே காணக்கூடியதாக இருந்தது. உமை மைந்தனாகிய குமரன் குன்றின்மேல் இருந்து மாத்தளை மாநகரைப் பார்த்து அருள்பாலிப்பதைக் கண்டு பூரிப்படைந்தோம். இப்போது இந்த முருகன் ஆலய கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.



எம்மை இந்த ஆலயத்திற்கு அழைத்துச்சென்ற மாத்தளை வர்த்தகர்களாகிய அன்பர்கள் தாங்கள் சுபீட்ஷம் என்ற பெயரில் ஒரு அறக் கட்டளையை நிறுவி மாத்தளையை அண்மித்துள்ள தோட்டக் கிராமங்கள் பலவற்றில் அறநெறிப் பாடசாலைகளை அமைத்து, மாணவர்களுக்கு சமயக் கல்வியோடு பல சமூகப் பணிகளையும் ஆற்றி வருவதாக கூறினர். அடியேனை, மாத்தளைக்கு மீண்டும் வரும் போது இந்த தோட்டப் பாடசாலைகளுக்கும் வருகை தருமாறு அழைத்தார்கள்.

கடந்த வருடம் மீண்டும் அடியேன் மாத்தளைக்கு சென்று மூன்று நாட்கள் அங்கு தங்கி அந்த சுபீட்ஷம் அறக்கட்டளை அங்கத்தவர்களோடு பல அறநெறிப் பாடசாலைகளுக்கு சென்று மாணவர்களையும், ஆசிரியர்களையும் சந்தித்தோம். மாத்தளை மாநகரைச் சேர்ந்த வர்த்தகப் பெருமக்கள் இந்த பின்தங்கிய தோட்டப்புற கிராமங்களுக்கு செய்யும் சமூகநலப் பணிகளைப் பார்த்து பூரிப்படைந்தோம். அந்த வகையில் மாத்தளை முத்துமாரி அம்பாள் ஆலயம் ஒரு வழிபாட்டு தலமாக மட்டும் செயற்படாமல் பல சமூகநலப் பணிகளையும் ஆற்றுவது போற்றுதற்குரியது.

மாத்தளை மாபெரும் சித்தராகிய பரமகுரு சுவாமிகள் வாழ்ந்த புண்ணிய பூமி. இங்கு உள்ள ஆலயங்களும், ஆலய தர்மகர்த்தாக்களும், வர்த்தகப் பெருமக்களுமாக சேர்ந்து பல சமூகநலப் பணிகளை வறிய மக்களுக்கு குறிப்பாக மாணவ சமூகத்திற்கு செய்து வருகின்றனர். இவர்களின் தர்ம கைங்கரியங்கள் ஈழத்தில் உள்ள எல்லா நகரங்களுக்கும் ஒரு முன்மாதிரியாக அமைந்துள்ளது.

மலையகத்தில் வாழும் இந்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டியது எமது தலையாய கடமையாகும். அந்நியர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட எம் தமிழ்ச்சமூகம் கடந்த மூன்று நூற்றாண்டுகளாக படும் துயர் எல்லையில்லாதது. பெரும்பாலும் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் சைவ சமயத்தவர்களே. சைவமக்கள் பூர்வீகமாக வாழும் மலையகத்தில் மாத்தளை நகர் கலங்கரை விளக்கமாக விளங்குகிறது. முத்துமாரி அம்பாளின் பேரருளும், தொழிலதிபர்களின் நன்முயற்சியும் மேலும் பல திட்டங்களை உருவாக்கி மலையக மக்களை காப்பாற்ற வேண்டும். மலையக மக்களின் வாழ்வாதார பிரச்சனைகளில் ஒன்றாக விளங்குகின்ற வீடற்ற நிலை விரைவில் மாறவேண்டும். நாட்டில் ஒவ்வொரு பகுதிகளிலும் வீடற்றவர்களுக்கு வீட்டுத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு வீடுகள் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் இரத்தம் உறைய இந்நாட்டின் தேசிய வருவாய்க்காக உழைத்த மலையகமக்களை தொடர்ந்தும் ஆதரவற்றவர்களாக கைவிடமுடியுமா?

மலையகத்தில் மதமாற்றங்களும் மதுவுக்கு அடிமையாகும் துன்பமும் தொடர்ந்து கொண்டிருப்பதாக கேள்விப் படுகிறோம். மிகவும் கவலையாக இருக்கிறது. மக்களுக்கு உதவுவதாக சொல்லிக்கொண்டு அவர்களின் பூர்வீக மதத்தை மாற்றுவது நாகரீகமான செயலல்ல. ஏழைத் தொழிலாளர்கள் மதுப்பழக்கத்தினால் பல துன்பங்களை எதிர்நோக்கியுள்ளனர். எனவே சுபீட்ஷம் போன்ற அமைப்புக்கள் அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பித்து இளம் சந்ததியினர் மத்தியில் கல்வியை வளர்த்தெடுத்து வருவது மிகவும் பாராட்டுக்குரியது. மலையகச் சூழல் மாசு படாமல் காப்பதற்கு அனைத்து சைவக் கோயில்களும், இந்து நிறுவனங்களும் நல்ல திட்டங்களை உருவாக்க வேண்டும். அகில இலங்கை இந்து மாமன்றம் மலையக மக்களின் சமய ஆர்வத்தை காப்பதில் அதிக அக்கறை காட்டிவருவது பாராட்டுக்குரியது. எதிர்காலத்தில் மலையகத்தில் சைவமக்களை விழிப்படையச் செய்வோமாக!

**ரிஷி தொண்டுநாதன்**

# மாமன்றத் தலைமையகத்திலிருந்து.....

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கங்கள் கௌரவ உறுப்பினர்கள், சிறப்பு உறுப்பினர்கள் மற்றும் முகாமைப் பேரவையிலிருக்கும் பேராளர்கள் யாவருக்கும் மாமன்றத்தின் 60வது ஆண்டு சேவை நிறைவு காணுகின்ற இக் காலகட்டத்தில் மீண்டும் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றோம்.

இந்நாட்டின் உச்ச நிறுவனமாக இலங்கை வாழ் இந்து மக்களின் குரலாக மாமன்றம் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றமை மேலும் சிறப்புற உங்கள் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பும் பங்களிப்பும் மாமன்றத்திற்குத் தேவை.

இந்த ஆண்டில் மாமன்றத்துடன் இணைந்து செயற்பட திட்டங்கள் தீட்டி எங்களுக்கு சமர்ப்பிக்குமாறு அழைப்பு விடுத்திருந்தோம். ஒருசில சங்கங்கள் எங்களுடன் இணைந்து செயற்பட திட்டங்கள் தந்து நடைமுறைப்படுத்தி வருகின்றன. குறிப்பாக கொழும்பு மகளிர் இந்து மன்றம் ஐப்பசி மாதம் 14ஆம் திகதி (31-10-2015) சனிக்கிழமையன்று மாமன்றத்துடன் இணைந்து **"யாழ் அங்காடி"** நிகழ்வினை நடத்த ஒழுங்கு செய்துள்ளது. இந்நிகழ்விலிருந்து கிடைக்கும் நிதி வலிகாமம் நலன்புரி நிலையங்களில் வாழும் இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவி வழங்கப் பயன்படுத்தப்படும். அடுத்த மார்கழி அல்லது தை மாதத்தில் மாமன்றத்துடன் இணைந்து ஒரு நாட்டிய நாடக நிகழ்வையும் நடத்த மகளிர் இந்து மன்றம் முன்வந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நாவலர் ஆன்மீக எழுச்சி கருத்தரங்கையும் சிவதொண்டர் மாநாட்டையும் மன்மத வருடம் கார்த்திகைத் திங்கள் 19ஆம் 20ஆம் திகதிகளில் (05.12.2015, 06.12.2015) மாமன்றத்துடன் இணைந்து நடத்த மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை முன்வந்துள்ளது. ஏனைய அங்கத்துவ சங்கங்களையும் தங்களின் திட்டங்களையும் முன்மொழிவுகளையும் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் நடந்த இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் மேலும் சிறப்புக் கட்டுரைகளையும் உள்ளடக்கிய மாமன்றத்தின் 60வது ஆண்டு சிறப்பு மலர் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இம்மலரில் மாமன்றத்தின் அங்கத்துவ சங்கம் ஒவ்வொன்றினதும் வரலாற்றையும் முகாமைப் பேரவை உறுப்பினர்களின் புகைப்படங்களையும் வெளியிட இருக்கின்றோம். அவற்றை கூடிய விரைவில் அனுப்பி வைக்குமாறு உங்களை வேண்டுகின்றோம்.

ஒவ்வோர் அங்கத்துவ சங்கமும் ஒரு சிவதொண்டர் அணியை நிறுவி இளைஞர் சமுதாயத்தை ஆன்மீகப்பணியில் ஈடுபடுத்த வழிவகுக்க வேண்டும். அதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் இக்காலகட்டத்தில் முயற்சிகள் எடுக்க வேண்டும். அதற்கு உரிய ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்க நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

கொழும்பு மாநகரில் அடுத்த தைத் திங்கள் 22, 23, 24 ஆகிய நாட்களில் (2016 பெப்ரவரி 5ஆம் 6ஆம் 7ஆம் திகதிகளில்) சர்வதேச இந்துப் பிரமுகர்கள் பங்கு பற்றுகின்ற ஒரு சிறப்பு மாநாடு மாமன்றத்தின் 60வது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு இடம்பெறும். இந்நிகழ்வில் நீங்கள் யாவரும் பங்குபற்ற வேண்டும். இவ்விழாவில் உங்களின் சிவதொண்டர் அணிகளும் பங்குபற்றினால் சிறப்பாக இருக்கும். 60வது ஆண்டு நிறைவையொட்டி இலங்கை வாழ் இந்து மக்களுக்கு ஆதரவும் சேவையும் வழங்கிய (இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கும்) செம்மல்களை இம்மாநாட்டில் கௌரவிக்க விரும்புகின்றோம். அப்படிக் கௌரவிக்கப்பட வேண்டியவர்களின் பெயர்களை முன்மொழிந்து அதற்கு ஆதரவான விதந்துரைப்புக்களையும் எழுத்து மூலம் ஒரு மாதத்திற்குள் அனுப்புமாறும் உங்கள் எல்லோரையும் வேண்டுகின்றோம்.

வணக்கம்

இறைபணியில்

**கந்தையா நீலகண்டன்**
தலைவர்

**முத்தையா கதிர்காமநாதன்**
பொதுச் செயலாளர்



# மாத்தளை சிந்தாகட்டி குமரமலை அருள்மிகு குமரப்பெருமான் ஆலயம்

சு. புண்ணியசீலன்

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்றும், குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வமாகக் குமரனை வழிபட்டு வந்தனர் என்றும் வரலாறுகள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன. அந்த வகையில் மத்திய மலையகத்தின் எழில்மிகு மாத்தளையில், மலர்ந்த அழகிய தாமரை இதழ்கள்போல் சூழ்ந்த மலைத்தொடர்களின் மத்தியில் இயற்கை எழில் கொஞ்சும் குமரமலையின் உச்சியில் இருந்து அருளாட்சி செய்து கொண்டிருக்கும் குமரக் கடவுளின் சிந்தாகட்டி குமரமலை ஸ்ரீ குமரப்பெருமான் ஆலயம் விளங்குகின்றது.

ஆலயத்தின் வடக்குத் திசையிலே, இயற்கையாக அமையப் பெற்றிருக்கின்ற மலைத்தொடரில் சயன நிலையில் காட்சி தருகின்ற பிரமாண்டமான ஆஞ்சநேயரைத் தரிசிக்க முடியும். பொருத்தமான இடத்தில் இயற்கையாக அமைந்திருப்பதே அதன் தனிச்சிறப்பு. உலகில் எங்கும் காணமுடியாத அதிசயமான அற்புதத் தோற்றமாக இதைக் கொள்ளலாம்.

பழமையும் பெருமையுமுடையதான இயற்கை வனப்புமிக்கச் சூழலில் அமையப்பெற்ற இத்தலத்தின்கண் இயற்கையாகவே விருட்சத்தில் விநாயகர் திருவுருவம் அமையப்பெற்றுள்ளமை புதுமையான சிறப்பம்சமாகும்.

இயற்கையாகத் தோன்றிய விநாயகர் திருவுருவமும், ஆஞ்சநேயர் மலை என்பவற்றின் சூழலில் குமரக்கடவுளின் ஆலயம் அழகுற அமைக்கப்பட்டிருப்பதும் உண்மையிலேயே வியக்கத்தக்க பெரும்பேறாகும். இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம், தல விருட்சம் ஆகிய ஆலயப் பண்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. ஸ்ரீ குமரப்பெருமான் மூர்த்தியாக இருந்து இந்த ஆலயத்திலே அருளாசி வழங்கிக்கொண்டிருக்கின்றார். மகாவலி கங்கைக் கரையிலே தீர்த்தமும், மயிலாடுமரம் தல விருட்சமாக இருப்பதும் எம்பெருமான் ஆலயத்தின் சிறப்பம்சமாகும்.

வழிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் சிற்ப வேலைப்பாடுகளுடன் இணைந்த சித்திரவேலைப்பாடுடன் கற்கலவையால் செதுக்கப்பட்ட சித்திரத்தேர் சிலையாக அமைக்கப்பட்டுள்ளமை ஆலயத்தின் எழிலை மேலும் மெருகூட்டி நிற்கின்றது. இவ்வாலயம் ஒரு உள்வீதிப் பிரகாரத்தையும், இரண்டு வெளிவீதிப் பிரகாரங்களையும் கொண்டமைந்து விளங்குவது குமரனின் குறிஞ்சி மலைச் சூழலுக்கு ஏற்றம் கொடுப்பதாக அமைந்துள்ளது.

தெற்குத் திசையில் மாத்தளை நகரத்தை நோக்கிய வண்ணம், ஆலயம் அமைந்துள்ள மலையடிவாரத்திலிருந்து படியேறிச் செல்வதற்காகப் பக்தர்களின் நலன்கருதி 306 படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றமை பெருமைக்குரிய செயற்பாடாகும். இலங்கையில் ஆங்கிலேயரால் நக்கிளஸ் என்று பெயர் சூட்டப்பட்ட மலைத்தொடரின் எழில்மிகு காட்சியை இவ்வாலயத்தில் இருந்தவாறே எளிமையாகப் பார்த்து இரசிக்கக் கூடியதாகவும், குறிஞ்சி நிலப்பரப்பின் அழகுத் தோற்றத்தையும் கண்ணுக்கெட்டிய தூரம்வரை பார்த்து மகிழலாம்.

குமரப்பெருமானின் ஆலயம் புதுமையான கட்டமைப்புடன் அழகுறத் தோற்றமளிக்கின்றது. இவ்வாலயத்தின் திருப்பணிக்கு இலங்கையின் நாற்றிசைகளிலும் வாழுகின்ற முருகன் அடியார்கள் மனமுவந்து அருட்கொடைகள் வழங்கியுள்ளார்கள். குமரன் எழுந்தருளியிருக்கும் மலை சூழ்ந்துள்ள சூழல் ரம்மியமானதாக அமைந்திருப்பதும் அடியார்களுக்கு உந்துசக்தியைக் கொடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கும் என்று நம்பலாம்.

பெருமானின் மகோற்சவ காலங்களில் காவடித் திருவிழாவும், தீ மிதிப்பும் இடம்பெற்று வருகின்றமை வழமையாகும். மேலும் ஒவ்வொரு மாதத்திலும் வரும் பௌர்ணமி தினத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து அடியார்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்குவார்கள். ஆலய நிர்வாக சபையினர் சிறப்பான முறையில் ஆலய பரிபாலனத்தை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்துக்களும், பௌத்தர்களும் இவ்வாலயத்தைத் தரிசிக்க வருவது, சமூகங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டுக்கு அடித்தளம் அமைப்பதாகவும் உள்ளது. சமூக மேம்பாட்டிற்கு இவ்வாலயம் பெரும்பணியாற்றிவருவதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயம் சமூகத்துடன் ஒன்றியதாக, பல சமூக நலப்பணிகளையும் முன்னெடுத்து வருவது போற்றுவதற்குரியது ஆகும். ஆலயம் சமய, சமூக, கல்விப்பணிகளையும் மேற்கொண்டு வருவதுடன், இளஞ்சிறார்களுக்கு சமய அறிவையூட்டும் நோக்குடன் அறநெறிப் பாடசாலையையும் நடத்தி வருவதுடன், மாணவர்களுக்கென தலயாத்திரைகளையும் ஒழுங்கு செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். கற்றலில் ஆர்வம்காட்டும் வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டத்தையும் செயற்படுத்தி வருகின்றமை உண்மையிலேயே சிறப்புமிகு செயற்பாடாகும். ஆலயங்கள் சமூகத்துடன் தொடர்புகொண்டு இருப்பது போற்றுவதற்குரியதாகும். ஸ்ரீவள்ளிதேவசேனா சமேத குமரப்பெருமான் அருட்கடாட்சம் கிடைக்கவேண்டும் எனப் பிரார்த்திப்போம்.

"எல்லோரும் இன்புற்றிருப்பதே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே!"

# குமரமலை திருக்குமரன் நமக்கு வளமான வாழ்வளிக்கத் தோன்றிவிட்டான்

த. மனோகரன்

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தின் தலைநகரான மாத்தளை மாநகரில் உயர் மலைக்குன்றின் உச்சியிலே கோயில் கொண்டுள்ள அழகன் திருக்குமரன் திருக்கோயில் குடமுழுக்கு நடைபெறுவது உள்ளத்திற்கு உவகை தருவதுடன், நாமிருக்கப் பயமேன் அஞ்சேல் என்று அபயமளிக்கும் காப்பும் நமக்குக் கிட்டும் என்ற நம்பிக்கையையும் தருகின்றது.



சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பண்ணாகம் என்ற தமிழ்ப் பெயரால் அழைக்கப்பட்ட இப்பிரதேசத்தை எல்லாள மாமன்னன் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு நீதிநெறி தவறாது ஆட்சிசெய்த காலத்தில் ஆதித்தன் என்ற தமிழரசன் ஆண்டதாக வரலாற்றுக் குறிப்புகளுள்ளன. இதன்மூலம் இப்பகுதியில் ஆதியில் தமிழ்மக்கள் வாழ்ந்தமையும், இந்து சமயம் நிலை பெற்றிருந்தமையும் வெளிப்படுகின்றது.

இந்நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட காலத்தில் அதாவது 1830 ஆம் ஆண்டளவில் தென்னிந்தியாவிலிருந்து பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக வந்த தொழிலாளர்களால் வேல் மற்றும் சூலாயுதம் ஆகிய புனித சின்னங்கள் வைத்து வழிபாடு தொடங்கப்பட்ட இடத்திலேயே இன்று குமரப் பெருமான் திருக்கோயில் நிர்மாணிக்கப்பட்டு குடமுழுக்கு நடைபெறுவது சிறப்புக்குரியது.

இன்று மாத்தளை மாநகரின் எல்லைக்குள் உள்ள இவ்வாலயப் பகுதியான களுதாவளை அன்று இறப்பர் தோட்டப் பகுதியிலடங்கியிருந்தது. இன்று களுதாவளைப்பகுதி தமிழ் மக்கள் செறிந்து வாழும் நகர்ப்பகுதியாக மாறியுள்ளது. இலங்கையில் மட்டுமல்ல கடல் கடந்த நாடுகளிலும் பிரசித்தி பெற்ற மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் மற்றும் குடுகங்கை ஏமுமுகக் காளியம்மன் ஆலயம் ஆகியவை மாத்தளைக்கு சிறப்பளிக்கும் இந்துத் திருத்தலங்களாகும். இவற்றுடன் சிந்தாகட்டி குமரமலை முருகன் ஆலயமும் இணைந்துள்ளமை பூரிப்பைத்தருகிறது.

சூழவும் மலைகள் தாமரைப் பூவின் இதழ்கள் விரிந்திருப்பது போன்ற தோற்றத்தில் திகழ மத்தியிலே குமரமலையானது பூவின் விரியாத இதழ்கள் கூம்பி உயர்ந்திருப்பது போன்ற தோற்றத்தில் காணப்படுகிறது. இக்கோயில் உச்சியிலிருந்து நோக்கும்போது தொலைவில் ஆஞ்சநேயர் சயனத்திலுள்ள நிலையையொத்த காட்சியுடன் ஆஞ்சநேயர் மலை காணப்படுகின்றது.

உயர்ந்த மலை உச்சியிலே அமைந்துள்ள திருக்கோயிலைச் சென்று தரிக்க வசதியாக முந்நூற்றி ஆறு (306) படிகள் அமைக்கப்பட்டுள்ளன. வாகனத்தில் செல்லவும் பாதைவழியுண்டு. மாத்தளை மாநகரில் எங்கிருந்து நோக்கினாலும் குமரமலையில் குடிகொண்டுள்ள திருக்குமரன் திருக்கோயிலை காணலாம், வழிபடலாம், மகிழ்வுறலாம்.

அதிகாலையிலேயே இவ்வாலயத்திலிருந்து ஒலிக்கும் சுப்பிரபாதமானது மாத்தளை மாநகரைப் புனிதப்படுத்தி எழுச்சியும், மலர்ச்சியுமுற வைக்கின்றது என்றால் அது மிகையல்ல. அதேபோல் ஆலயத்திலிருந்து ஒலிக்கும் மணியின் நாதமும் முருகப்பெருமான் தன்னை நம்பும் பக்தர்களுக்கு நாமிருக்கப் பயமேன், அஞ்சேல், எதிர்காலத்தைத் துணிவுடன் எதிர்கொள்ளுங்கள் என்று உற்சாக மூட்டுவதாகவும் கொள்ளலாம்.

இவ்வாலயத்தில் பல அற்புதங்களும் நிகழ்ந் துள்ளன. அதிலொன்று வரட்சி நிலவிய நாட்களில் ஒரு நாளிலேயே இன்றைய ஆலய நிர்மாணத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அவ்வேளை இவ்வாலயம் அமைந்துள்ள இரண்டு ஏக்கர் காணியில் மட்டும் ஐந்து நிமிடங்கள் மழை பெய்துள்ளது. இது குமரப் பெருமானின் அற்புதமாகும். நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இவ்வாலயக் காணியில் நாகமொன்று குடியிருந்து புனித சின்னங்களைக் காத்து வருவதாகவும் அறியப்படுகிறது.

மூல மூர்த்தியாக முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ள இவ்வாலயத்தில் கருவறையுடன், அர்த்தமண்டபம், மகா மண்டபம், வசந்தமண்டபம், சபாமண்டபம் என்பவற்றுடன் மணிக்கோபுரமும் அமையப்பெற்றுள்ளது. கோபுரம் மூன்று தளங்களைக் கொண்டதாகவுள்ளது. பரிவார மூர்த்திகளுக்காக பீடங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆலய நிர்வாகத்தினர் திருக்கோயில் பணிகளுடன் பல சமுதாயப் பணிகளையும் ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

ஆலயம் அமைந்த குன்றின் ஒருபுறம் சித்திரத்தேரின் அமைப்பில் கல்லாலான தேரொன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் வீற்றிருந்து அருள்பொழியும் விநாயகப் பெருமான் போவோர், வருவோர் அனைவருக்கும் அருளளிக்கும் வழிப்பிள்ளையார் என்று போற்றப்படுகிறது.

மாத்தளை மாநகரம் அழகு பொருந்தியது. அதன் வனப்புக்கு மேலும் மெருகூட்டுபவையாகவும், பிரபலப் படுத்துபவையாகவும் இங்குள்ள இந்துத் திருக்கோயில்கள் விளங்குகின்றன. அதற்கு மேலும் பொலிவூட்டுவதாக சிந்தாகட்டி குமரமலையில் கண்கவர் வேலைப்பாடுகளுடன் அமைந்துவிட்ட திருக்குமரன் திருக்கோயில் இடம் பெறுகின்றது.

கதிர்காமம், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், நல்லூர், வெருகல், திருக்கோயில், ஜிந்துப்பிட்டி என்று பல்வேறு இடங்களில் கோயில்கொண்டுள்ள முருகன் திருத்தலங்கள் வரிசையில் மாத்தளை சிந்தாகட்டி குமரமலை திருமுருகன் ஆலயமும் இடம் பெற்றுவிட்டது.

சூரனை அடக்கியருள்தந்த முருகன் இன்று வேல் கொண்டு துயர்போக்க மீண்டும் வந்துவிட்டான். இனி அஞ்சும் வாழ்வும் இல்லை. அச்சமும், துன்பமும் இல்லை. வளமான எதிர்காலம் வேலேந்திய குமரன் திருக்கரங்களிலேயே உள்ளது என்று நம்புவோம். நலன் பெறுவோம். நம்பினோர் கெடுவதில்லை. அது நான்குமறை தீர்ப்பு அல்லவா!!



ஓம் சக்தி

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் - மாத்தளை

## ARULMIGU SRI MUTHUMARI AMMAN THEVASTHANAM - MATALE

## අරුල්මිගු ශ්‍රී මුත්තුමාරියම්මන් දේවස්ථානය - මාතලේ

Tel : 066-2222481. Fax : 066-2222320 E-mail : smtemple@sltnet-lk

### வாழ்த்து மடல்

எமது சமூக சமுதாய சமய வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றி வரும் இந்து மாமன்றத்தின் மகத்தான சேவையை என்றும் மறக்க முடியாது.

எமது சமூக வளர்ச்சிக்காகப் பல வகையில் சேவையாற்றி வருவதுடன் சமய சம்பந்தமான நல்ல பல அறிவு சார்ந்த விடயங்களைத் தொகுத்து இளையோர் முதல் முதியோர் வரை படித்துப் பயன்பெறக்கூடிய வகையில் வெளியிட்டு வரும் "இந்து ஒளி" எனும் சஞ்சிகை அனைவருக்கும் ஒரு அறிவுக் களஞ்சியமாகத் திகழ்வது ஒரு பெருமைக்குரிய விடயமாகும்.

மேற்படி அறிவுச் சஞ்சிகை மேலும் பல நல்ல அறிவு சார்ந்த செய்திகளுடன் தொடர்ந்து வெளிவரவும், மாமன்றத்தின் செயற்பாடுகள் மிகச்சிறப்பான முறையில் முன்னோக்கிச் செல்லவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தியாகராஜா செட்டியார் விக்னேஸ்வரன்**
தலைவர், அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், மாத்தளை

# மாத்தளை
# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வரலாறு

**கலாபூஷணம் மாத்தளை ராஜ்சிவா**

சக்தி வழிபாடு என்பது தொன்று தொட்டு நிலவி வரும் வழிபாட்டு முறை, அதன் பல்வேறு வகைகளில் ஒன்றுதான் மாரியம்மன் வழிபாடு. நமது தெய்வங்களுள் மாரியம்மன் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவள். நமது தாயைப் போல் நம் குற்றங்களையெல்லாம் மன்னித்து குறைகளையெல்லாம் போக்கி பொறுத்தருளி அளவற்ற அன்பைப் பொழியும் தெய்வமாகும்.



தமிழக மக்கள் எங்கெங்கு புலம் பெயர்ந்து சென்றார்களோ அங்கெல்லாம் மாரியம்மனையும் உடன் கூட்டிக் கொண்டே சென்றிருக்கிறார்கள். இலங்கைத் திருநாட்டில் எங்கள் மாத்தளைதான் மலையகத்தின் தலைவாயில். தமிழகக் கரையிலிருந்து படகுகள் மூலம் கடலை கடந்து மன்னார் இறங்கு துறையை அடைந்து துன்ப துயரங்களோடு கால்நடையாக உயிர் தப்பி வந்தவர்களில் சிலர் மாத்தளை தலைவாயிலை அடைந்தனர்.

நான்கு புறமும் கோட்டை அரண்களென நிற்கும் பெரும் மலைத்தொடர்கள், இம் மலைத்தொடர்களிலிருந்து சுரந்தோடும், சிற்றாறுகள், நெடிய மரங்களைக் கொண்ட கானகங்கள், அத்தோடு வாழை, கமுகு, தென்னை மற்றும் வாசனைத் திரவியங்கள் கொண்ட அழகான பிரதேசமாக தங்கியிருக்கும் தலைவாயிலான மாத்தளை நம் முன்னோருக்கு புகழிடமாக அபயம் கொடுத்து அருள் வழங்கிய புண்ணிய இடமாகும்.

மலையகத்தின் எங்கள் மூத்த குடியினருக்கு மட்டும் அபயம் கொடுத்து அருள் வழங்கியது மட்டுமல்லாமல் புகலிடம் தேடி வந்தோரின் காப்பரணாகத் திகழ்ந்திருக்கின்றது. அனுராதபுர ராஜ்ஜியத்தை விட்டு வந்த வலகம்பாகு மன்னன் மாத்தளையிலே புகலிடம் அடைந்திருக்கிறான். இலங்கையின் ராஜதானிகளுக்கு வாரிசுரிமை கோரியவர்களும் ராஜ்ஜியத்தின் பெரும் அதிகாரிகளும் மாத்தளையிலேயே தங்கள் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டிருந்தார்கள். அது மட்டுமல்ல 12 ஆம் நூற்றாண்டில் கஜபாகு மன்னனும் ஸ்ரீ வல்லபனும் தங்களின் நீதி விசாரணைகளை மாத்தளை மண்ணிலேயே நடத்தியிருக்கின்றனர்.

புகலிடம் தேடி வந்தோரின் காப்பரணாகத் திகழ்ந்த மாத்தளை மண்ணில் கொடூரங்கள் நிகழ்ந்திருக்கின்றன. சதித்திட்டம் தீட்டியதாகக் கருதப்படும் கண்டி மன்னனால் எகலப்பொலவின் மனைவியும் பிள்ளைகளும் கடைசிக் கண்டி மன்னனால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். புலமைமிக்க ஞானிகள் பல்வேறு ஆய்வுகள் நடத்திய ஞானபூமி மாத்தளையாகும். சரித்திர காலத்திலிருந்தே சிறந்த மையமாக மாத்தளை மாநகர் விளங்குகின்றது எனலாம். இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட மலையகத்தின் தலைவாசலாக விளங்கும் மாத்தளை மாநகரில் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான திருக்கோயில் தலைநகரிலிருந்து 90 ஆவது மைல் தொலை தூரத்திலும், கண்டியிலிருந்து 16 மைல் தொலை தூரத்திலும், நான்கு பக்கமும் சூழப்பட்டு அருவிகள் கொட்டும் அழகுமலைக் குன்றுகளுக்கு

கிழக்கேயும், மகாவலி கங்கையின் தீர்த்தக் கரைக்கு மேற்கிலும் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள குறிஞ்சி முல்லை, மருதம் எனும் மூவகை நிலங்களையும் உள்ளடக்கிய புண்ணிய பூமியாக தேயிலையும், ரப்பரும், செந்நெல்லும் முக்கனிகளும் தென்னை, கமுகு, கொக்கோ, கோப்பி, மிளகு, மூங்கில் போன்றவைகளும் காணப்படும் சோலைகளுக்கு மத்தியில் அருள் மழை பொழியும் உலகத்து நாயகி அன்னை பராசக்தியின் திருத்தலம் அமையப்பெற்றிருக்கிறது எனலாம்.

**ஆலய வரலாறு**

சுருக்கமாகச் சொல்வதானால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் பண்ணகாமம் என்று முன்னோர்களால் அழைக்கப்பட்ட இம்மாத்தளையில் ஒரு சிறிய தங்குமிடம் ஒன்றிருந்தது. நெடுந்தூரம் கால்நடையாக வருபவர்களும் மாட்டு வண்டிகளில் பயணம் செய்பவர்களும் இம்மடத்தில் தங்கிச் செல்வது வழக்கமாக இருந்தது. தமிழகத்திலிருந்து அழைத்து வரப்பட்ட எமது மூதாதையர்கள் மன்னார் இறங்குதுறையில் இறக்கப்பட்டு அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் அனுராதபுரம் வழியாக மாத்தளை நுழைவாயிலை அடைந்திருக்கிறார்கள். அப்படி வந்த ஒரு சிலர் மாத்தளையிலே தஞ்சமானார்கள். அப்படித் தஞ்சமடைந்தவர்கள் ஓர் வில்வ மரத்தடியில் அம்பிகையாக ஒரு கற்சிலையை வைத்து தினசரி விளக்கேற்றி அன்னையைத் தரிசித்து வந்தார்கள். இத்தருணத்தில் மடத்தில் தங்கிச் செல்லும் வழிப்போக்கர்களும் உதவி செய்த வந்ததுடன் அம்பிகையை மிக பக்தியுடன் வணங்கி தங்களுக்கு தேவையானவற்றைக் கேட்டு நேர்த்திகளை வைத்துச் செல்வதுண்டு.

அப்படி அம்பிகையிடம் முன் வைக்கும் வேண்டுதல்கள் நிறைவேறுவதை உணர்ந்த பக்தர்கள் முத்துமாரியம்மனுக்கு நன்கொடைகளை வழங்கி ஆலயத்தைச் சிறிதுசிறிதாக பெருப்பித்தார்கள். 1850 களில் சிறு குடிலாக இருந்த ஆலயம் இன்று 108 அடி நவதள, நவகலச இராஜகோபுரத்தைக் கொண்ட உலகப் பிரசித்தி பெற்ற ஒரு ஆலயமாகத் திகழ்கின்றது. இவ்வாலய வளர்ச்சி கருதி திரு. சுப்பாபிள்ளை அவர்களால் வழங்கப்பட்ட இக்காணியின் உறுதி 1852 ஆம் ஆண்டில் எழுதப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புக்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

1958 ஆம் ஆண்டில் மிகப் பழமையான கட்டடங்கள் அப்புறப்படுத்தப்பட்டு ஆலயம் விஸ்தரிக்கப்பட்டது. 1960 ஆம் ஆண்டு மூலஸ்தான கோபுரம் அமைக்கப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டதுடன் 1968 ஆம் ஆண்டு கொடிக்கம்பம் நிர்மாணிக்கப்பட்டது. 1971 இல் நடராஜப் பெருமான் கோயில், 1973 இல் மேற்கு வாசல் இராஜகோபுரம், மணிக்கோபுரம் போன்றவை் நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1992 ஆம் ஆண்டு வசந்த மண்டபம் திருத்தியமைக்கப்பட்டு புதிய விமானம் கட்டப்பட்டதுடன், இதே வருடம் தீர்த்தக் கேணியும் கட்டப்பட்டது.

ஆரம்ப காலத்தில் வைகாசி விசாகத் திருவிழாவை அதிவிசேஷமாக நடாத்தி வந்தார்கள். இத்திருவிழா இப்போதும் நடைபெற்று வருவதோடு, மாசிமக மகோற்சவத் தேர்த்திருவிழா மிக விமரிசையாக நடாத்தப்பட்டு வருகிறது. ஆரம்ப காலத்தில் அம்பிகையைப் பிரதிஷ்டை செய்து வழிபடத் தொடங்கிய வில்வமரம் இன்றும் தலவிருட்சமாக விளங்குகிறது.

இத்தல விருட்சத்துடன் சிறுகுடிலாக இருந்த ஆலயத்தை புதுப்பித்ததுடன் இதன் பக்கத்திலிருந்த நிலங்களை வாங்கி 1852 ஆம் ஆண்டில் ஆலயத்திற்கு மானியம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் பூசாரிமார்களால் ஆலயத்தின் பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1956 ஆம் ஆண்டுக்கு முன்னர் மாமாங்கு தீர்த்தம் சுடுகங்கை என்றழைக்கப்படும் மகாவுலி கங்கைக் கரையில் நடாத்தப்பட்டு வந்தது. மாமாங்கு தீர்த்தம் என்பது 12 பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடாத்தும் தீர்த்தமாகும். தற்போது ஆலய வளாகத்திலேயே கிழக்கு வாசல் பக்கமாக பெரிய தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டு வருடந்தோறும் தீர்த்தோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

1963 ஆம் ஆண்டளவில் ஆகம முறைப்படி விஸ்தரிக்கப்பட்ட ஆலயத்தின் பிரகாரத்தில் பரிவார மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு அர்த்த மண்டபம், மஹா மண்டபம், தரிசன மண்டபம் எனப் பல மண்டபங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

ஆரம்ப காலங்களில் வருடாந்த மகோற்சவம் மிக எளிமையாகவே நடைபெற்றன. காலப்போக்கில் உள்வீதி திருவிழாக்களை சப்பரங்கள் கட்டி சுவாமிகளை அலங்கரித்து அதில் வைத்து திருவிழாவை நடாத்தி வந்தார்கள். அதன்பின் 1934 ஆம் ஆண்டளவில் கட்டுத்தேர்கள் கட்டி அலங்கரித்து விநாயகர் தேர், சிவனம்பாள் தேர், முருகன் தேர் என முத்தேர் பவனி நடாத்தப்பட்டு வந்தது. 1977 ஆம் ஆண்டு பாரிய பொருட் செலவில் சித்திரத் தேர் நிர்மாணிக்கப்பட்டு மாத்தளை மாநகருக்குப் பெருமை சேர்க்கும் அளவிற்கு அம்பிகைக்குப் பஞ்சரதங்கள் பவனி வரத் தொடங்கின.

இப்படியாக பாரிய வளர்ச்சி கண்ட இவ்வாலயம் சமயப் பணியோடு நின்றுவிடாமல் பல சமூகப் பணிகளையும் அறங்காவல் சபையினர் முன்னெடுத்து வருவது ஒரு சிறப்பம்சமாகும். அதாவது இலவச பாலர் பாடசாலை, அறநெறிப் பாடசாலை, தையல் பயிற்சி வகுப்பு, கணினி பயிற்சி வகுப்பு, ஏழை மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர கல்வி நிதியம் போன்ற சமூக சேவைகளைச் செய்து வருகின்றது. மேலும் இப்படிப்பட்ட சமூக சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## திருத்தம்

கடந்த இந்து ஒளி (தீபம் : 19, சுடர் : 07) சஞ்சிகையின் 27ஆம் பக்கத்தில் "**மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்து.....**" என்ற தலைப்பில் பிரசுரமாகியிருந்த "**இலங்கையின் வடக்கில் நாட்டார் பெண் தெய்வ வழிபாடு காணப்படும் பகுதிகள்**" என்ற கட்டுரை **திரு உதயகுமார் சஜீவ்** (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் பொறியியல் பீடம், மொரட்டுவ பல்கலைக்கழகம்) அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த கட்டுரைச் சுருக்கத்தின் கீழ் **திரு. விவேகானந்தராஜா துலாஞ்சனன்** (விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) அவர்களது பெயர் தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

# மாத்தளை மாவட்ட திருத்தலங்கள்

இலக்கியச் செம்மல் மாத்தளை பெ. வடிவேலன்

ஹேமமாலினி என்ற பெண்மணி புத்த பெருமானுடைய புனித தந்தத்தை தன்னுடைய சிகையில் மறைத்துக்கொண்டு சகாக்களுடன் மாந்தையில் இறங்கி அன்றிரவு மன்னார் மாதோட்டத்தில் வாழ்ந்த அந்தணர் ஒருவர் இல்லத்தில் தங்கி, பின்னர் அனுராதபுரத்தை நோக்கி புறப்பட்டதாக பாளி மொழியில் எழுதப்பட்ட மகாவம்சம் கூறுகின்றது. சங்கமித்தை புனித வெள்ளரசுக் கிளையை அனுராதபுரத்திலும் கதிர்காமத்திலும் நாட்டியபோது முருகன் முதலான இந்துக்கடவுளர்களின் ஆலயங்கள் இருந்தன. இலங்கையும், இந்தியாவும் ஒரே கண்ட மேடையில் அடைந்துள்ள நாடுகளாகும்.

இவ்விரு நாடுகளும் குமரிக்கண்டத்தின் பகுதிகளாக இணைந்தே இருந்தன. பின்னர், புயல் கடலரிப்பு என்பவற்றினால் இவற்றுக்கிடையே ஆழமற்ற கடற்பரப்புத் தோன்றி காலப்போக்கில் அது நீண்டு நீரிணையாகிவிட்டது. இவ்வாறு பௌதீகத் தொடர்பினைக் கொண்டுள்ள இவ்விரு நாடுகளினதும் பண்பாட்டு விழுமியங்களுடனான தொடர்பு மிகவும் பூர்வீகத்தொன்மையுடன் நெருக்கமான ஒற்றுமையினையும் கொண்டதாகும். இலங்கையில் பண்டு முதல் பல இந்து ஆலயங்கள் அமைந்திருந்தமைக்கும், சிவ. வழிபாடு இயற்றப் பெற்றமைக்கும் வரலாற்றுச் சான்றுகள் பல உள்ளன.

"மேரு நாடு நாடி மிக்கிடை பிங்கலை ...." என திருமூல நாயனார் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். (திருமந்திரம் – 2710). இலங்கையின் மத்திய மலைநாடு ஒன் புகழ் கொண்ட சிவனடிபாதம் கொண்டது. காணபத்தியம், சௌரம், கௌமாரம், சாக்தம் ஆகிய வழிபாடுகள் மேலோங்கி விளங்கும் திருநாடும் ஆகும். நம் மலைநாட்டின் வடக்கு வாயிலெனத் திகழும் மாத்தளை மாவட்டத்தில் பண்டைக் காலம் முதல் இந்த சமய வழிபாட்டு நெறி மோலோங்கியிருந்தமைக்குச் சான்றுகள் உள்ளன.

ஆதிச்சநல்லூர் அகழ்வுகள் வெளிப்படுத்தும் முருக வழிபாட்டினைச் சுட்டும் தடயங்களை ஒத்த ஈமத்தாழிகள் மாத்தளை கலேவெலைக்கும் தம்புல்லைக்கும் இடைப்பட்ட "இப்பான் கட்டுவ" இல் ஈமத்தாழிகள் உள்ளமை இதனை மேலும் உறுதிப்படுத்தும், "ஒஸ்ரலோயிட்" கால மனிதர் வாழ்ந்த புதைகுழி என்பது சிலரது துணிபு ஆகும். சிவகிரியே இன்றைய சீகிரியாவாகி உள்ளது என்பதை மாத்தளை மில்லவான கலாநிதி மிராண்டோ ஒபேசேகர தனது ஆராய்ச்சியினை கலிபோனியாவிற்கு சமர்ப்பித்துள்ளார். இராவணனது கோட்டை கொத்தளங்கள் அமைந்திருந்ததும் மாணிக்கங்கள் மிளிருவதுமான இன்றைய லக்கல, பல்லேகம பகுதியிலேயே இராவணகம அமைந்துள்ளது. இங்குள்ள பாரிய கற்பாறையிலேயே இராவணனது மயிற்பொறி புஷ்பக விமானம் வந்திறங்கியதாக செவி வழிக் கதைகள் செப்புகின்றன.

லக்கல பல்லேகமவிற்கும், "மாதுள" பன்னகாமம் என்ற இன்றைய மாத்தளைக்கும் இடையில் "ரஹாஸ்தோட்டைக்கு. (இறத்தோட்டை) அருகில் ஜயகங்கை ஓடுகின்றது. இரு பகுதியையும் சேர்ந்த ஒற்றர்கள் மலையடிப்பாதையில் சந்தித்து இராஜ இரகசியங்கள் பேசிய இடமே இதுவாகும். இறத்தோட்டை நகரில் அமையப்பெற்றுள்ள ஸ்ரீ இராமர் ஆலயம் இராமபிரானின் இலங்கை சஞ்சாரத்தை ஸ்தூலப்படுத்தும் பூர்வ புண்ணியமிக்கது.

இவ்வாறு பண்டைக்கால வரலாற்றுடன் தொடர்புடைய பல ஆலயங்கள் மாத்தளை மாவட்டத்தில் உள்ளன. சோழர் எழுச்சி பெற்று கங்கை முதல் கடாரம் வரை அரசோட்சிய காலத்தில் பொலன்நறுவை ஜனநாதமங்கலம் என்னும் நாமத்தில் திகழ்ந்தது.

இங்குள்ள மூன்றாம் சிவன் கோவிலில் வானவன் மாதேவி எழுந்தருளியுள்ளார். பொலன்நறுவைக்கும் மாத்தளைக்கும் இடைப்பட்ட எலஹர கால்வாயில் நீரேந்து பகுதியான நாலந்த கணவாய்ப் பகுதியில் பல தமிழ்க்குடியிருப்புகள் அமைந்திருந்தன. இன்றும் இவர்களின் வழித்தோன்றல்கள் வாழ்கின்றனர். நிஸங்கமல்லன் பல இந்து கோயில்களை ஸ்தாபித்தான். நாலந்தையில் அமைக்கப்பட்ட இந்துக்கோயில் நாலந்தக்கெடிகே ஆகும். இது விஷ்ணு ஆலயம். மகாவலி அபிவிருத்தி திட்டத்தினால் இவ்வாலயம் வேறு இடத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

செனரத் பரணவிதாரன அவர்கள் 1970 இல் பதிப்பித்து வெளியிட்ட இலங்கையின் பிராமிச் சாசனங்கள் எனும் ஆய்வுக்கு மேலாக தமிழ் சைவ வரலாற்றுத் துறையினர் "இப்பான்கட்டுவ" புராதன புதைகுழி உட்பட பல ஆய்வுகளை மேற்கொள்ளல் அவசியமாகும். ஆங்கிலேயர் இலங்கையின் மத்திய மலைநாட்டில் பெருந்தோட்ட பயிர்ச் செய்கையை ஆரம்பித்த பின்னர் இலட்சக்கணக்கில் தமிழ்நாட்டு கிராமங்களில் இருந்து இங்கு அழைத்து வரப்பட்ட தமிழ் மக்களின் வருகையோடு மலையகத்தின் இந்து சமய. கலை கலாசார பாரம்பரிய பண்பாட்டில் ஒரு புதிய சகாப்தம் தோன்றுகின்றது.

பல்வேறு ஆசை வார்த்தைகளைக் கூறி ஆள்கட்டும் கங்காணிமார் தலைமையில் ஆரம்பக்கட்டத்தில் தமிழக கிராமங்களில் இருந்து கூட்டம் கூட்டமாக நடந்து வந்து அக்கா மடம், தங்கச்சி மடம் கடந்து மண்டபம் கேம்பை அடைந்து 1970 இல் கடலில் மறைந்த இராமேஸ்வரம் தீவைத் தாண்டி சிறிய பாய்கப்பல்களில் ஏறி இராமர் அணையின் எச்சங்களான தட்டப்பாறைகளில் நடந்தும் மன்னார், அரிப்பு, மாந்தை ஆகிய துறைகளில் இறங்கி அடர்ந்த வரள் நில வனாந்திரங்களுக்கூடாக நடந்தபோது கொடிய விலங்குகள், காட்டுச்சுரம், அம்மை முதலான நோய்களினால் வாட்டமுற்று இலட்சக்கணக்கில் மடிந்து, மலைநாட்டை நோக்கி நடந்த நீண்ட பயணம் மலையக மக்களின் வரலாற்றில் தனியான இரத்தப் பயணமாகும்.

கால்நடையாக கூட்டம் கூட்டமாக வில்பத்துக்கூடாக நாலந்த கணவாயைக் கடந்து அலுவிகாரையைத் தாண்டி மாத்தளை நகரை வந்தடைந்தனர். அன்று இங்கு சிறு ஆலயமாக விளங்கிய முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் சிறு பொட்டல் வெளியாகத் திகழ்ந்த இடமே இவர்கள் ஒன்றுகூடும் இடமாக அமைந்தது.

அல்லலுற்று வந்த மக்கள் அம்பிகையின் அருளால் ஆறுதல் பெற்றனர். வில்பத்துக்கூடாக மலையகத்தை நோக்கி கால்நடையாக நெடும் பயணம் வந்தவர்கள் வரும் வழியிலும் தங்கி இளைப்பாறும் இடங்களில் திரிசூலம், வேல், முக்கோண கல் என்பவற்றை நாட்டி வழிபாடு செய்தனர். அனுராதபுரம், விலட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன்றும் இவைகளைக் காணக்கூடியதாக உள்ளது. இப்பகுதியில் குடியேறிய பௌத்த, சிங்கள மக்கள் இவைகளை அழித்துவிடாது தாமும் வழிபடுகின்றனர்.

மாத்தளை முத்து மாரியம்மன் ஆலய பொட்டலில் ஒன்று திரண்ட மக்கள் அங்கிருந்து பிரிந்து மலைநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட தோட்டங்களுக்காகச் சென்றனர். மலைநாட்டில் சீதளக்காடுகளை அழித்து கோப்பி, தேயிலை இறப்பர் ஆகிய பணப்பயிர்களை உருவாக்கினர். நச்சுப் பாம்புகள், விஷ அட்டைகள், சிறுத்தை, பன்றி முதலானவற்றிலிருந்தும், அம்மை முதலான நோய்களிலிருந்தும் ஏமாற்றி வஞ்சிக்கப்பட்ட தம்மை காப்பாற்றிக் கொள்ள திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணையென அம்மன் முதலான தெய்வங்களையே நம்பினர்.

தாம் வாழும் தோட்டங்களில் எல்லாம் மரநிழலிலோ மலைச்சாரலிலோ கற்பாறைக்கருகிலோ நீரோடைகளுக்கு பக்கத்திலோ சிறிய ஆலயங்களை அமைத்து தமது கிராமிய மரபுகளுக்கமைய வழிபாடு செய்தனர். இவர்களின் வழிபாட்டில் முத்துமாரியம்மன் வழிபாடே பிரதானமாக அமைந்தது. அம்மனுக்குப் பல்வேறு நாமங்களைச் சூட்டித் துதித்தனர். மலை இருக்கும் இடமெல்லாம் முருகன் குடியிருப்பான் என்பதற்கொப்ப முருகன் ஆலயங்களையும் அமைக்கத் தவறவில்லை. பிள்ளையார், சிவன், கிருஷ்ணர், இராமர், காளி ஆகிய தெய்வங்களுக்கும் ஆலயங்கள் அமைத்து வழிபாடு நடத்தினர். ஆரம்பத்தில் கிராமிய தெய்வ வழிபாட்டு முறையில் நடைபெற்ற இவ்வழிபாடு தற்போது சிவாகம நெறியில் வளர்ந்து வருகின்றது.

இவ்வாறான ஆலய வழிபாட்டுடன் கிராமிய குல, குடும்ப, ஊர்த்தெய்வ , தொழில் ரீதியான தெய்வ வழிபாடுகளும் ஆரம்பகாலத்தில் மேலோங்கி இருந்தன. மின்னடையான், முனியாண்டி, வைரவர், பைரவர் மாடன், கவாத்துச்சாமி, சிந்தாக்கட்டி, முனி, ரோதமுனி, வெள்ளாவிசாமி, மலைக்கருப்பன், இடும்பன், காத்தாயி, கருப்பாயி, சடையன், ஜடாமுனி என்பவற்றையும் தம் கிராமிய குல ஆசாரப்படி வணங்கினர். பலி கொடுத்தல்,கள், சாராயம் என்பவற்றையும் சிலர் தம் வழிபாட்டுடன் இணைத்துக்கொண்டிருந்தனர். தற்போது இவைகள் அருகி வருவதுடன் சிவாகம நெறியை நோக்கி வளர்ந்து வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

மலையக மக்கள் புராண இதிகாசங்களையும் காப்பியங்கள் உட்பட பண்டைய இலக்கியங்களை படிப்பதிலும் அப்பண்புகளை போற்றுவதிலும் கடைப்பிடிப்பதிலும் தலைசிறந்தவர்கள். காமன் வழிபாடும் காமன்கூத்தும் மாத்தளையில் மேலோங்கி உள்ளது. காமன் கூத்து மாத்தளை மாவட்டத்தின் தலைசிறந்த கூத்தாகத் திகழ்ந்தது. மாசி மாத மூன்றாம் பிறையில் காமன் கம்பம் நடப்பட்டு பதினாறு நாள்களின் பின்னர் காமதகனம் இடம்பெறும். வாரியபொல மேற்பிரட்டு, வேரகாமம், பள்ளத்தன செட்டித்தோட்டம், கந்தேநுவர, பிட்டகந்த, செல்வகந்த, நோர்த் மாத்தளை ஆகிய இடங்களில் தற்போதும் இவை சிறப்புடன் நடைபெறுகின்றன.

யாழ்ப்பாண கலாசாரத்தை கந்தபுராண கலாசாரம் என்றும், மட்டக்களப்பு கிழக்கு மாகாண கலாசாரத்தை மகாபாரத கலாசாரம் என்றும் கூறும் வழக்கம் உள்ளது. இந்த வகையில் மலையக கலாசாரம் மாரியம்மன் கலாசாரம் என்று கூறும்வகையில் மாரியம்மன் ஆலயங்கள் மிகுந்தும் மாரியம்மன் ஆலய வழியாடுகள், பூஜைகள், திருவிழாக்கள், சமய சடங்காசாரங்கள், கலை கலாசார பாரம்பரிய அம்சங்கள், விழுமியங்கள் திகழ்ந்தும் மோலோங்கி உள்ளன. தேர்த்திருவிழா உட்பட பல்வேறு திருவிழாக்கள் இவற்றுள் அடங்கும்.

மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மாசிமக மகோற்சவமும், பஞ்சரத பவனியும் உலகளாவிய புகழ்பெற்றது. அன்னை முத்துமாரி பாட்டுடைத் தலைவியாகத் திகழ்கின்றாள். அவளின் அற்புதத்திருவருளுக்கு அளவேயில்லை. மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் முதல் நோர்த் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் வரையில் சுமார் நூற்றி ஐம்பதிற்கும் அதிகமான முத்துமாரியம்மன் ஆலயங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. இம்மாவட்டத்திலுள்ள முன்னூறுக்கும் அதிகமான ஆலயங்களில் முத்துமாரியம்மன் ஆலயங்களே எண்ணிக்கையில் அதிகமானவையாகும்.

இவ்வாலயங்களில் இரதோற்சவம், காவடி விழாக்கள், பாற்குட பவனி , அம்மன் கரகம் பாலித்தல், வேப்பிலை கரகம் பாலித்தல், கரக ஊர்வலம், தீமிதிப்பு, வேல் பூட்டுதல், திருவிளக்கு பூஜை, தீர்த்தோற்சவம், பூங்காவனம், நாயன்மார் குருபூசை, நவராத்திரி, மகாசிவராத்திரி உட்பட சமய உற்சவங்கள் சூரன்போர், அன்னதானம், சமய சொற்பொழிவுகள், இந்து சமய கலை கலாசார நிகழ்ச்சிகள் என இன்னோரன்ன நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. திருவிழாக்களில் கும்மி, கோலாட்டம், பிடி வரிசை பொய்க்கால் குதிரை, சிலம்படி, கரகம், பஜனை என்பனவற்றுடன் நாதஸ்வரம், மேளம், தப்பு, தமுக், உறுமி, உடுக்கு, செஞ்சனக்கட்டை ஜால்ரா சல்லாரி என்பன இசைக்கப்படுகின்றன.

பிள்ளையார் சுழிபோட்டு பிள்ளையாரை வணங்கியே நாம் நற்காரியங்களை ஆரம்பிக்கின்றோம். மாத்தளையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சுனங்காமம் பிள்ளையார் ஆலயம் முதல் மாத்தளை முத்து விநாயகர் ஆலயம் வரை பல பிள்ளையார் ஆலயங்கள் பிள்ளையாரின் பல்வேறு திருநாமங்களில் நகரிலும், சிறு கிராமங்களிலும் அமைந்துள்ளன. இவற்றுள் பல வழிப்பிள்ளையார் ஆலயங்களாகும். இவற்றில் சம காலத்தில் திருவிழாக்களோடு பல்வேறு திருப்பணிகள் இயற்றப்பட்டு வளர்ச்சியடைந்து வருகின்றன. சோழன் காமமே சுனங்காமம் ஆகியது என்பர் வரலாற்று ஆசிரியர். நோர்த் மாத்தளை ஏ9 வலம்புரி விநாயகர் ஆலயம் உட்பட விநாயகப் பெருமான் ஆலயங்களில் ஆவணி சதுர்த்தி சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இங்குள்ள திருக்கோயில்களில் பிள்ளையாருக்கு தனியான சந்நிதிகளும், வெளிவீதியில் தனிக் கோயில்களும் உள்ளன. தேர்த்திருவிழாவும் பல ஆலயங்களில் நடைபெறுகின்றன.

சைவத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமான் இலிங்கேஸ்வரராகவும் தில்லை நடராஜ பெருமானாகவும், மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் உட்பட பல ஆலயங்களில் எழுந்தருளி அருள்புரிகின்றார். நாட்டுக் கோட்டை நகரத்தாரின் கோயிற் திருப்பணி காலத்தால் மறையாத போற்றுதலுக்குரியது. கொழும்பு, கண்டி, வடமேல் மாகாண குருநாகல், காலி, மாத்தளை உட்பட இவர்கள் கதிர்வேலாயுத முருகனுக்கு பல ஆலயங்களை அமைத்து தொண்டாற்றியுள்ளமை வரலாற்றில் அழியா தடம்பதிப்பதாகும். குருநாகல் கதிரேசன் ஆலயம்

உட்பட பல ஆலயங்களுக்கு காணி, நிலங்கள், கடைகள், பொன் முதலான செல்வங்களையும் வழங்கி அவற்றின் பராமரிப்புக்கும், திருப்பணிக்கும் வழிவகை செய்துள்ளனர்.

மாத்தளை இராஜவீதி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் முருகப்பெருமான் வெள்ளி இரதமேறி வீதியுலா வந்து அருள்பாலிக்கின்றார். உக்குவளை சிவசுப்பிரமணியர் ஆலயம் திருப்பணிகள் பல இடம்பெற்று தேவஸ்தானமாக உயர்ந்துள்ளது. உணுகல முருகன் ஆலயம் உட்பட இம்மாவட்டத்திலுள்ள குமரன் ஆலயங்களில் சிறப்பாக திருவிழாக்கள் நடைபெறுகின்றன. மாத்தளை சிந்தாகட்டி குமரமலையில் அமைந்துள்ள குமரப்பெருமான் ஆலயம் இன்று பல்வேறு திருப்பணிகள் நடைபெற்று இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் கடல் கடந்து தமிழர்கள் வாழும் உலக நாடுகளிலுள்ள குமரப்பெருமான் ஆலயங்களுக்கு ஒப்பானதாக விளங்குகின்றது. மகா கும்பாபிஷேகம் நடைபெறும் இவ்வேளையில் இவ்வாலய ஆரம்ப கர்த்தாக்களையும் தற்போதைய நிர்வாகசபை தலைவர் உட்பட அனைத்துத் தொண்டர்களையும் பாராட்டி மகிழ்வது முருகன் திருவடி சேவைக்கு ஒப்பான பணியாகும்.

ஸ்ரீ காளியம்மனுக்கும், பத்தினி அம்மனுக்கும் தேவிக்கும் பல ஆலயங்கள் உள்ளன. பல விகாரைகளில் பத்தினி அம்மனும், முருகனும், விஷ்ணுவும், காளியும் எழுந்தருளியாக உள்ளனர். சுது கங்கைக்கரையில் காளியம்மன் ஏழு முகமாக எழுந்தருளி காட்சி தந்து பக்தர்களைக் காத்தருள்புரிகின்றாள். இவ்வாலயத்தின் தீர்த்தமாக மகாவலி கங்கை இணைந்தோடும் சுதுகங்கை ஆகும். இவ்வாலயத்தில் வளர்ந்துள்ள தென்னையில் பாளை பூவின்றி "வீ"யாகவே வெளிவந்து காய்ப்பது அற்புதமாகும். இதன் தேங்காய் பிணி தீர்க்கும் மாமருந்தாகும்.

இம்மாவட்டத்தில் வீதிகளில் அமைந்துள்ள ஆலயங்கள் பல மலையக மக்களின் வரலாற்றுடன் இணைந்தவையாகும். பலாபத்வெல வெள்ளைக்கல் அழகர் பெருமான் ஆலயம், கோங்காமுன சித்திர புத்திரர் ஆலயம், பீர்த்தவல ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், நோர்த் மாத்தளை தேர்கல் ஆலயம். பிரண்டிக்கல் விநாயகர் ஆலயம், கலேவெல முத்துமாரியம்மன் ஆலயம், செலகம முத்துமாரியம்மன் ஆலயம், மதுரை வீரன் ஆலயம், நாகொல்ல மாடசாமி ஆலயம், காந்திசபா கிருஷ்ணர் ஆலயம், உட்பட பல ஆலயங்கள் இவற்றுள் அடங்கும். திரிபீடகம் எழுதப்பட்ட அலுவிகாரை விகாரையில் விஷ்ணுவுக்கு தனியான சந்நிதியுண்டு. மகாத்மாகாந்தி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட பாக்கியம் தேசியக் கல்லூரி, மாத்தளை மந்தண்டாவளை இந்து தேசிய கல்லூரி, இறந்தோட்டை இந்து மகா வித்தியாலயம் என்பவற்றில் நாம் சமூகத்தின் தனித்துவம் கருதியும் மாணவர்களின் பக்திக்கு வழிகாட்டல் கருதியும், ஆலயங்கள் பிரார்த்தனை மண்டபங்கள் என்பவற்றை அமைத்துள்ளனர். 1958 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை இம்மாவட்டத்தில் காலந்தோறும் இடம்பெற்ற இன வன்செயல்களினால் தமிழ் மக்களின் தொகை குறைந்தும், இன விகிதாசாரத்தில் குறைவும் ஏற்பட்ட காரணத்தினால் பல பாடசாலைகள் தமிழ் இந்துப் பாடசாலைகள் என்ற அந்தஸ்தை இழந்தமையால் எதிர்காலத்தில் இந்நிலை ஏற்படாதிருக்கும் வகையில் சமூக நலன்புரிகள் கருத்தாழமிக்க செயற்பாடாக இதனை மேற்கொண்டனர் என எண்ணத்தோன்றுகின்றது.

மாத்தளை மந்தண்டாவளையில் அமைந்துள்ள பரமகுருசாமி மடம் மாத்தளை மாவட்ட இந்து சமய பாரம்பரியத்திற்கும், பண்பாட்டிற்கும் ஒரு சான்றாகும். ஆலயம் தொழுவது சாலவும் நன்று, கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் முதுமொழிகளுக்கு ஒப்ப எம் முன்னோர்கள் உருவாக்கிய ஆலயங்களை பாதுகாத்தும், புதிய ஆலயங்கள் அமைத்தும் திருப்பணிகளைச் செய்து இம்மாவட்டத்தில் தமிழும், சைவமும் நிலைபெற்று ஓங்க தொண்டாற்றும் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

## ஆறுமுகத்தின் அதிசிறப்புகள்



**ஆறுமுகம் பற்றி நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில் இவ்வாறு கூறுவார்:**

உலகைப் பிரகாசிக்கச் செய்ய ஒரு முகம்,
பக்தர்களுக்கு அருள ஒரு முகம்,
வேள்விகளைக் காக்க ஒரு முகம்,
உபதேசம் புரிய ஒரு முகம்,
தீயோரை அழிக்க ஒரு முகம்,
பிரபஞ்ச நன்மைக்காக வள்ளியுடன் குலவ ஒரு முகம்.



**குமரகுருபரர் - தமது கந்தன் வரலாறான கந்தர் கலிவெண்பாவில் இவ்வாறு கூறுவார்:**

(ஊமை பக்தருக்கு திருச்செந்தூர் முருகன் அடி எடுத்துக் கொடுக்கப் பாடியது.)

*சத்ரு சம்ஹாரத்திற்கு ஒரு முகம்*
*முக்தி அளிக்க ஒரு முகம்*
*ஞானம் அருள ஒரு முகம்*
*அஞ்ஞானம் அழிக்க ஒரு முகம்*
*சக்தியுடன் இணைந்து அருள ஒரு முகம்*
*பக்தர்களுக்கு அருள ஒரு முகம்.*

**உயிரை மாய்த்துக் கொள்ள, கோபுரத்தினின்று விழுந்தவரை காப்பாற்றி 'முத்தைத் தரு....' என்று பதம் எடுத்துக் கொடுத்த முருகன் அருள் பெற்ற அருணகிரிநாதர் இவ்வாறு பாடுவார்:**

*ஏறுமயிலேறி விளையாடு முகம் ஒன்றே*
*ஈசருடன் ஞானமொழி பேசு முகம் ஒன்றே*
*கூறும் அடியார்கள் வினை தீர்க்கு முகம் ஒன்றே*
*குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே*
*மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே*
*வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே*
*ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்*
*ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே!*

# ஆறுமுகமான பொருள்



தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

ஐந்தொழில் புரியும் ஐம்முகம் சிற்சத்திமுகம் என அழைக்கப் படும். ஆறுமுகம் – ஆறு திசையிலும் சிதாகாசமாக அமைந்த முகம் ஆறு ஆகும். ஆறு சமயக் கடவுள் யாம் என்று அறிவிக்கும் முகம் ஆறு ஆகும். "வெவ்வசுரர் குலத்தை மாய்க்க ஐந்துமுகம் அமையாதென்று ஆறுமுகமாக எழுந்தருளினானே" என்பது குற்றாலத்துப் புராண வரிகளாகும். ஆறுமுகத்தை ஆறுதரம் அழைத்தால் ஆனந்தம் பிறக்கும் என்பது எமது நம்பிக்கை ஆகும்.

திருமுருகனை முழுமுதற் கடவுளாக வழிபடும் முறைமைக்கு 'கௌமாரம்' என்று அழைப்பர். "வேத புராணங்களுக்கும் அப்பாற்பட்ட ஞானப் பரம்பொருளே கருணை வடிவமாக அவனியில் யாவரையும் உய்விக்க ஆறுமுகக் கடவுளாக அவதரித்தார்" என்பது கௌமார சமயத்தின் தத்துவமாகும். சிவசக்தியின் ஒருமைப்பாடுதான் முருகதத்துவமாகும். முருகனைப் பரமாத்வாக வழிபடுவதும் உண்டு. சிவபிரானே ஆறு முகங்களுடன் முருகனாக விளங்குவதாகவும் கூறுவர். முருக பக்தியால் கலியுகத்தில் எல்லாப் பாவங்களிலிருந்தும் விலகிப் பேரின்பத்தை அடையலாம்.

இராமாயணத்தில் விசுவாமித்திர முனிவர் முருகனின் பெருமையைக் கூறுகின்றார். "பூமியில் எவனொருவன் முருகனிடம் அளவிலாப் பக்தியைச் செலுத்துகிறானோ அவன் நீண்ட ஆயுளுடன் கூடிய மக்கட்பேறு பெற்று இன்புற்று முருகன் திருவடியை அடைந்து கீர்த்தியுடன் விளங்குவான்" என்கிறது. முருகன் தளபதியாகவும், வீரத்திருமகனாகவும் விளங்குகின்றான்.

வட இந்தியர்கள் முருகனைக் கார்த்திகேயன் என்றழைப்பர். பல்லவ மன்னர்களும் முருகனையே முதன்மைத் தெய்வமாகக் கொண்டனர். சில அரசர்களின் பெயரில் 'ஸ்கந்த குமாரா' எனக் கூறப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியங்களில் முருகனைத் தமிழர்கள் தெய்வமாகப் போற்றி வழிபட்டதை அறிய முடிகின்றது. அகத்திய முனிவருக்குத் தமிழை அருளியவர் முருகப்பெருமான். குமரகுருபரர் முருகனை சங்கத்தமிழின் தலைமைப் புலவனாகக் கூறுகின்றார். குறிஞ்சி நிலத் தெய்வமாக முருகன் கொள்ளப்பட்டதைத் தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் எடுத்துக் கூறும். குழந்தைத் தெய்வமாக முருகன் வழிபடப்பட்டதைத் தொல்காப்பியர் எடுத்தியம்புகின்றார்.

*"சேயோன் மேய மைவரை உலகமும்"* என்ற பரிபாடல் அடிகள் இதனை மேலும் வலுப்படுத்தும்.

*"மணிமயில் உயரிய மாறாவென்றிப்*
*பிணிமுக ஊர்தி ஒண் செய்யோனும்*
*முருகொத்தீயே முன்னியது முடித்தலின்"*

என்ற பரிபாடல் அடி முருகன் யானை மீதமர்ந்து விளங்கும் வீரத்திருமறவன் என்பதை விளக்குகின்றது.

திருமுறைகளிலும் முருகன் பெருமை பேசப்படுகின்றது. 'இளங்குமரன் சேந்தன்' எனத் திருஞானசம்பந்தரும், 'குமரர் வணங்கும் கழற் பூரணன்' எனத் திருநாவுக்கரசு நாயனாரும், 'குமரன் திருமால் பிரமன் கூடிய தேவர் வணங்கும் அமரன்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளும், 'உமையாள் திருமகள் முருகன்' என மணிவாசகரும் பாடியிருப்பதனை அறியலாம்.

முருகன் பிரணவ சொரூபன். வேதம் மயில் வடிவிலும், பிரணவம் முருகனிடமும், பிரம்ம வித்யா சக்திவேலினிடத்திலும் அறியப்படுகின்றது. கச்சியப்ப சிவாச்சாரியாரும் கந்தபுராணத்தில் 'அருவமும் உருவமாகி' என்ற பாடலில் முருகனின் ஆறு முகங்களிலும் உள்ள தத்துவத்தை எடுத்துக் கூறுகின்றார். பிரம்மா, விஷ்ணு முதலிய ஆறு தெய்வங்களின் குணங்களையும் ஒருங்கே கொண்டு ஆறுமுகத்தவனாக ஆறுதலை அளிப்பவனாக எம்பெருமான் முருகன் விளங்குகின்றான்.

*"ஆறுசமயக் கடவுள் வேறுவேறன்றி*
*யான் ஒருவனே அங்கங்கு இருந்து*
*அன்பர்க்கு முத்திதரு வித்தென்று*
*யாவர்க்கும் அறிவித்த வதன மணியே"*

என சிதம்பர சுவாமிகள் தனது திருப்போரூர் சந்நிதி முறையிலே முருகனைப் புகழ்கின்றார்.

சிவனின் நெற்றிக் கண்ணில் தோன்றிய ஆறு தீப்பொறிகளின் வடிவில் உண்டாகிய குழந்தைகளை ஆறு கார்த்திகைப் பெண்கள் வளர்த்து வந்தனர். இவர்களை பார்வதிதேவி ஒன்றாக்கி ஆறுமுகக் கடவுளாக ஸ்கந்தனாக அருளினார் என்பது கந்தபுராணம் கூறும் செய்தியாகும்.

*"தாயென ஆரல் போந்து தனங்கொள் பாலருந்தலாலே*
*ஏயதோர் கார்த்திகேயன் என்றொரு தொல்பேர் பெற்றான்*
*சேயவன் வடிவமாறும் திரட்டிநீ யொன்றாய்ச் செய்தாய்*
*ஆயதனாலே கந்தனா மெனு நாமம் பெற்றான்."*

என்பதை மேற்காட்டிய கந்தபுராணச் செய்யுள் உணர்த்தும்.

முருகப்பெருமான் தனது ஆறுமுகங்களால் முறையே பக்தர்களின் துயரைத் தீர்த்தும், ஞான ஒளியால் அறியாமை என்னும் இருளைப் போக்கியும், வேதங்களையும் யாகங்களையும் காத்தும், வேதாகமங்களைப் பிரகாசிக்கச் செய்தும், கோபம் முதலிய அரக்கர்களை வெற்றிகொள்ள வைத்தும் வள்ளியை மணம் முடித்து உலகை உய்வித்தும் அருளுகின்றான்.

எமது உள்ளத்தில் காணப்படும் அறுவகைத் துயரங்களான சோகம், மோகம், பசி, தாகம், ஜன்ம, ம்ருத்யு என்பவற்றைப் போக்கியும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சர்யம் போன்றவற்றை அழித்தும் எம்மைக் காப்பவனாக முருகன் கொள்ளப் படுகின்றான். அத்துடன் எமது மும்மலங்களைப் போக்குபவனாகவும், பூமியில் மோட்சத்தை அளிப்பவனாகவும் விளங்குகின்றான்.

*"நினைத்தது எத்தனையில் தவறாமல்*
*நிலைத்த புத்திதனைப் பிரியாமல்*
*கனத்த தத்துவமுற்று அழியாமல்*
*கதித்த நித்தியசித்து அருள்வாயே*
*திருத்தணிப் பதியிற் பெருமாளே."*

என்பது அருணகிரிநாதரின் அற்புதப் பாடலாகும். முருகனை எமது அகத்தில் எழுந்தருளச் செய்தால் ஞானப்பசி உண்டாகும்; வறுமை நீங்கும்; பிறவிப்பிணி ஒழியும். எம்பெருமான் முருகனைப் போற்றி வணங்கி உய்தியடைவோமாக!



(மறைந்தாலும் எங்கள் உள்ளங்களில் இருந்து மறையாத தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மாதாந்த வெளியீடான அருள் ஒளியில் எழுதிய கட்டுரை இது)

# ஆறுமுகம்...
# அழகனவன் முருகனுக்கு அழகுமுகம் ஆறு

திருமதி ஹேமா சண்முகசர்மா



“ஆறுமுகமும் அணிமுடி ஆறும் நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும் பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும் நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும் ஈராறு செவியில் இலகு குண்டலமும்....” என்று தேவராய சுவாமிகள் தனது மனதிலே பதிந்த சுப்பிரமணியப் பெருமானின் திருமுருகப் பொலிவை எமது கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றார்.

அடியார்க்கு எளிய பெருமானாகிய செந்திலாண்டவனிடம் நம்மை நக்கீர தேவ நாயகனார் ஆற்றுப்படுத்தும்தன்மையேசிறப்பானது. முருகப்பெருமான் பன்னிரு கரங்களுடனும், ஒளிதரு கிரீடங்களுடனும் கரத்தில் வேல்தாங்கி முரசம், சங்கம் முதலியவை முழங்க எழுந்தருளியிருக்கிறார் என அறிமுகப் படுத்தி இறைவனது ஆறுமுகங்களிலும் பொலிந்துள்ள கருணையில் நம்மை எல்லாம் திளைக்கும்படியும் செய்கிறார்.

நக்கீரரின் பார்வையில் ஆறுமுகத்துவம் இவ்வாறு சொல்லப் படுகின்றது.

*“மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்*
*பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் – ஒருமுகம்*
*ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்*
*காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே – ஒரு முகம்*
*மந்திர விதியின் மரபுளி வழாஅ*
*அந்தணர் வேள்வி ஓர்க்குமே – ஒரு முகம்*
*எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்*
*திங்கள் போலத் திசை விளக்குமே – ஒருமுகம்*
*செறுநர் தேய்த்துச் செல்சமம்முருக்கிச்*
*கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே – ஒருமுகம்*
*குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்*
*மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந்தன்றே”*

*– திருமுருகாற்றுப்படை (91– 102)*

இருள் மிகுந்த உலகம் ஒளியுடன் திகழ ஒரு முகமும், தன்னைத் துதித்து வணங்கும் அன்பர்களுக்கு வேண்டிய வரங்களை அன்புடன் அருள ஒரு முகமும், மந்திர விதிப்படிமுறை தவறாது அந்தணர் இயற்றும் யாகங்களுக்கு இடையூறு வராமற் பாதுகாக்க ஒரு முகமும், யாம் அறிய முடியாதபடி எஞ்சிநிற்கும் பொருட்களை எல்லாம் தெரியப் படுத்தித் திசைகள் எட்டினையும் விளக்கமுறச் செய்வதற்கு ஒரு முகமும், குற்றாலக் கொடியான வள்ளி நாச்சியாருடன் சிரித்து மகிழ்ந்திருக்க ஒரு முகமும் ஆக முருகப்பெருமான் ஆறு திருமுகங்களைக் கொண்டுள்ளார்.

நக்கீர தேவ நாயகரைப்போன்றே குமரகுருபர சுவாமிகளுக்கும் முருகனின் ஆறுமுகமும் தெரிகிறது. ஐந்து வயதுவரை. நாவாற் பேசமுடியாதிருந்தார் குமரகுருபரர். பெற்றோர் முயற்சிகள் பல எடுத்தும் பயனற்றுப்போக இறுதியில் செந்திலாண்டவனான செந்தூர் முருகனிடம் சென்று விரதமிருந்தார். அடியார்க்கு எளியனான முருகன் அப்பேச முடியாத குழந்தையின் நாவிலே வேலினால் எழுதி (வேற்தீட்சை) னார். குழந்தை பேசியது. குமரன் புகழ்பாடியது. குட்டிக்கந்தபுராணம் எனப் போற்றப்படும் கந்தர் கலிவெண்பாவை அருட்பொலிவுடன் தனது நாவிலிருந்து உதிர்த்தது. அந்தக் குழந்தையின் உணர்வில் உதித்த ஆறுமுகம் இதோ...

*வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத் தடித்து*
*தெவ்வர் உயிர் சிந்தும் திருமுகமும் எவ்வுயிர்க்கும்*
*ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப*
*வாழ்வுதரும் செய்ய மலர்முகமும் – சூழ்வோர்*
*வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்*
*முடிக்கும் கமலமுகமும் – விடுத்தகலாப்*
*பாச இருள் துரந்து பல்கதிரிற் சோதி விடும்*
*வாச மலர் வதன மண்டலமும் – நேசமுடன்*
*போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்*
*மோகமளிக்கும் முகமதியும் – தாகமுடன்*
*வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்*
*தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்*

*(கந்தர்கலி வெண்பா)*

அசுரப் படைகளை மயக்கும் வீரத்திருமுகம் ஒன்றும், எல்லா உயிர்களுக்கும் வினைகளை நீக்கி அழியாத பேரின்ப வாழ்வு தரும் அருள்முகம் ஒன்றும், வேதங்கள் ஆகமங்கள் கூறும் பொருளை எல்லாம் நிறைவு பெறச் செய்யும் அன்பு முகம் ஒன்றும், அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தை அருளும் ஞானமுகம் ஒன்றும், வள்ளியம்மனுக்கும் தெய்வயானையம்மனுக்கும் மகிழ்ச்சியையும் பிரியத்தையும் உண்டாக்கும் இன்ப முகம் ஒன்றும், தன்னடியைத் தஞ்சம் என வந்தடையும்அடியார்களுக்குவரங்கள் பல அருளும் கருணை முகம் ஒன்றும் ஆக ஆறுதிருமுகங்களுடைய அருட்பெருமான் அடியார்களுக்கு அருள்புரிகின்றான்.

குமரகுரு சுவாமிகளின் மனதிலே தோன்றிய ஆறுமுகத் தத்துவம் இதுவாயிருக்க, அருணகிரிநாத சுவாமிகளின் மனதிலே உதித்த ஆறுமுக தத்துவம் எவ்வாறென்று சிந்திக்கின்றோம்.

*ஏறுமயில் ஏறிவிளையாடும் முகமொன்று*
*ஈசனுடன் ஞானமொழி பேசும் முகமொன்று*
*கூறும் அடியார்கள் வினை தீர்த்தமுகம் ஒன்று*
*குன்றுருவவேல் வாங்கி நின்ற முகம் ஒன்று*
*மாறுபடுசூரனை வதைத்த முகம் ஒன்று*
*வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்று*
*ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்*
*ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.*

மயில் ஏறி அகிலத்தை வலம் வந்து விளையாடி மகிழும் முகம் ஒன்று. தந்தைக்கு உபதேசம் செய்து சுவாமிநாதன் ஆகிய முகம் ஒன்று. தமது வினைதீர்க்கும்படி வேண்டிநிற்கும் அடியவர்களுக்கு அருள்வழங்கும்முகம்ஒன்று. தாரகாசுரனின் மாயமலையைத்தனது வேற்படையினாற் பிளந்து அதற்குள் சிறை வைக்கப்பட்டிருந்த வீரவாகு தேவரையும் மீட்டு மாயாமலத்தையும் சம்ஹாரம் செய்த முகம் ஒன்று. பலதரப்பட்ட ஆணவச் செருக்குடைய முகங்களை மாறிமாறி எடுத்தெடுத்துப் போர் புரிய வந்த சூரபன்மன் எனும் அசுரனை சம்ஹாரம் செய்த முகம் ஒன்று. இச்சாசக்தியாகிய வள்ளி நாச்சியாரைத் தன்வசப்படுத்தி அவரைத் திருமணம் செய்வதற்காக வந்த திருமுகம் ஒன்று. இப்படியாக ஆறுமுகப் பரம்பொருளின் தத்துவம் அருணகிரியாரின் வாக்கினாலே வெளிப்பட்டது.

அருணையம்பதி எனப் போற்றப்படும் திருவண்ணாமலையில் அமர்ந்திருக்கும், முருகப் பெருமானின் ஆறுமுகங்களும் விளக்கியுள்ள தத்துவ உண்மைகளை அருணகிரியார் பாடி மகிழ்ச்சியடைய, இருபதாம் நூற்றாண்டுக் கவிச்சக்கரவர்த்தி கண்ணதாசனின் சிந்தனையில் உதித்த ஆறுமுக தத்துவத்தையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டாமா?

*தாமரையில் பூத்துவந்த தங்கமுகம் ஒன்று*
*தண்ணிலவின் சாறெடுத்து வார்த்த முகமொன்று*
*பால் மணமும் பூமணமும் படிந்த முகம் ஒன்று*
*பாவலர்க்குப் பாடந்தரும் பளிங்குமுகம் ஒன்று*
*வேல்வடிவில் கண்ணிரண்டும் விளங்கும் முகமொன்று*
*வெள்ளிரதம் போலவரும் பிள்ளைமுகம் ஒன்று*

ஆறு தாமரை மலர்களிலே தவழ்ந்து வந்தவதரித்த பொன்னிறமுடைய அழகிய முகம் ஒன்று. குளிர்ச்சி தரும் நிலாவொளியின் சாறினைப் பிழிந்து அச்சாற்றினாலே வார்த்தெடுக்கப்பட்ட குளிர்ச்சி பொருந்திய கருணையுள்ள முகம் ஒன்று. பால்மணமும் பூமணமும் கொண்ட முகம் ஒன்று. பாவலராகிய புலவர்களுக்குப் பாடங் கற்பிக்கும் பளிங்குருவான முகம் ஒன்று. வேல்போன்று ஆழ்ந்து அகன்று நுண்ணிய வடிவங்கொண்ட அருள்பொழியும் கண்களிரண்டையுடைய முகம் ஒன்று வெள்ளிரதம் போன்று ஒளிதரும் இளமை ததும்பும் பிள்ளை வடிவம் கொண்ட முகம் ஒன்று இப்படியாகக் கண்ணதாசன் முருகனின் ஆறுமுகங்களின் அருளுருவை தன் மனதில் உணர்ந்த வகையிலே பார்க்கிறார்.

இறைவனின் மூலமும் முடிவுமில்லாத் தத்துவ உண்மையை யார்தான் அறியவல்லார்? தத்தமது உள்ளத்திற்படுகின்ற செய்திகளைப் பாவடிவிலே உதிர்க்கின்றார்கள் பாவலர்கள். இவ்வாறு எம்பெருமானின் அருள்வடியும் திருமுகம் அடியவர்களின் மனதிலே ஒவ்வொரு வகையான தத்துவ உண்மைகளை உணர்த்தி நிற்கின்றது.

**(நன்றி : ஜெயந்தி நாதம் - கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் 2015)**

## கந்தபுராணம் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்கள்

“நன்றி மறந்தால் வரும் பெரும்கேடு, எல்லாவற்றையும் அழிக்கும் என்ற ஒரு சிறந்த அறத்தைக் கந்தபுராணம் வற்புறுத்துகின்றது. சூரபன்மன் தனக்கு வரந்தந்து வாழ்வு தந்த சிவபெருமானுடைய திருக்குமாரனை வணங்கி நன்றி பாராட்டாது அழிந்து ஒழிந்தான்”.

*(திருமுருக கிருபானந்த வாரியார்)*

“சிவத்துரோகிகளுடன் கூடினால் வரும் பெரும் துன்பதை இனிது எடுத்து விளக்குவது கந்தபுராணம். சிவநிந்தை புரிந்த தக்கனுடைய யாகத்தில் பங்கு கொண்ட அமரர்கள் அவ்வதி பாதகத்தின் பயனாக நூற்றெட்டு யுகம் சூரனால் துன்புற்றார்கள். ஆகவே தெய்வ நிந்தை புரிவோருடன் கூடுதல் கூடாது.”

*(திருமுருக கிருபானந்த வாரியார்)*

“சிவமூர்த்தியே குகமூர்த்தி. சிவன் வேறு முருகன் வேறு அன்று, மணியும் ஒளியும் போல் ஒன்றென அறிக. இதனை அறியாது கெட்டான் சூரபரன்மன். அவன் புரிந்த இப்பாவத்தை மற்றவர்கள் புரியக் கூடாது.

*(திருமுருக கிருபானந்த வாரியார்)*

மேற்குறிப்பிட்டவற்றைப் போன்று, இன்னும் பல வாழ்வியல் விழுமியங்களை விளக்கும் ஞானநூல், கந்தபுராணம் ஆகும். “கந்தபுராணத்தில் இல்லாத பொருள் எந்தப் புராணத்திலும் இல்லை.” என்றொரு பழமொழி நம்மிடையே புழக்கத்தில் உள்ளது. வாழ்க்கைப் பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் தெளிவுபடுத்தி அவற்றை அடையும் வழி முறைகளையும் வகுத்துக் கூறுவது கந்தபுராணம்.

கந்தபுராணம் சிறந்த இலக்கியச்சுவை கொண்ட பாடல்கள் நிறைந்த நூலாகவும் உள்ளது. சொல்நயம், பொருள்நயம், அணிநயம் மற்றும் நடையழகு, தொடையழகு, இனிமை, எளிமை, ஆழமுடைமை என்பவற்றுடன் முருகியல்சார் இலக்கிய நூலாகவும் விளங்குகிறது.

*– கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் –*

## முருக வழிபாடு

“முருகு” என்ற சொல் இளமை, மணம், அழகு, தெய்வம் என்றெல்லாம் பொருள்படும். சங்ககால மக்கள் மலையும் மலை சார்ந்த பகுதிக்குரிய கடவுளாக முருகனை வழிபட்ட னர். குமரக்கடவுளை வழிபடப்படும் சமயம் கௌமாரம் எனப்படும்.

**முருகனின் பெயர்களும் பொருள்களும்**

| | |
|---|---|
| முருகன் | அழகுடையவன் |
| குமரன் | இறைவனாய் எழுந்தருளியிருப்பவன் |
| குகன் | அன்பர்களின் இதயமாகிய குகையில் எழுந்தருளியிருப்பவன் |
| காங்கேயன் | கங்கையால் தாங்கப்பட்டவன் |
| சரவணபவன் | சரவணப் பொய்கையில் உதித்தவன் |
| சேனாபதி | சேனைகளின் தலைவன் |
| சுவாமிநாதன் | தந்தைக்கு உபதேசித்தவன் |
| வேலன் | வேலினை ஏந்தியவன் |
| கந்தன் | ஒன்று சேர்க்கப்பட்டவன் |
| கார்த்திகேயன் | கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன் |
| சண்முகன் | ஆறுமுகங்களையுடையவன் |
| தண்டாயுதபாணி | தண்டாயுதத்தைக் கரத்தில் ஏந்தியவன் |
| வடிவேலன் | அழகுடைய வேலை ஏந்தியவன் |
| குருநாதன் | தந்தைக்கு குருவாக இருந்து உபதேசித்தவன் |
| சுப்பிரமணியன் | மேலான பிரம்மத்தின் பொருளாக இருப்பவன். |

# சஷ்டியில் மா அறுத்த சங்கரன்பிள்ளை

கலாபூஷணம் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு



அறக்கருணை, மறக்கருணை என எம்பெருமான், ஈசனின் கருணையை இருவகைப் படுத்தலாம். நல்லோரை அறக்கருணையாலும், தீயோரை மறக்கருணையாலும் ஆட்டுபவன் இறைவன். சூரபதுமன் தான் பெற்ற பல வரங்களின் பலத்தை துஷ்பிரயோகஞ் செய்து தேவர்களுக்குப் பல இன்னல்களைப் புரிந்தான். இருந்தும் அவன் தவங்கள் பல நோற்று வரங்கள் பல பெற்றதால் அவன் மடிந்த பின் மகாபாவியாகக் கூடாது என்ற கருணை ஒருபுறம், தேவர்களைக் காத்தருள வேண்டும் என்ற அறக்கருணை மறுபுறம் எனத் தன் இரு நோக்கங்களும் நிறைவேறத் தனது அம்சமான முருகப் பெருமானைக் கொண்டு சூரனைச் சங்கரித்து ஞான வேலால் சூரனது உடலை இரு கூறாகப் பிளந்து, அவற்றைச் சேவலும் மயிலுமாக்கித் தன்னோடு சேர்த்தும் கொண்டான் ஈசன். இதனை அடிப்படையாகக் கொண்டதே முருகப்பெருமானது அவதாரமும் சூரன்போரும் கந்தசஷ்டி விரதமுமாகும்.

"கந்தன்" என்றாலே சகல உலகங்களிலுமுள்ள பகைவர்களை வற்றச் செய்பவன் என்று பொருள். "வேள்" என்றால் உயிர்களுக்கு உபகாரம் செய்பவன் என்று அர்த்தம். எனவே பகைவர்களை அழித்து தன்னை நம்பினோர்க்கு அருள்புரிபவன் என்று கொண்டு, கந்தக்கடவுளை எம் சிந்தையுடன் வைப்போம்.

கந்தப் பெருமானுக்குரிய விரதங்களுள் சிறப்பு மிக்கது கந்தசஷ்டி விரதம். குன்றத்தில் குடியிருக்கும் தெய்வமும் குறமகளாம் வள்ளியை நாடித் தேடி ஓடி மணந்த தெய்வமுமான வேலவனும், ஷண்முகப்பிரியனுமான சிவமைந்தனுக்குரியது இவ் விரதம். கந்தன், கடம்பன், கார்த்திகேயன், ஆறுமுகன், சுப்பிரமணியன், முருகன், சேயோன் எனப் பல்வேறு நாமங்கள் கொண்ட கந்தப்பெருமானின் கந்தசஷ்டி விரதம் பற்றி நோக்கு முன், "விரதம்" என்றால் என்ன என்பதை முதலில் பார்ப்போம்.

மனம் பொறி வழி போகாமல், நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விதிப்படி விசேடமாக அனுட்டித்தல் விரதமாகும். இது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் விரதம் பற்றித் தந்த விளக்கமாகும்.

கந்தசஷ்டி விரத காலத்தை நோக்கின் ஐப்பசி மாத அமாவாசையைத் தொடர்ந்து வரும் பிரதமை முதல் ஆறு தினங்கள் இவ்விரதம் அனுட்டிக்கப்படுகிறது. "சஷ்டி" என்பது ஒரு திதியாகும். இது ஒவ்வொரு மாதமும் இடம்பெறும் அமாவாசை, பௌர்ணமியைத் தொடர்ந்து வரும் ஆறாம் நாளாகும். "சங்கரன் பிள்ளை சட்டியிலே மாவறுத்தார்" என்றோர் கூற்று உண்டு. சங்கரன் "சிவன்" ஆவர். "மாவறுத்தல்" என்பது மா அறுத்தல் என்று வரும். போரின் போது மா மரமாக நின்ற சூரனை, முருகப்பெருமான் சங்கரித்தார் என்பது இதன் பொருள். சுருங்கச் சொல்லின் சங்கரன் எனப்படும் சிவனாரின் பிள்ளையாகிய கந்தக்கடவுள் சஷ்டித் திதியிலே போரில் மாமரமாக நின்ற சூரனை சங்காரஞ் செய்தான் என்று பொருள் கொள்ளலாம்.

ஆறுமுகன் ஆறு தீச்சுடர்களாக தேவர்களின் துயர் துடைக்கும் பொருட்டு சிவனாருடைய நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவர். சூரனோடு அமைந்த போரில் ஆறாம் நாள் தனது ஞான வேலால் அவனைச் சம்ஹாரஞ் செய்தவர். ஞானவேல் சூரனது உடலை இரு கூறுகளாக்கியது. பிளவுபட்ட இரு கூறுகளும் முருகப்பெருமானது அருளால் சேவலும் மயிலுமாக மாறின. அவற்றுள் சேவலை தனது கொடியிலும், மயிலைத் தனது வாகனமாகவும் ஏற்றுக் கொண்டார் கந்தவேள். இதன் காரணமாக சேவற்கொடியோன் என்றும், மயில்வாகனன் என்றும் நாமமும் பெற்றார்.

மேற்படி விரத அனுட்டிப்பு முறையை நோக்கின் இவ்விரத ஆறு நாட்களும் முருகன் அடியார்கள் உபவாசமிருந்து, உணவு பகலில் உறக்கம் தவிர்த்து, கந்தன் புகழ்பாடி சிந்தையைச் சிங்காரவேலன்பால் செலுத்தி நற்கதி பெறுவர். குறிப்பிட்ட ஆறு தினங்களும் மேற்படி முறையில் விரதமனுட்டிக்க முடியாதவர்கள், முதல் ஐந்து நாட்களும் ஒரு நேர உணவு உட்கொண்டு ஆறாம் நாள் மாத்திரம் உண்ணாவிரதமிருந்து ஆலய தரிசனம் செய்து சூரன் போர் காட்சி கண்டுகளித்து மறுநாள் காலை பாரணை செய்யலாம். அவ்வேளையில் ஆறு பேருக்கு அன்னதானம் வேறும் தானங்கள் செய்தும் விரதத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

"விரலுக்குத் தக்கது வீக்கம்" என்பர், எனவே எமது உடல் ஆரோக்கியத்துக்கும் அதன் சக்திக்கும் ஏற்ற முறையில் யாம் விரதத்தை அனுட்டிக்க வேண்டும். விரதம் என்ற பெயரில் உடலை வருத்தியாக வேண்டும் என்பது விரத விதிமுறையல்ல. முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியது என்னவென்றால் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றையும் கட்டுப்படுத்தி, உடற்தூய்மையோடும், உளத்தூய்மையோடும் இறைவழிபாடு செய்யலாம்.

"நோன்பு" என்பதற்கு கொன்று தின்னாமை என்றோர் பொருள் உண்டு. இதற்கேற்ப அசைவ உணவைத் தவிர்த்து சைவ உணவை விரத நாட்களில் மாத்திரமன்றி தினமும் மேற்கொள்ளுதல் மிகச் சிறந்த புண்ணியமான செயலாகும். "நாம் பழகிவிட்டோமே இத்தகைய உணவுக்கு" என்று அசிரத்தையோடு

**கந்தசஷ்டி விரதம் ஐப்பசி 26ஆம் நாள் (12.11.2015) ஆரம்பமாகி கார்த்திகை முதலாம் நாளன்று (17.11.2015) நிறைவு பெறுகிறது.**

இராமல் சற்று நிதானமாக அமர்ந்து சிந்தித்தால் இதன் உண்மை நன்கு புரியும். பிறப்பிலிருந்து சைவ உணவை உட்கொண்டு வருதலே ஒரு சிறந்த விரதமாகும். இதனையே "நோன்பு" என்பது கொன்று தின்னாமை என்ற கூற்றை உணர்த்தி நிற்கின்றது.

மது அருந்துதல், மாமிசம் புசித்தல், பொய் பேசுதல் முதலிய பஞ்சமாபாதகங்களை செய்யாது விடுத்து நல்லனவற்றையே சிந்தித்துச் செயலாற்றுதல், எல்லாவற்றுக்கும் மேலாக எம்மையும் எமக்காக இப்பிரபஞ்சத்தையும் படைத்த எல்லாம் வல்ல இறைவன் மேல், அசையாத நம்பிக்கை வைத்து வழிபடுதலுமே சிறந்த விரதம் எனவும் கொள்ளலாம்.

கந்தசஷ்டி விரத ஆறு நாட்களும் காம, குரோத, லோக, மாற்சாரிய முதலிய ஆறு பகைகளையும் அகற்றி அருள் பாலிப்பதைத் தத்ரூபமாக விளக்கி நிற்கின்றன. ஞான சக்தியைக் குறிக்கும் வேலனது வேல் ஞான வேலாக அமைந்து, சூரபதுமனைச் சம்ஹரித்து தேவர்களைச் சூழ்ந்திருந்த இன்னல் என்னும் இருளை அகற்றவே தேவர்களின் முகத்தாமரைகள் மலர்ந்தன. அசுரர்களது முகங்கள் கூம்பின. சூரனும் அவனது சகாக்களும் அழிந்தொழிய தேவர்கள் அசுரர்களது தொல்லையினின்றும் விடுதலை பெற்றனர். இந்நிகழ்வு இறைவன் ஆன்மாக்களை மாயையினின்றும் நீக்கி, ஞான அருள் புரியும் தத்துவத்தைக் குறிப்பதாக கந்தபுராணம் விளக்கி நிற்கின்றது.

கந்தக் கடவுளுக்கு உகந்தவை கார்த்திகை நட்சத்திரம், சஷ்டிதிதி, சுக்கிரவாரம் ஆகியவையாம். கார்த்திகைக் கார்த்திகையில் கார்த்திகேயன் என்றழைக்கப்படும் கந்தப் பெருமானை மெய்யன்போடு வழிபட்டு நற்பேறுகள் பல பெற்ற நாரதர் முதலாம் முனிவர்களும், முசுகுந்தச் சக்கரவர்த்தி. முதலாம் மன்னர்களும், நக்கீரர், அருணகிரிநாதர் முதலிய மெய்யடியார்களும் இங்கு குறிப்பிடத்தக்கவர்கள்.

எனவே கந்த தத்துவத்தை விளக்கி நிற்கும் கந்தசஷ்டி விரதத்தை முறைப்படி திரிகரண சுத்தியோடு யாம் அனுட்டிப்பதோடு அதன் நற்பலனை எமது இளைய தலைமுறையினருக்கும் எடுத்துக்கூறி, அவர்களை சமயரீதியில் நெறிப்படுத்தி நல்லதோர் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குதல் எம் எல்லோரதும் தலையாய கடமையாகும் இல்லையா?

# முருகப்பெருமானும் வழிபாட்டு சிறப்புகளும்

முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளும் தமது உடம்பிலேயுள்ள மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை எனப்படும் ஆறு ஆதாரங்கள் ஆகும். ஆறுமுகக் கடவுள் எம்மிடமுள்ள ஆறு ஆதாரங்களிலும் வீற்றிருக்கின்றான். இந்த வகையில் நம் அகக் கண்ணினால் நாம் ஆறுமுகனைத் தரிசிக்கலாம். அதே வேளை, நம் புறக் கண்களால் முருகக் கடவுளைக் கண்குளிரக் கண்டு தரிசிக்க வழிசெய்யும் வகையிலேயே ஆறுபடை வீடுகளிலும் ஆலயங்களிலும் முருகன் எழுந்தருளி அன்பர்களுக்குக் காட்சியளிக்கின்றான்.

தமிழும் முருகனும் வேறல்ல, தமிழே முருகன், முருகனே தமிழ். தமிழ் என்றால் இனிமையென்றும், அமிழ்து என்றும், என்றும் இளமையுடன் திகழ்வது என்றும் கூறப்படுகிறது. அத்தகைய தமிழை எமக்குத்' தந்தவன் முருகன். அவனும் இளைஞன், குமரனாகவே என்றும் விளங்குபவன்.

"அருணதள பாதபத்மம் அது நிதமுமே துதிக்க அரிய தமிழ் தானளித்த மயில் வீரா" என்ற திருப்புகழ் பாடலடி, முருகனே தமிழையும் தந்துள்ளான், என்பதை அறிவிக்கின்றது.

"குறுமுனிக்குத் தமிழுரைக்கும் குமர......." என்னும் பாடலடி, முருகன் அகத்திய முனிவருக்குத் தமிழ் உரைத்து, அம்முனிவர் மூலம் நமக்குத் தமிழ் தந்தவன் என்பதை உணர்த்துகிறது. தென்னாடுடைய சிவன் அவனே முருகன், எந்நாட்டவர்க்கும் இறைவன். முருகனின் தோற்றமும் தமிழின் தோற்றமும் ஏக காலத்தவையாகும்.

முருகக் கடவுள், பண்டைக் காலந் தொட்டுத் தமிழ் மக்களால் வழிபாடு செய்யப்பட்டு வரும் தெய்வமூர்த்தியாகும். சங்கத்தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களில், முருகன், குறிஞ்சி நிலக் கடவுள் எனக் குறிப்பிடப்படுகிறான். மலையும் மலையைச் சார்ந்த இடங்களைக் குறிஞ்சி நிலம் என்பர். "சேயோன் மேய மைவரை உலகம் "என்கிறது தொல்காப்பியம். சேயோன் எனும் சொல் '' முருகனைக் குறித்து நிற்கின்றது.

முருகு என்றால் அழகு என்று பொருள் கொள்ளப்படுகிறது. இயற்கை அழகில் இறைவனைக் கண்டு தரிசித்தவர்கள், பண்டைத் தமிழர்கள். அந்த அழகுத் தெய்வத்தை, ஒரு கட்டிளைஞனாகச், செந்நிறத்தனாக, அழகன் ஆக உருவகித்துப் பார்த்து மகிழ்ந்தனர். தெய்வயானை, வள்ளி எனும் இரண்டு சத்திகளை முருகனுடன் இணைத்து அழகு பார்த்தனர். அச்சத்திகள் இச்சா சத்தி, கிரியா சத்தி என விளக்கமும் தந்தனர். முருகன் கையில் உள்ள வேல், ஞான சத்தியாக விளங்குகிறது. ஆறுமுகங்களும், பன்னிருகைகளும் கொண்டு ஒரு திருமுருகனாக, வள்ளி தேவசேனா சமேதராய் மயில் மீது அமர்ந்து அருளாட்சி புரியும் காட்சியை அமைத்தனர். இவ்வாறு அழகுத் தெய்வமாக, அன்புத் தெய்வமாக, ஞானத்தின் திருவுருவாக முருகனைக் கண்டு, திருக்கோயில் அமைத்து வழிபட்டு வரலாயினர்.

**(ஈழத்து ஆலயங்கள் - யாழ் மாவட்ட திருத்தலங்கள்**
**(பாகம் - 1) மாமன்ற வெளியீடு)**

# ஈழத்திற் கந்தபுராண கலாசாரம் — ஓர் ஆய்வு —

கலாநிதி இ.பாலசுந்தரம்,
முன்னாள் விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்

ஈழத்தின் பூர்வீக வரலாற்றினை ஆராய்ந்தோர், பௌத்த சமயம் இங்கு கால்கோள் கொள்ள முன்பு சைவ சமயம் நிலை பெற்றிருந்ததென்பதை நிறுவி உள்ளனர். பௌத்த மதத்திற்கு முந்தியதாக இங்கு நிலவிய நாத (சிவன்) வழிபாடு, பத்தினி (அன்னை) வழிபாடு, நாக வழிபாடு பற்றிய செய்திகளும், கி.மு.3ஆம் நூற்றாண்டு தொடக்கம் கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப கால பகுதி வரை காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்களிலுள்ள குறிப்புக்களும் இங்கு நிலவிய இந்து மத வழிபாட்டு முறைகளைச் சான்றுபடுத்துகின்றன. இச்சான்றுகளைக் கொண்டு நோக்கும் போது ஈழத்திற் பண்டை நாளில் இந்து மதம் நிலைபெற்றிருந்ததென்பது புலனாகின்றது.

தமிழகத்துச் சமய நெறியில் மிகப் பழைய தெய்வங்களாக முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை முதலாம் தெய்வங்களைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவ்விலக்கியச் சான்றுகளுக்கு முற்பட்டனவாகவுள்ள ஈழத்துச் சிவவழிபாட்டுச் சான்றுகள் சிவவழிபாட்டின் பழைமையை மேலும் வற்புறுத்துகின்றன. இந்நிலையில் ஈழத்தில் முருக வழிபாடு, எப்போது தோன்றிற்றென்பது ஆய்வுக்குரியதாகின்றது.

இந்து சமயத்தைப் பின்பற்றும் பல்வேறு இனங்கள் மத்தியிலும் முருக வழிபாடு பல்வேறு அடிப்படையில் பின்பற்றப்படுகின்றபோதிலும், தமிழருக்குரிய தனித் தெய்வமாகவே முருகன் அமைகின்றான் என்ற கருத்தைப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் வற்புறுத்தியுள்ளார்கள். திருச்செந்தூருக்கு அண்மையிலுள்ள ஆதீச்ச நல்லூர் என்னுமிடத்திலே நடந்த தொல்பொருள் ஆய்வின் மூலம் அப்பகுதியில் சுமார் கி.மு. 1200 ஆம் ஆண்டளவில் முருகவழிபாடு முக்கியத்துவம் பெற்றிருந்தமையை எடுத்துக்காட்டி முருகவழிபாட்டின் தொன்மையை அவர் நிறுவியுள்ளார். ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய திருச்சீரலைவாய் என்பது திருச்செந்தூர் என அறியப்படுகிறது. எனவே திருச்செந்தூரில் முருகவழிபாடு எத்தகு பழமையுடையதாகக் காணப்பட்டதோ அத்தகு பழைமையை கதிர்காமத்து முருக வழிபாட்டிலும் அமைந்திருக்கவேண்டும் என்ற ஊகம் கொள்வதில் தவறில்லை. கந்தபுராணம்-வள்ளிநாயகி திருமணப்படலத்தில் முருகன் வள்ளியைத் திருத்தணிகையில் ஆட்கொண்ட செய்தி கூறப்படுகின்றது. ஆனால், ஈழத்துத் தொல்மரபுக் கதைகளோ கதிர்காமமே வள்ளியின் பிறப்பிடமாக காட்டுகின்றன. கதிர்காமத்திற்கு அடுத்தபடியாகத் திருக்கோயில், உகந்தமலை, மண்டூர், சந்நிதி ஆகியன பழைமை வாய்ந்த முருக தலங்களாகும். இவை அனைத்தும் ஈழத்தின் கடற்கரையை அண்மித்தனவாகவே காணப் படுகின்றன. எனவே கடற்கரையோரங்களில் மிகப் பழங்காலம் முதலாகச் சிவதலங்களும் முருக தலங்களும் நிலை பெற்றிருக்கின்றன என்ற உண்மை பெறப்படுகின்றது. இப்பின்னணியிலேயே ஈழத்திற் கந்த புராண கலாசாரம் பற்றி நோக்குதல் பொருத்தமாகும்.

கந்தபுராண கலாசாரம் என்று கூறும்போது இரு விடயங்கள் முனைப்புப் பெறுகின்றன. அவை முருக வழிபாடும், கந்தபுராண இலக்கியம் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய கலாசாரத் தாக்கமுமாகும். இவற்றில் முருக வழிபாட்டின் தொன்மை பற்றி மேலே கூறப்பட்டுள்ளது.

வட இலங்கையில் ஆரியச் சக்கரவர்த்திகளின் தலைமையில் தமிழ் இராச்சியம் நிலவிய காலகட்டத்தில் தமிழர் சமய- கலாசார விடயங்கள் உயர் நிலையில் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. 5ஆம் சிங்கைச் செகராசசேகரன் காலத்திலிருந்த நல்லூர் இராசதானிச் சூழலிலே தமிழ்ச் சங்கமும் சிறந்த நூலகமொன்றும் இயங்கி வந்திருக்கின்றன. இத் தமிழ்ச் சங்கப் புலவர் குழாத்தினரின் மேற்பார்வையில் அக்கால இலக்கிய நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கலாம். தமிழக வரலாற்றில் எவ்வாறு சோழர் காலம் சிறந்திருந்ததோ அதுபோன்றே ஈழத்தமிழர் வரலாற்றிலும் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக் காலமும் பொற்காலமாகும். சோழர் காலப் பண்பாட்டு நடவடிக்கைகள் சில ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலும் மேற்கொள்ளப்படலாயின. அவ்வகையில் மருத்துவம், சோதிடம், சமயம், வரலாறு சார்ந்த ஈழத்து நூல்கள் தேடித் தொகுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசசபை சார்ந்த தமிழ்ச் சங்கப் புலவர்கள் தம் காலத்தில், தமிழகத்தில் கந்தபுராணம் செல்வாக்குப் பெற்றிருந்தமையை அறிந்து, அதன் ஏட்டுப்பிரதி ஒன்றை அரசரின் உதவியுடன் வரவழைத்திருக்கலாம். பின்பு அதனைப் படி எடுத்துத் தமிழ்ச் சங்கத்திலும், நல்லூர், மாவிட்டபுரம் முதலிய இடங்களிலிருந்த கந்தசுவாமி கோயில்களிலும் போற்றிப் பாதுகாத்திருக்கலாம். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் பழைமை வாய்ந்த கந்தபுராண ஏடு இன்றும் பேணப்பட்டுவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. முதலில் கந்தபுராணப் படிப்பு முதலில் தமிழச்சங்கப் புலவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, பின்பு ஆலயங்களிலும் பரவியிருத்தல் இயல்பே. உயர் நிலைச் சமூகச் சூழலில் கந்தபுராணப் படிப்பு முதலில் ஆரம்பித்து, அதனைத் தொடர்ந்து சகல கிராமிய முருக தலங்களிலும் இடம் பெற்றிருக்க வேண்டும். அரச சார்பான சங்கப் பலகையிலே தொடங்கிய

கந்தபுராணப் படிப்பு சுமார் 700 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்தில் நிலை பெற்றிருகின்றமை கந்தபுராணத்தின் தனித்துவமான சிறப்பாகும்.

கந்தபுராணத்தினாலே தமிழும் சைவமும் ஓங்கி வளர்ந்து வருகின்ற யாழ்ப்பாணத்துக்கு ஓர் நாள் கண்ணூறு உண்டானது. சீரும் சிறப்போடும் தமிழரசு யாழ்ப்பாணத்திலே நிலை பெற்றிருக்கும் காலத்திற் போர்த்துக்கேயரின் வருகையினாலும் அதனைத் தொடர்ந்து அவர்கள் மேற்கொண்ட சமய கலாசார அழிப்பு நடவடிக்கைகளினாலும் இங்கு நிலவிய கலாசார நிலைப்பாடு நிலை தளர்வதாயிற்று. மதமாற்றம், பசுக்கொலை, சைவாசாரத் தடை என்பன மலிந்தன. தமிழரசர் காலம் முதலாகச் சைவ மக்களை நெறிப்படுத்திவந்த கந்தபுராண கலாசாரம் ஒடுங்குதிசை அடைவதாயிற்று. அப்போது தமிழ் மக்களின் உள்ளம் கொதித்துக் கொண்டு இருந்தது. அந்த கொதிப்பு கந்தபுராணக் கொதிப்பு. அந்தக் கொதிப்பினின்றும் ஓர் ஆண் குழந்தை யாழ்ப்பாணத்து நல்லூரிலே கொதித்துக் கொண்டே உதயஞ் செய்தது என நாவலரின் தோற்றத்தைப் பண்டிதமணி அவர்கள் குறிப்பிடுகிறார்கள். நாவலர் அவர்கள் கந்தபுராண கலாசாரத்தை மீண்டும் நிலைநாட்டப் பாடுபட்டார். கந்தபுராணத்தின் வழி வந்த சைவசமய ஆசாரங்களும், சமய நம்பிக்கைகளும் மக்கள் மத்தியில் நன்கு ஊறியிருந்தன. அதனாலேயே இம்மக்கள் பிற சமய மதமாற்றத்துக்கு ஈடு கொடுக்கக்கூடியதாக இருந்தது. பாதிரிமார்கள் கிறிஸ்து மதம் எத் தேசத்திற் பரவினும் பரவும், யாழ்ப்பாணத்தில் உள்ளாடி பரவாது என்று அந்தரங்கத்தில் புலம்புகிறார்கள் என நாவலர் அவர்கள் எழுதுவதற்குக் காரணம் மக்கள் தம் தாய்ச் சமயத்தில் கொண்டிருந்த அசையாத நம்பிக்கையை காட்டுகின்றது. இச் சமயத்தில் இன்னுமொரு முக்கிய விடயத்தைக் குறிப்பிடுதல் பொருந்தும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் வாழும் மக்களது எண்ணிக்கையைச் சமய ரீதியில் விகிதாசார அடிப்படையில் நோக்கும்போது கத்தோலிக்கர் எண்ணிக்கை அதிகமாக இருப்பதை காணலாம், அம் மக்களின் மூத்த தலைமுறையினர் கந்தபுராண கலாசாரத்திற்குட்படாத சூழலில் வாழ்ந்தமையே இத்தகைய மதமாற்றம் எளிதில் ஏற்படக் காரணமாயிற்று. ஈழத்திலுள்ள சைவ ஆலயங்களை நோக்கும் போது அவை ஆகம நெறிப்பட்ட கிரியைகள் நடைபெறும் கோயில்களாகவும், கிராமிய மரபு வழிப்பட்ட பூசை உபசாரங்கள் நிகழ்த்தப்படும் கோயில்களாகவும் காணப்படுகின்றன. வேதநெறிப்பட்ட பிராமணியச் செல்வாக்கு கிழக்கிலங்கையை விட யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரிதாகக் காணப்பட்டு வந்திருக்கின்றது. ஆறுமுகநாவலர் காலத்தில் வேதாகம பிராமணிய ஆசார சீலங்கள் கோயில் நடைமுறைகளில் பெரிதும் புகுத்தப்பட்டதோடு, அவற்றிற்கு அதீத முக்கியத்துவமும் கொடுக்கப்படலாயின. கந்தபுராணப் படிப்பும் இத்தகைய கோயில்களிலேயே நடைபெற்றும் வந்திருக்கின்றது. கந்தபுராணப் படிப்பில் ஈடுபாடும் அதில் நம்பிக்கையும் மக்கள் தத்தம் பகுதிகளிலிருந்த கிராமிய வழிபாட்டுக் கோயில்களை வேதாகம நெறிப்பட்டனவாக மாற்றும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கலாம். இம் முயற்சியில் நாவலர் பெரிதும் முன்னின்று உழைத்திருக்கின்றார். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நாட்டார் வழிபாட்டு முறையில் பேணப்பட்ட அநேக கண்ணகி அம்மன், பேச்சியம்மன் கோயில்கள், மனோன்மணி, இராஜேஸ்வரி அம்மன் கோயில்களாக மாற்றபட்டு வருகின்ற செய்தியும் அறியப்படுகின்றது. எனவே இத்தகு மாற்றங்களுக்குக் கந்தபுராணப் படிப்பும் அதனால் மக்களுக்கேற்பட்ட மனமாற்றமும் காரணிகளாக இருந்திருக்கின்றன என்ற உண்மையும் பெறப்படுகின்றது.

கோயிற் கந்தபுராணப் படிப்பு பரவலாக அமைந்தபோது, அதன் பின்னணியில் இன்னுமொரு சமூக ஆபத்தும் உருவாயிற்று என்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது.கோயிற் கந்தபுராணப் படிப்பு நடைபெறும்போது ஆசார சீலர்கள் மட்டுமே கோயிலுக்கு வரலாம் என்ற கட்டுப்பாடும், நம்பிக்கையும் மக்கள் மத்தியில் வன்மையாகப் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. பிற்றை நாளில் எற்பட்ட அறிவியல் வளர்ச்சியும் சமூக விழிப்புணர்வும் சந்நிதியிலும் கந்தபுராணப் படிப்பை ஏற்படுத்தியுள்ளமையை ஈண்டு சுட்டிக்காட்டுதல் பொருத்தமாகும். பருத்தித்துறை - நெல்லண்டைக் காளிகோயிலிலும் ஆண்டுதோறும் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் கந்தபுராணப் படிப்பு இடம் பெற்று வருதல் வழக்கமாகும். புராணப் படிப்பு பூர்த்தியாகும் தினத்தை "விடுமணி" என்றழைப்பர். அத்தினத்தில் விசேட பூசையும், அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டு வருகின்றது. அடியார்கள் மிகவும் பயபக்தியுடன் - விரத சீலர்களாய்ப் புராணப்படிப்பினைக் கேட்பர். புராணப்படிப்பு காலங்களில் மக்கள் சைவாசார உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாடாக இருந்திருக்கிறார்கள் என்பதும் தெரிய வருகின்றது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் பாரத கலாசாரமும், அதனையடுத்துக் கந்தபுராண கலாசாரமும் நிலை பெற்றுள்ளன. ஆனால் யாழ்ப்பாணப் பகுதியில் கந்த புராணக் கலாசார வெளிப்பாடுகளே முனைப்பாகத் தோன்றுகின்றன. இங்கு சைவ உணவுப் பழக்கமுடையோர் எண்ணிக்கை ஒப்பீடு அடிப்படையில் மிகப் பெரிதாகும். நடைமுறை வாழ்க்கையில், சோதிடத்தில் அசையாத நம்பிக்கை பின்பற்றப்படுகின்றது. சகல சமய விரதங்களையும் அனுட்டிப்போர் தொகையும் அதிகமானதே. தொடர்ச்சியான கந்தபுராணப் படிப்பும் இங்கேயே பெரிதும் பின்பற்றப்பட்ட வருகின்றது. கந்தபுராண விழாக்கள் யாழ் குடாநாட்டில் பெரிதும் நடைபெற்று வந்திருக்கின்றது.. கந்தபுராணத்துடன் தொடர்புடைய ஏழு நூல்கள் இங்கேயே எழுதப்பட்டிருக்கின்றன. இத்தகைய காரணங்களை விரிவாக ஆராயும் போது யாழ்ப்பாணப் பிரதேசத்திலேயே கந்தபுராண கலாசாரத்தின் தாக்கத்தினைத் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் மரபுவழிக் கல்விப் பாரம்பரியம் ஒடுங்கு திசையடைந்து கொண்டிருந்த காலத்தின் கடைசிக் கொழுந்தாகத் திகழ்ந்தவர் பண்டிதமணி அவர்கள். ஆதலினாலேயே அவரது வாழ்க்கையும்,

எழுத்தும், போதனைகளும் மரபுவழிக் கல்விமுறைகளோடு இணைந்து காணப்பட்டன. 1929 இல் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராகிய பண்டிதமணி அவர்கள் இலக்கியப் பணியிலும் கண்டனப் பணியிலும் ஈடுபட்டுவந்தார். 1940க்குப் பின்பு அவரது அறிவுப்புலம் இலக்கியத்துறையினின்றும் சமயத்துறைக்கு மாற்றம் அடைவதாயிற்று. இம்மாற்றத்திற்கு பொ.கைலாசபதி அவர்களின் தொடர்பே காரணம் என்றும் கூறலாம்.அதுவரை காலமும் கம்பராமாயணத்தில் தோய்ந்து வந்த பண்டிதமணி 1942க்குப் பின்பு கந்தபுராணத்தில் ஈடுபடலானார்.கம்பன் ஆட்சி செலுத்திய பண்டிதமணியிடத்தில் கச்சியப்பரின் அதிகாரம் மேலோங்கிற்று. கம்பனைக் கச்சியப்பருடன் ஒப்பிட்டு நோக்கும் பண்டிதமணி ஒரு கட்டத்தில் கம்பனை "மலடு" என்று கூறத்தக்க அளவுக்கு கச்சியப்பரிடம் பித்தாகிய நிலையிற் காணப்படுகின்றார்.

இத்தகு ஈடுபாடு 1955க்குப் பின்பு மேலும் அதிகரிப்பதாயிற்று. 1959 இல் பண்டிதமணி அவர்கள் உத்தியோக ஓய்வு பெற்றதும் அவரது வாழ்கைநெறி முற்றும் சமய நெறிப்படுவதாயிற்று. அந்நெறியே கந்தபுராண சமய கலாசார நெறியாகும். நாவலருக்கு பின்பு சோபை இழந்து காணப்பட்ட யாழ்ப்பாணத்துக்கு கந்தபுராண கலாசாரத்தை மீண்டும் புத்துயிர் பெற வைத்தவர் பண்டிதமணி ஆவார். அன்னார் பிறந்த கிராமச் சூழலும் அதற்கு கால்கோளாயிற்று. வாழையடி வாழையாக வந்த எமது கந்தபுராண கலாசாரத்தை நாம் முற்றிலும் இழக்க இருந்த காலத்தில் எமது கிராமங்களுக்குள் மட்டுவில் ஒன்று மட்டுமே யாதும் அஞ்சாது மயக்க முறாது சைவத்தையும் தமிழையும், சுருங்கக் கூறின் எமது கலாசாரத்தைப் பேணி வளர்த்து வந்தது என்ற கருத்தும் ஈண்டு நோக்கற்பாலது. பண்டிதமணி அவர்கள் தனங்கிளப்பு காரைத்தா வீநாயகர் ஆலயத்திற் கந்தபுராணப் படிப்பை ஆரம்பித்து வைத்திருக்கின்றார். அங்கு ஆண்டு தோறும் தொடர்ந்து முன்று மாதங்கள் புராணப் படிப்பு நடந்து வந்திருக்கின்றது. பண்டிதமணி அவர்களுக்கு தொய்வு நோய் ஏற்படுங் காலங்களில் அவர் கீரிமலை சிறாப்பர் மடத்தில் தங்கியிருப்பது வழக்கம். அங்கு நடைபெறும் கந்தபுராணப் படிப்பிலும் பண்டிதமணி கலந்து கொள்வார்கள். இவ்வாறே கந்தவனக் கடவை முருகன் கோயிலிற் புராணப் படிப்பு நடைபெறும் காலங்களிலும் அங்கு செல்வது பண்டிதமணியின் வழக்கமாக இருந்தது. பண்டிதமணியின் பிற்கால வாழ்க்கை கந்தபுராண சாரத்தை புரிந்து விளக்கம் கொடுக்கும் போக்கிற் காணப்பட்டது. அதனால் அவருக்கு சித்தாந்த தெளிவு பெருகுதலும் எளிதாயிற்று

அவர் எழுதிய கந்தபுராண போதனை கந்தபுராண கலாசாரம், தட்ச காண்ட உரை, தெய்வயானை திருமணம் (வெளிவரவுள்ளது), பத்திரிகைளில் வெளிவந்த கந்தபுராணக் கட்டுரைகள் ஆகியன பண்டிதமணி அவர்களுக்கு கந்தபுராணத்திலிருந்த ஈடுபாட்டினையும் அதிலுள்ள ஆழ்ந்த புலமையினையும் எடுத்துக் காட்டுவனவாகும்.

11ஆம் நூற்றாண்டில் பராக்கிரமபாகு மன்னன் பூஜாவலிய என்ற நூலுக்குக் கொடுத்த கௌரவம் போன்று 25-01-1967 இல் பண்டிதமணி தட்சகாண்ட உரை நூலை யானை மீது ஏற்றி பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குப் பவனிவந்த காட்சி, அதனால் ஏற்பட்ட "மவுசு" என்பன கந்தபுராண கலாசாரத்தின் விரிவினையை விளக்குகின்றன. பண்டிதமணி அவர்கள் கந்தபுராணப் பரவலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் கந்தபுராண கலாசார நிலைப்பாட்டிற்கும் ஆற்றிய பணிகள் விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயங்களாகும்.

**சான்று குறிப்புகள்.**


1. சி.க.சிற்றம்பலம் - "பௌத்தத்திற்கு முந்திய ஈழத்து இந்துமதம்", சிந்தனை (புதிய தொடர்) தொகுதி I, இதழ் II, 1983.
2. சி.க.சிற்றம்பலம் - "இலங்கையில் ஆதிபிரமிக் கல்வெட்டுக்கள் காட்டும் இந்து மதம், சிந்தனைத் தொகுதி I , இதழ் II, 1976.
3. முருகு என்ற தமிழ்த் திராவிடச் சொல்லினின்றும் தோன்றிய முருகன் (முருகு+ஆன்) என்ற பெயர் ஆகும்.
4. ஆ. வேலுப்பிள்ளை-தமிழர் சமய வரலாறு – சென்னை பாரி புத்தகப் பண்ணை 2 ஆம் பதிப்பு - 1985, பக்கம் 222.
5. மேலது பக்கம் 223.
6. சி.கணபதிப்பிள்ளை - கந்தபுராண கலாசாரம் யாழ்ப்பாணம் 1959, பக்கம் 16.
7. மேலது பக்கம் 18.
8. ஆறுமுகநாவலர் - யாழ்ப்பாணத்துச் சமய நிலை.
9. இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் பாராட்டு விழா மலர் - யாழ்ப்பாணம் வஸ்தியன் அச்சகம், 1978, பக்கம் 11.


**(நன்றி: பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவு மலர் - 1989)**

# இந்து சமய விழாக்களும் விரத நாட்களும்

**நவம்பர் – 2015**

| | | |
|---|---|---|
| 07 – | சனி | : ஏகாதசி விரதம் |
| 09 – | திங்கள் | : பிரதோஷ விரதம் |
| 10 – | செவ்வாய் | : தீபாவளி |
| 11 – | புதன் | : அமாவாசை விரதம், கேதாரகௌரி விரத நிறைவு |
| 12 – | வியாழன் | : கந்தசஷ்டி விரதாரம்பம் |
| 15 – | ஞாயிறு | : சதுர்த்தி விரதம் |
| 17 – | செவ்வாய் | : கந்தசஷ்டிவிரத நிறைவு |
| 22 – | ஞாயிறு | : ஏகாதசி விரதம் |
| 23 – | திங்கள் | : பிரதோஷ விரதம் |
| 25 – | புதன் | : பூரணை விரதம், திருக்கார்த்திகை விரதம் குமாராலய தீபம், சர்வாலயதீபம் |
| 26 – | வியாழன் | : விஷ்ணுவாலய தீபம் விநாயக விரதாரம்பம் |
| 29 – | ஞாயிறு | : சங்கடஹர சதுர்த்தி |

**டிசம்பர் – 2015**

| | | |
|---|---|---|
| 05 – | சனி | : நாவலர் நினைவு தினம் |
| 07 – | திங்கள் | : ஏகாதசி விரதம் |
| 08 – | செவ்வாய் | : பிரதோஷ விரதம் |
| 11 – | வெள்ளி | : அமாவாசை விரதம் |
| 15 – | செவ்வாய் | : சதுர்த்தி விரதம் |
| 16 – | புதன் | : விநாயகர் விரதாரம்பம் |
| 17 – | வியாழன் | : திருவெம்பாவை ஆரம்பம் |
| 21 – | திங்கள் | : சுவர்க்க வாயில் ஏகாதசி விரதம் |
| 22 – | செவ்வாய் | : கார்த்திகை விரதம் |
| 23 – | புதன் | : பிரதோஷ விரதம் |
| 25 – | வெள்ளி | : பூரணை விரதம் |
| 26 – | சனி | : திருவெம்பாவை நிறைவு |
| 29 – | செவ்வாய் | : சங்கடஹர சதுர்த்தி |

# முருக வழிபாடு – தோற்றமும் சிறப்புகளும்

கி. புண்ணியமூர்த்தி

முருகனை முழுமுதற் கடவுளாக வணங்கும் சமயம் கௌமாரமாகும். தமிழரின் முழுமுதற் கடவுளாகவும் முருகனைக் கொள்வதுண்டு. சிவனின் நெற்றிக் கண்களிலிருந்து புறப்பட்ட பொறிகளின் மூலம் சரவணப் பொய்கையில் முருகன் தோற்றம் பெற்றான் எனக் கந்தபுராணம் கூறுகிறது.



வேத இலக்கியங்களில் "பிரமணிய" என்னும் கருத்து முருக வழிபாட்டைக் குறிப்பதாகவே காணப்படுகிறது. புராணக் கதைகளில் அசுரர்களை அழித்து உலகை உய்விக்கும் பொருட்டே முருகன் தோற்றம் பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது. குஷானர், குப்தர், யௌதேயர் ஆகியோரின் காலங்களிலும் முருக வழிபாடு இருந்ததற்குரிய ஆதாரங்கள் உண்டு. இவர்களின் நாணயங்களில் முருகனின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. குப்தர் காலமளவில் கௌமார நெறி பரத கண்டமெங்கும் பரவியது. மன்னர்கள் பலரும் "குமார", "ஸ்கந்த" என்னும் பெயர்களைப் பெற்றார்கள். "குமார சம்பவம் " எனும் காளிதாசரின் புகழ்மிகு காவியம் இக்கால கௌமார நெறியின் வளர்ச்சிக்குச் சான்று பகர்கின்றது. தக்கனத்தில் குமாரக் கடவுளை "வப்பஸ்வாமி" "வப்பபட்டாரகர்" என அழைத்தனர். குப்த நாணயங்களில் மயில் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் கௌமார நெறி சிறப்புற்றிருந்தது. "சேயோன் மேய மைவரை உலகும்" எனத் தொல்காப்பியம் கூறி நிற்பதிலிருந்து இதனை அறிந்து கொள்ள முடிகிறது. ஐங்குறுநூற்றிலும், குறுந்தொகையிலும், அகநானூற்றிலும் வெறியாட்டம் பற்றிக் கூறப்படுகிறது. இவ் வெறியாட்டத்தில் ஆடுபவர் தன் கையில் வேலைக்கொண்டு ஆடுவதால் வேலன் எனப்பட்டார். குறுந்தொகையில் முருகக் கடவுளுக்கு ஆட்டைப் பலியாகக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. அகநானூற்றில் வேலுக்கு மாலை சூட்டி, சிவந்த தினை அரிசியை முருகனுக்குப் படைத்ததாகக் கூறப்படுகிறது. "வெல்லும் போரே வல்ல முருகன்" என மலைபடுகடாம் கூறுகிறது. சங்க இலக்கியங்களில் காணப்படும் "முருகு" என்ற சொல் முருகனையே குறிக்கிறது. முருகனுக்குக் கோயில் இருந்ததாகப் புறநானூற்றில் கூறப்படுகிறது. திருமுருகாற்றுப்படையில் ஆறுபடை வீடுகள் பற்றிக் கூறப்படுகின்றது. கச்சியப்பர், அருணகிரிநாதர், குமரகுருபரர் போன்றோர் முருக வழிபாடுபற்றி விபரித்துக் கூறியுள்ளனர்.

பௌத்த கலாசாரத்தில் முருக வழிபாட்டின் செல்வாக்கு மிகுந்து காணப்படுகிறது. பௌத்தர்களின் "ஓம் படைக்கிழவி" யில் திரிரத்தினங்களோடு சிவன், விஷ்ணு, குமாரக் கடவுள் முதலியோரும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. திருச்செந்தூர்ப் புராணம் முருகனின் பெருமையை சிலாகித்துக் கூறுகின்றது. திருச்செந்தூர் ஆறுபடை வீடுகளில் ஒன்று. இது நக்கீரரால் துதிக்கப்பட்டதாகும். மேலும் சங்க இலக்கியங்களில் ஆல் கெழு கடவுளின் புதல்வன், மலைமகளின் மகன், கொற்றவையின் சிறுவன் எனும் பெயர்களால் முருகன் அழைக்கப்படுகின்றான்.

முருகனின் தோற்றத்தையும் வரலாற்றினையும் கந்தபுராணம் விரிவாகக் கூறுகின்றது. சிவாகமங்கள் இருபத்தெட்டில் காமிகம், காரணம், சுப்ரபேதம் ஆகிய ஆகமங்கள் முருகனின் வரலாறு பற்றிக் கூறுகின்றன. குமார தந்திரம் எனும் ஆகமம் முருகனின் வரலாறு, விழா, பூசை, விரதம் முதலியவற்றை விபரித்துக் கூறுகிறது. சன்மதங்களை வகுத்த சங்கரர் கூட ஒரு சிறந்த முருக பக்தர் ஆவார். இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளாலும் முருகன் போற்றப்படுவது சிறப்பம்சமாகும். முருக வழிபாடு பற்றிக் கூறும் ஏனைய முக்கிய நூல்களாக ஸ்கந்த புராணம், சுப்பிரமணிய புஜங்கம், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தர் கலிவெண்பா, கந்தர்சஷ்டி கவசம், கதிரைமலைப் பள்ளு, வேல் விருத்தம், மயில் விருத்தம் போன்றவற்றைக் கொள்ளலாம்.

'சிவ, உமை, ஸ்கந்த வடிவங்கள் ஒரு திருவுருவத்தில் வெளிப்படும் வடிவம் சோமாஸ்கந்தர் வடிவமாகும்'. இவ்வமைப்பு பல்லவ ஓவியங்களிலும் ஏனைய தமிழகச் சிற்பங்களிலும் காணப்படுகிறது. சோழர் காலத்திற்குரியவனாகக் கண்டெடுக்கப்பட்ட பொலநறுவைப் படிமங்களிலும் இவ்வடிவம் காணப்படுகின்றது.

முருகனுக்குரிய வழிபாட்டுத் தலங்களாகச் சோழர் காலக் கடம்புமலை, பாலசுப்பிரமணியர் கோயில், ஆறுபடை வீடுகள் என்பன தமிழ் நாட்டிலும், நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, மண்டூர், வெருகல், சித்தாண்டி, திருக்கோயில், கதிர்காமம், குமாரபுரம் போன்றவற்றை ஈழத்திலும் குறிப்பிடலாம்.

தென்கிழக்காசிய நாடான சம்பாவில் முருகனை 'கார்த்திகேய குமர' எனும் பெயரால் வழிபட்டனர். இதுவரை கண்டெடுக்கப்பட்ட முருகனின் உருவச்சிலைகள் இரண்டில் வாகனமாக மயிலும் வேறு இரண்டிலே காண்டாமிருகமும் காணப்படுகின்றன. பொதுவாக யானை, மயில், சிங்கம், மகரம் என்பவையும் முருகனது வாகனங்களாகக் கொள்ளப்படுகின்றன. முருகனுக்குரிய ஆயுதங்களாக வஜ்ஜுராயுதம், கத்தி, கோழி, வரதம், யபமாலை, ஸ்விஸ்திகம், கேடயம், கரும்பு, வில்,சூலம், பரசு, ஆரணிக்கட்டை, சக்கரம், அங்குசம், பாசம் என்பன காணப்படுகின்றன. முருகனுக்குரிய மாலைகளாக, புஸ்பமாலை, அரை நூல் மாலை, தாமரை மாலை என்பன காணப்படுகின்றன. முருகனுக்குரிய முத்திரைகளாக அபயம், லோவம் என்பன உள்ளன.

முருக கடவுளின் வடிவங்கள் பதினேழு உள்ளன. அவையாவன: சுப்பிரமணியர், ஸ்கந்தர், அக்கினியாதர், சௌரமேயர், காங்கேயர், சரவணோத்பவர், கார்த்திகேயர், குமாரர், ஷண்முகர், தாரகாரி, சேகானீ, குகன், பிரமஹஸாரி, தேசிகர், கிரௌசர், மயில்வாகனர், வேலாயுதர் என்பனவாகும்.

முருகனின் பிரதிமா லட்சணத்தைப் பார்ப்போமானால் அழகிய இளைஞனாகக் காட்சியளிக்கும் குமரன் ஆறுமுகங்களும், பன்னிருகைகளும், வேற்படையும் உடையவனுமாய் வள்ளி, தெய்வானை எனும் தேவியரை இரு மருங்கிலும் வைத்து படமெடுத்த நாகத்தின்மேல் நின்றாடும் மயில்வாகனத்தில் அமர்ந்த தோற்றத்தில் செந்நிறமாகக் காட்சியளிக்கிறார்.

**(இந்து நாகரிகம் – மாமன்ற வெளியீடு)**

# கார்த்திகை விளக்கீடும் வழிபாடும்

**கலாநிதி ம. பாலகைலாசநாதசர்மா**
முதுநிலை விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்



**அறிமுகம்:**

கார்த்திகை விளக்கீடு என்பது கார்த்திகை மாத பௌர்ணமி நாளும் கார்த்திகை நட்சத்திரமும் சேர்ந்த திருக்கார்த்திகை நாளில் இந்துக்கள் தமது இல்லங்களிலும் கோயில்களிலும் பிரகாசமான தீபங்களை ஏற்றி மகிழ்ச்சியாகக் கொண்டாடும் புனிதமான,தெய்வீகம் நிறைந்த தீபத் திருநாள் ஆகும்.

தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் கார்மேகம் சோணை மழை பொழியும் மாதம் கார்த்திகை மாதம். கார் என்றும், கார்த்திகை என்றும் வழங்கப்படும் காந்தள்பூ மிகுதியாக மலரும் காலம் கார்த்திகை எனப்படும். விண்மீன் கூட்டம் கீழ்வானில் மாலையில் தோன்றும் மாதம் கார்த்திகை மாதமாகும். கார்த்திகை மாதம் பிறந்தாலேயே( தமிழ் கலண்டர்படி) மாலை வேளைகளில் வீட்டின் இரு பக்கங்களிலும் தீபமேற்றி வழிபடும் வழக்கம் உண்டு.

**கார்த்திகை நாள்**

பண்டைய தமிழர்கள் ஒரு மாதத்தில் உள்ள நாட்களை 27 நாள்மீன் பெயர்களால் வழங்கி வந்தனர். அந்த நாள்மீன்களில் ஒரு நாள்மீன் கார்த்திகைநாள். இவ்வாறு ஒவ்வொரு மாதமும் வருகின்ற கார்த்திகைநாள் முக்கியமான நாளாக இந்துக்களால் வழிபடப்பட்டு வருகின்றது.

**கார்த்திகை விழாவின் சிறப்பு**

கார்த்திகை மாதத்தில் வருகின்ற கார்த்திகை நாள் ஏனைய கார்த்திகை நாட்களினை விடவும் விமர்சையாகவும் கோலாகலமாகவும் இந்துக்களால் தமிழர்களால் கொண்டாடப் பட்டு வருகின்ற ஒரு விழா. மாலைவேளையில் வீடுகளின் வெளிப்புறங்களிலும், வீட்டு முற்றத்திலும் விளக்கேற்றிக் கொண்டாடுவார்கள். திருக்கார்த்திகை தினத்தன்று ஆலயங்களில் தீபத்திருவிழா நடைபெறும். பக்தர்கள் தீப விளக்குகள் ஏற்றிவைத்து வழிபடுவர். ஆலயத்தின் முன்புறத்தே வாழை மரம் நட்டு தென்னோலைகளால் அதனை சுற்றி அடைத்து சொக்கப்பனைக்கு அக்கினியிட்டு சோதி வடிவாகக் காட்சியளிக்கச் செய்து சிவபெருமான் சோதிப்பிழம்பாகத் தோன்றிய காட்சியை நினைவு கூர்ந்து வழிபடுவர். இல்லங்களை விளக்குகளால் அலங்கரித்து ஒளி வெள்ளத்தில் இல்லங்களை மிதக்கவைத்து இறைவனை அக்கினியின் ரூபமாக வழிபடுவர்.

கார்த்திகை விழாவை குமராலய தீபம், சர்வாலய தீபம், விஷ்ணுவாலய தீபம் என மூன்றாக ஆலயங்களிலும் வீடுகளிலும் கொண்டாடுவர்.

**குமராலய தீபம்:** முருகன் ஆலயங்களில் கொண்டாடப்படும். கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரம் கூடிவரும் நாள்.

**விஷ்ணுவாலய தீபம்:** விஷ்ணு ஆலயங்களில் கொண்டாடப்படும். கார்த்திகை மாதத்தில் ரோகிணி நட்சத்திரம் கூடிவரும் நாள்.

**சர்வாலய தீபம்**:ஏனைய இந்து ஆலயங்களிலும் வீடுகளிலும் கொண்டாடப்படும். கார்த்திகை மாதத்து முழுமதி திதி நிறைந்த நன்னாளாகும்.

சிவனின் சோதிப்பிழம்பான வடிவமே சொக்கப்பானை ஆகும். படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மனும், காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவும் நானே பெரியவன் என்று வாதாடிப் பலவருடங்கள் போரிட்டனர். சிவபெருமான் சோதிப்பிழம்பாகத் தோன்றினார். அடியையும் முடியையும் தேடும்படி அசரீரி கூறியது. இருவரும் அடிமுடி தேடிக் காணமுடியாமல் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று ஏற்றுக்கொண்டனர். அவர்கள் இருவரும் தாம் கண்ட சோதியை எல்லோரும் காணும்படி காட்டியருள வேண்டும் என்று விண்ணப்பிக்க அவர் திருக்கார்த்திகை நட்சத்திரத்தன்று காட்டியருளினார். இந்தத் தத்துவத்தை விளக்குவதே கார்த்திகை விளக்கீடு ஆகும்.

பெரும்பாலும் கார்த்திகை கார்த்திகையான குமராலய தீபமும், சர்வாலய தீப நாளும் ஒன்றாக வரும். விஷ்ணுவாலய தீபநாள் மறுநாளே வருவதுண்டு.

**விரதம் அனுஷ்டிக்கும் முறை**

இதன் முதல் நாளான பரணி நட்சத்திர நாளில் சைவ சமயிகள் பகலில் மட்டும் ஒருபொழுது உண்டு கார்த்திகையன்று அதிகாலையில் நீராடி இறைவனை வழிபட்டு நீர் மட்டும் அருந்தி இரவு கோயிலுக்குச் சென்று தரிசனம் பெறுவர். மறுநாட் காலையில் காலைக்கடன்களை முடித்து நீராடி பாரணை அருந்தி விரதத்தை நிறைவு செய்வர். பன்னிரண்டு ஆண்டுகள் இவ்விரதம் இருப்பவர்கள், வேண்டும் வரங்களைப் பெறலாம் என்பது புராணமரபு நிறைந்த ஐதீகமாகும்.

**வீடுகளை அலங்கரிக்கும் முறை**

பௌர்ணமி நிலவு கிழக்கு வானில் தென்படும் வேளையில் வீட்டு வாசலில் வாழைக் குற்றி நாட்டி வைத்து அதன் மேல் தீப்பந்தம் ஏற்றியும், வீடுகளுக்குள்ளும் வெளியிலும் சிட்டி விளக்குகளில் தீபமேற்றி நேர்த்தியாக அலங்கரித்து வீடுகளை தீபங்களால் அழகுபடுத்தியும் வழிபடுவர்.வீடுகளின் எல்லாப் பாகங்களிலும் விளக்கு அல்லது தீப்பந்தம் ஏற்றி வீட்டின் எல்லாப்பகுதிகளுமே விளக்கிட்டு வெளிச்சம்நிறைந்த நாளாக அமையவேண்டும். இதனாலயே விளக்கு + இடு என்பது விளக்கீடு என வரலாயிற்று.





**கார்த்திகை நட்சத்திரம்**

கார்த்திகை நட்சத்திரத்தன்று பூரணை கூடுகின்ற மாதம் கார்த்திகை ஆகும்.இதனால் இக்கார்த்திகை நாள் திருக்கார்த்திகை எனப்படுகிறது. கார்த்திகை நட்சத்திரம் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களைக் கொண்டிருந்த போதிலும் அதிலுள்ள ஏழு நட்சத்திரங்கள் பிரகாசமானவை. இதிலுள்ள மிகப்பிரகாசமான ஆறு நட்சத்திரங்களே கார்த்திகை நட்சத்திரக் கூட்டம் (Pleiades) எனப்படுகிறது.

**சங்கநூல்களில் கார்த்திகை பற்றிய குறிப்பு**

கார்த்திகை மாலை-விளக்கு

வீரை என்னும் ஊரிலிருந்துகொண்டு ஆண்ட வேளிர்குடி அரசன் வெளியன்.

அவன் மகள் தித்தன்.

அவன் முரசில் திரி போட்டு விளக்கேற்றி வைத்தான். மாலையில் அந்த விளக்கை ஏற்றியபோது வெண்சங்கு ஊதப்பட்டது. பனி பொழிந்தது. (இந்தக் காலத்தில் போருக்குச் சென்ற தன் தலைவன் மீள்வான் எனத் தலைவி நம்புகிறாள்.)

இது சங்க காலத்தில் நிகழ்ந்த கார்த்திகை விழா ஒளிவிளக்கை எடுத்துக்காட்டுகிறது.

கார்த்திகை பற்றிச் சங்கப் பாடல்களும் குறிப்பிடுகின்றன.

கார்த்திகை என்னும் விண்மீன் கூட்டம் காதில் அணியும் மகரகுண்டலம் போல ஒளிர்ந்தது.

அழல் என்பது கார்த்திகை நாளைக் குறிக்கும். ஆடு என்னும் மாதத்தில் வரும் அழல்-நாள் என்பது, மேடம் என்னும் சித்திரை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திர நாளைக் குறிக்கும்.



ஆரல் என்பது கார்த்திகை மாதத்தில் தோன்றும் கார்த்திகை என்னும் விண்மீன் கூட்டத்தைக் குறிக்கும். இந்த மீன் கூட்டத்தின் வெண்ணிறம் போல முசுண்டைப் பூ மலர்ந்ததாம். ஆரல் என்னும் பெயரிலும் சங்கப்பாடல்களில் குறிப்புகள் உள்ளன.

எரி என்பது கார்த்திகை மாதம். சையம் என்னும் மேற்குத் தொடர்ச்சி மலையில் மழை பொழிந்து வைகை ஆற்றில் வெள்ளம் வரும் காலம்.

**சூடாமணி, நிகண்டு கார்த்திகை பற்றிய சொற்கள்**

கார்த்திகை மாதத்தைக் குறிக்கும் சொற்கள்: தெறுகால், தேள், விருச்சிகம்

கார்த்திகை நாளைக் குறிக்கும் சொற்கள் :

அங்கி, அளக்கர், அளகு, அறுவாய், ஆரல், இறால், எரிநாள், நாவிதன்

## பூஜையின்போது நாம் கைகளைக் குவிப்பதற்கும்,கீழே விழுந்து வணங்குவதற்கும் பொருள் என்ன?

நமது வலது கரம் உணவு உண்ணுதல், எழுதுவது போன்ற நல்ல காரியங்களுக்குப் பயன்படுகிறது. நமது இடது கரமோ ஈனமான காரியங்களுக்குப் பயன்படுகிறது. ஆனால் ஆண்டவன் முன்னிலையில் உயர்வு-தாழ்வு இல்லை. எல்லோரும் சமம். அதை உணர்த்தவே, இரண்டு கைகளையும் ஒன்றாகச் சேர்த்து ஆண்டவனைப் பார்த்துக் கும்பிடுகிறோம்.

கடவுள் எல்லாவற்றையும் தன்னிடம் விட்டுச் சரண் அடைந்து நிற்பவர்களிடம் கருணை காட்டுகிறார். அவர்களுக்கு உதவ மனம் இளகி முன்வருகிறார். “என் செயலால் ஆவது ஒன்றும் இல்லை. எல்லாம் உன்னுடையவை. உன்னுடைய ஆளுகைக்கு என்னை விட்டு விட்டேன்” என்று உடம்பைத் தரையோடு தரையாகக் கிடத்தி வணங்கி, எல்லாச் செயல்களும் ஒடுங்கி, பணிவின் அடையாளமாக இருக்கும் நிலையில் ஆண்டவன் நம்மை ஏற்றுக் கொண்டு அருள்புரிய முன்வருகிறான்.

காலையில் வெயிலில் உடம்பில் சூடு முழுவதுமாக உறைக்கும். நடுப்பகலிலோ தலையில் மட்டுமே வெயில்படும். அப்போது தலைக்கு மட்டும் மறைப்பு இருந்தால் போதும். பண்படாத மனத்துக்குப் பலவிதத்திலும் பாதுகாப்பு தேவை. பண்பட்டு உயர்ந்த உள்ளத்துக்கு ஆண்டவன் அருள்மட்டும் இருந்தால் போதும் இப்படி மனத்தை உயர்த்திக் கொள்வதைக் காட்டும் அடையாளமாகவே இரண்டு கைகளையும் தலைக்குமேல் உயர்த்திக் குவித்து ஆண்டவனை வணங்குகிறோம்.

**(திருமுருக கிருபானந்த வாரியார் - பெசன்ட் நகர் வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நிகழ்த்திய இராமாயண உரையிலிருந்து)**

## வீட்டில் கடவுளைப் பூஜிப்பதற்கும், கோயிலுக்குச் சென்று வழிபடுவதற்கும் என்ன வித்தியாசம்?

நமது திருக்கோயில்களில் உள்ள திருஉருவங்கள் தேவர்களாலும், முனிவர்களாலும், நால்வர்கள், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப்பட்டு- துதிக்கப்பட்ட காரணத்தால் துன்பம் அகற்றி வரங்களை அளிக்கின்றன. இத்தகைய தனிச்சிறப்பைப் பெற நாம் ஆலயத்துக்குச் சென்று வழிபடுவதே மிக உயர்ந்ததாகும்.

**-திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் (-வாரியார் வாக்கு- என்ற புத்தகத்திலிருந்து)**

# முருகப்பெருமானின் திருநாமங்கள்



முருகக் கடவுளுக்கு கந்தன், குமாரன், வேலன், சரவண பவன், ஆறுமுகன் குகன், விசாகன், குருநாதன் என்று எத்தனையோ பெயர்கள் இருக்கின்றன. எப்படி முருகனுக்கு மட்டும் இத்தனை பெயர்கள் என்று நமக்குள் பல கேள்விகள் எழலாம். ஒவ்வொரு பெயருக்கும் ஒரு சில காரணங்கள் இருக்கிறது. ஒரு சில பெயர்களுக்கு மட்டுமாவது அதற்கான காரணத்தை நாம் தெரிந்து கொள்ளலாமே!

**முருகன்**

முருகு என்றால் அழகு என்பார்கள். இந்த சொல்லுக்கு இளமை, அழகு, மணம், கடவுள் தன்மை, தேன், என்று பல பொருள்களும் இருக்கிறது. ஆதலால் முருகன் மாறாத இளமையும், அழியாத அழகும், குறையாத நறுமணமும் நிறைந்த தெய்வத்தன்மையும், தெவிட்டாத இனிமையும் உடையவன் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

மெல்லின, இடையின, வல்லின மெய் எழுத்துக்களுடன் "உ" எனும் உயிரெழுத்து ஒவ்வொன்றுடனும் சேர்ந்து முருகு என்றாயிற்று. இம்மூன்றும் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி இவைகளைக் குறிக்கும் என்றும் சொல்கிறார்கள்.

**சரவண பவன்**

சரவணபவ என்கிற ஆறு அட்சரத்தையுடையவன். சரவணபவன் என்றால் நாணல் சூழ்ந்த பொய்கையில் தோன்றியவன் என்றும் பொருள்படும். ச என்றால் மங்களம், ர என்றால் ஒளி கொடை, வ என்றால் சாத்துவீகம், ந என்றால் போர், பவன் என்றால் உதித்தவன் என்கிற பொருளில் மங்களம்,ஒளிக்கொடை, சாத்வீகம், வீரம் போன்ற சிறப்பியல்புகளுடன் தோன்றியவன் என்றும் கூறுவர்.

சகரம் என்றால் உண்மை, ரகரம் என்றால் விஷய நீக்கம், அகரம் என்றால் நித்யதிருப்தி, ணக்ரம் என்றால் நிர்விடயமம், பகரம் பாவ நீக்கம்,வகரம் என்றால் ஆன்ம இயற்கை குணம், என்றும் கூறுவார்கள்.

**ஆறுமுகம்**

சிவ பெருமானுக்குள்ள ஐந்து முகங்களுடன் அதோமுகம் சேர்ந்து ஆறுமுகங்களானதால் ஆறுமுகம் எனும் பெயர் வந்தது. சிவத்திற்குரிய தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜதம், ஈசானம் என்ற ஐந்து முகங்கள். இத்துடன் சக்தியின் அதோமுகமும் சேர்ந்தது. முருகன் சிவ ஸ்வரூபமாகவும், சக்தி ஸ்வரூபமாகவும் சேர்ந்து விளங்குகிறான் என்பதையே இது உணர்த்துகிறது. திரு, புகழ், ஞானம், வைராக்கியம், வீரியம், ஐஸ்வர்யம் என்பவைதான் ஆறுமுகங்கள் என்று சொல்பவர்களும் உண்டு.

**குகன்**

மனமாகிய குகையில் இருப்பவன். தகராகாசத்தில் வசிப்பவன். அடியார் மனக் கோவிலில் தங்கிடுபவன்.

**குமாரன்**

கு எனும் அறியாமையாகிய மனப்பிணியை மாறன் அழிப்பதால் குமாரன் ஆனான் என்பார்கள். ஒரு சிலர் கு என்றால் அறுவறுப்பு, மாரன் என்றால் நாசம் செய்பவன் என்றும் பொருள் சொல்கிறார்கள்.

**கந்தன்**

கந்து என்றால் நடுவில் இருப்பது. சிவனுக்கும் உமையாளுக்கும் நடுவில் இருப்பதால் கந்தன் என்கிற பெயர் ஏற்பட்டது. ஸ்கந்தம் என்றால் தோள் என்ற அர்த்தமும் உண்டு. இதற்கு வலிமையுடையவன் என்றும் சொல்கிறார்கள்.

**விசாகன்**

விசாகன் என்றால் பட்சியின் மேல் சஞ்சரிப்பவன் என்று பொருள். வி-பட்சி, சாகன்-சஞ்சரிப்பவன் மயில் பட்சியை வாகனமாகக் கொண்டவன். முருகனுக்கு வாகனமாகவும், கொடியாகவும் இருப்பவை மயிலும், சேவலும். இவை இறைவனிடம் காட்டும் ஒப்பற்ற கருணையைக் குறிக்கிறது.

விசாக நட்சத்திரத்தில் பிறந்தவன் முருகன். ஆறு விண்மீன்களைக் கொண்டது விசாகம். முன் மூன்றும் பின் மூன்றும் கொண்டு விளங்குவது. முன் மூன்றின் நடுவில் உள்ளது, ஒளி மிக்கது. ஆறுமுகனின் முகங்கள் முன் மூன்றும் பின் மூன்றுமாக இருப்பது விசாகத்தின் வடிவே என்றும் சொல்வார்கள்.

**வேலன்**

வேலன் என்பது வெற்றியத் தருகிற வேலைக் கையில் ஏந்தியதால் வந்த பெயர். முருகனுக்கு அடையாளமும் இந்த வேல்தான்.

**குருநாதன்**

பிரம்மவித்யா மரபுகளை விளக்கும் ஆசிரியன். சிவனுக்கும் அகஸ்தியருக்கும், நந்திதேவருக்கும் உபதேசித்தவன் என்பதால் குருநாதன் ஆனார்.

**சுப்பிரமணியம்**

சு என்றால் ஆனந்தம். பிரஹ்ம்-பரவஸ்துந்ய- அதனின்றும் பிரகாசிப்பது முருகன். இன்பமும் ஒளியும் வடிவாக உடையவன் என்பது இதன் அர்த்தம். புருவ மத்திய (ஆக்ஞை) ஸ்தானத்தில் ஆறு பட்டையாக உருட்சி மணியாக, பிரகாசம் பொருந்திய ஜோதிமணியாக விளங்குவதால் சுப்பிரமணியன். மேலும் விசுத்தி என்கிற ஸ்தானத்தில் ஆறுதலையுடைய நாடியாக அசையப் பெற்றிருப்பதற்கும் சுப்பிரமணியம் என்று பெயர். ஆறு ஆதாரங்களை சண்முகம் என்றும் ஆறுதலாகிய உள்ளமே சுப்பிரமணியம் என்றும் சொல்லப்படுகிறது.

**வேறு சில பெயர்கள்**

கார்த்திகைப் பெண்கள் வளர்த்ததால் கார்த்திகேயன் என்றும், அப்பெண்களுக்கு வாகுலை என்ற மற்றொரு பெயர் உண்டென்பதால் வாகுலேயன் என்றும், ஆண்டிக் கோலத்தில் ஞானப்பழமாக விளங்குவதால் பழநி என்றும் தனது அடியவர்களை உற்ற வேளையில் வந்து காக்கும் சிறப்பால் வேளைக்காரன் என்றும், சிவன், சக்தி, திருமால் மூவரையும் இணைக்கும் தெய்வமாக இருப்பதால் மால் முருகன் என்றும் பெயர்கள் வழங்கப்படுகிறது. இது தவிர இன்னும் எத்தனையோ பெயர்கள் முருகனுக்கு வழங்கப்படுகிறது. இந்த முருகக் கடவுள் தமிழர்களால் தமிழ்க் கடவுள் என்றும் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

நன்றி: முத்துக்கமலம் (இணையம்)

# உள்ளத்தை ஒளிப்படுத்தும் திருநாள் தீபாவளி

திருமதி நாச்சியார் செல்வநாயகம்

தீப + ஆவலி = தீபாவலி, ஆவலி என்பது வரிசை எனப்படும். தீப ஆவலி ஒளிகளின் வரிசை என்பதாகும். இது ஐப்பசி மாதத்து கிருஷ்ண பட்ச சதுர்த்தசி தினத்தில் கொண்டாடப்படுவது. நரகாசுரனை வதம் செய்தமையால் நரக சதுர்த்தசி எனவும் கூறப்படுகின்றது.

இத்திருநாள் பற்றிய பல ஐதிகங்கள் உள. அவற்றில் மக்களிடையே செல்வாக்குப் பெற்ற கதை வருமாறு. நரகாசுரன் என்ற அசுரன் பிரமனைக்குறித்து கடுந்தவமிருந்து பெறுவதற்கரிய பெரும் வரங்களைப் பெற்றான். வரங்களின் வலிமையால் செருக்குற்று பாதாளம் பூவுலகம் தேவலோகம் ஆகிய உலகங்களை அழித்து அங்குள்ளவர்களையும் துன்புறுத்தினான். முக்கியமாக தேவர்க்கரசனாகிய இந்திரனோடு போர் புரிந்து அவனைத் தோற்கடித்தான். அத்துடன் இந்திரனின் தாயாரின் காதணியாகிய மகரகுண்டலங்களையும் கவர்ந்து கொண்டான். பதரிகாசிரமத்து முனிவர்களும் நரகாசுரனால் துன்புறுத்தப்பட்டு வருந்தினர். இந்நிலையில் இந்திரனும் தேவர் கூட்டமும் பதரிகாசிரம முனிவர்களோடு துவாரகாபுரிக்குச் சென்று கிருஷ்ணனுக்குத் தமக்கு நரகாசுரனால் ஏற்பட்ட துன்பங்களை முறையிட்டனர். கிருஷ்ணபகவான் அவர்களின் முறையீட்டை ஏற்று தேவர்களையும் முனிவர்களையும் காக்கும் பொருட்டு நரகாசுரனுடன் போர் புரிய சத்தியபாமா என்ற தன் சக்தியுடன் புறப்பட்டார்.

இந்திரனுக்கும் நரகாசுரனுக்கும் கடும் சமர் நடந்து இந்திரனுடைய படைகள் நரகாசுரனுடைய படைகளை துவம்சம் செய்தது. இதனால் பெருங் கோபம் கொண்ட நரகாசுரன் பிரளயகால ருத்திரன் போன்று மிகவும் உக்கிரமான போர் புரிந்தான். அத்தருணம் அவன் ஏவிய அஸ்திரங்களினால் கிருஷ்ண பகவான் சிறிது சோர்வுற்றார். இதைக்கண்ட சத்தியபாமா முதலில் பகவானைத்தேற்றி பின் எண்ணிறந்த பாணங்களைக் கொண்டு நரகாசுரனுடன் இடைவிடாது போர் தொடுத்தார். இதனால் நரகாசுரனுடைய உடலெங்கும் குருதி பெருகியது. இதனால் நரகாசுரன் சிறிது சோர்வுற்றானெனினும் அச்சோர்வை நீக்கி மீண்டும் அதி வன்மையோடு போர் புரியத் தொடங்கினான். அது கண்ட பகவான் தனது சக்ராயுதத்தை அவன் மீது ஏவினான். அது அவன் உடலைப்பிளந்து மீண்டது. இறக்கும் தறுவாயில் கிடந்த நரகாசுரன் கிருஷ்ண பகவானை நோக்கி “பகவானே, யான் இதுவரை உலகிற்குப் புரிந்த கொடுமைகள் அனந்தம். எனவே கொடியவனாகிய நான் இறந்து போகின்ற இந்நாளை என்றும், எங்கும் யாவரும் மங்களகரமாகக் கொண்டாடிச் சந்தோசமடைந்து இன்புறுதல் வேண்டும். இந்த வரத்தை தேவரீர் தந்தருள வேண்டும்” என்று வேண்டிக் கொண்டான். பகவானும் அவன் வேண்டுதலுக்கிரங்கி நரகாசுரனுக்கு பரமபதத்தையும் அளித்து, அந்நாளை தீமைகள் அழிந்த நாளாகக் கொண்டாடவும் அருள் புரிந்தார். எனவே நரகாசுரன் என்ற கொடிய அரக்கன் இறந்த தினமே தீபாவளியாகக் கொண்டாடப்படுகின்றது.

அன்பு ஒளிதான் ஆத்மா. அதை அறிய ஆணவத்தை நீக்க வேண்டும். நரகாசுரன் என்ற அரக்கன் ஆணவத்தினால் தேவர்களையும் முனிவர்களையும் கொடுமைப்படுத்தினான். ஆனால் அவன் பகவானின் சக்ராயுதத்தால் தாக்கப்பட்டு உயிர் பிரியும் நேரத்தில் ஆன்ம ஒளி பெற்றமையினால், தான் என்ற ஆணவம் அழிந்த காலத்தை கொண்டாடும்படி வேண்டுகின்றான். புராணங்கள் தெய்வீக வரலாறுகளைக் கூறுவன. தெய்வீக வரலாற்று ஓட்டத்தில் அசுரரை அழிக்கும் செய்திகளும் முக்கியத்துவம் பெறுவன. அகந்தையினால் மனம் இருண்டு அறியாமைப்பட்டு ஏனையோருக்கு துன்பம் விளைவிக்கும் தன்மையுள்ள அசுரர்களை அழிப்பது தெய்வத்தின் கடமை அல்லது நியதியாகப் புராணங்கள் கூறுகின்றன. இவ்வகையில் மனிதர்களாகிய நாம் நம் அகந்தையினால் செருக்குற்று அவலப்படாமல் மற்றவர்களுக்கு அன்பு செய்து வாழ வேண்டுமென்பதையே தீபாவளித்திருநாள் எடுத்து விளக்குகின்றது. அன்பே ஒளி; இவ் ஒளியை குடும்பத்திலும் சமூகத்திலும் நாட்டிலும் ஒன்றுடன் ஒன்று இணைந்த வகையில் செலுத்தும்போது பிரபஞ்சம் ஒளி பெறுகின்றது. இருளிலிருந்து ஒளிக்கும், சாவிலிருந்து சாவாமைக்கும், அறியாமையிலிருந்து எம்மை அறிவுக்கும், இட்டுச் செல்வாயாக என்பது உபநிடதத்தில் காணப்படும் முக்கிய பிரார்த்தனையாகும்.

இவ்வகையில் தீபாவளித்திருநாள் அகந்தை என்ற நம் நரகாசுரனை அழித்து அன்பு என்ற ஆன்ம ஒளியை வளர்க்கும் நாளாகும். அன்பின் மூலம் சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், பொறுமை, மன்னிப்பு, தயை எனப் பல ஒளிகள் நம்மில் வீசும். இதனால் ஆனந்தம் எனும் பேரொளி பிரகாசிக்கும். எனவே தீபாவலி என்பது அகந்தை அற்ற இடத்தில் மேலே கூறிய ஒளிகள் வரிசையாகப் பிரகாசிக்கும் என்பதனை எடுத்துக் கூறுவது. பேச்சு வழக்கில் தீபாவலி, தீபாவளி எனக் கூறப்பட்டு வருகின்றது. எனவே நாமும் இந்நன்னாளிலே அன்பொளி ஏற்றி உலகிலே சாந்தியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவோம்!

**ஐப்பசித் திங்கள் 24ஆம் நாள் (10.11.2015) தீபாவளி திருநாளாகும்.**

# வித்தையிற் சிறந்த வித்தகர் விபுலானந்தர்



சிவநெறிச் செல்வன், சைவநன்மணி, ஞானபாரதி
அமரர். இரா. மயில்வாகனம்

### அவதாரம்

மட்டு நகரை மாநக ராமென
கட்டுரை என்னாது காண்போர் போற்றும்
குணகடல் வளையிய கூர்மணல் பரந்த
கணம்பல சூழ்ந்த கவின் பெறு நகரில்
வயலும் வயல் சூழ் வாழை கமுகும்
கயல்கள் பாயும் கவின்கா னாறும்
நிழல்தாழ்ந் துதவும் அரசும் ஆலும்
காழ்பெறு கரும்பும் காவியும் சூழ்ந்த
மந்தை மேய்ந்து மதியம் படரும்
மருத நிலத்தின் மத்திய இடத்தில்
மேழித் துவசமும் மேன்மைச் சைவமும்
கேழில் விழாவும் கிளர்ந்து விளங்கும்
காரால் அணிபெறு காரைதீவில்
தகை பெறுசாமித் தம்பி என்பார்
பெண்புறு கற்பின் மடவரலாகும்
கண்ணகை அம்மன் பெயராம் கண்ணகியை
கண்டனர் கைப்பிடித்துப் பெற்ற சேயே
மயங்கா மதிமயில் வாகனப்பேர்
விளங்கும் விபுலா நந்தரா வாரே.

### வித்தையிற் சிறந்த வித்தகர்

இரும்பு நிகர் மனமதனை பொன்னாக்கி யுள்ளத்தில்
கருதியவெல் லாமளித்துக் கரைகாண விரும்பியவர்
பெருமாசா ளிங்குஞ்சித் தம்பியெனும் பெருந்தகை
அருகு சார்ந்து அடிவணங்கி ஆர்வமொடு கல்விகற்றார்

இலக்கியத்தை இலங்கவைக்கும் நாடறிந்த நன்னூலும்
நிலத் தறிந்த நித்தியமாம் சூடாமணி நிகண்டும்
பலிக்குயொதி வைத்திலிங்க தேசிகர்பால் தேறியபின்
கல்வித்துறை கல்முனையில் ஆங்கிலத்தை ஆரம்பித்தார்

மாநகராம் மட்டுநகர் மயில்வாகனர் படிப்புயர
போதகமும் மிகப்பொருளும் பொருந்திய அர்ச்மிக்கேலில்
கேட்போர்க்கு செவிதோட்கும் கேம்பிறிச்மா தேர்வினிலே
ஆட்சிபெற்று ஆசானாய் அவ்விடத்தே அமர்ந்தாரே

அந்திபடு நேரமோ அதிகாலை வேளையோ
அந்தகனாம் தர்மனுக்கு அதிசயமா மென்றிலையே
அன்னையார் ஆண்டுபல கழிய அவர் கைப்பட்டார்
அவர் கடமை ஆற்றியின் மேற்கொண்டார் கொழும்பிருக்கை

வளர்ந்தோர் கல்விவாழ் வளித்து மீதுற்று
வளமார் இடந்தனில் வயங்கு புத்தி ஓங்குமென
பிள்ளை தாமோதரனார் வித்துவான்கயி லாயபிள்ளை
தள்ளரிய கேண்மையோடு சங்கநூல்கள் கற்றுணர்ந்தார்

உலகமெல்லாம் மாயுத்தம் உற்றவர்கள் யாருமில்லை
பலகலைகள் கற்குமெண்ணம் பாலியர்க்கு நீங்கவில்லை
தமிழ் வளர்ந்த சங்கமத்தில் தனியாக எண்தமிழில்
பலகலையும் வாய்த்திட்ட பண்டிதராய்ச் சிறந்தாரே

ஓராயிரம் ஒன்பான் நூறுசேர் பதினேழில்
சாருமிசைச் சம்பத்தியார் கல்லூரி தனிலே
சீர்மிகுந்த விஞ்ஞானம் சிறப்பாசா னாய்விளங்கி
சாதுசர்வா நந்தாவுடன் சிவசிவா எனச் சேர்ந்தார்

நீர்க்குமிழி நிலையிலா வாழ்க்கையென ஆனந்த
சாதுவின் சம்பந்தமும் போதித்து புத்தியூட்ட
மேதக்க பி. எஸ். சி பட்டங்கள் பதராக
சார்வுற்றார் சென்னையில் தூய்மைசேர் துறவியாயே.

### சாதித்த சால்புகள்

புத்தியில் வித்தகனாய் பொலிவு புக்க
பொருந்துநெறி யவர்க்கோர்விந் தையன்றால்
சித்தாந்த நூல்களோடு தமிழில் மேவும்
சிறப்புறுகா வியங்கள் உறுத் துணர்வுகூட்ட
முத்தமிழ் நீந்துறை களிலூரி டத்தில்
முழுவிருப்புக் கொண்டுசிலம்ப தனில்நாட்டம்
வைத்ததனை ஆராய்ந்து இசை நுணுக்கம்
மலிந்தபெரும் யாழ்நூலை யாத்தளித்தார்

கற்பனையின் வேந்துகளி செகப்பிரி யார் செய்
கவினாரும் நாடகங்களை யெல்லாம்
அற்புதமாய்த் தமிழ்செய்து மதங்கசூளா
மணியென்னும் பெயர்சூட்டி பலர்போற்றும்
விற்பனஞ்சேர் அந்நூலை வியப்பாக பிரசுரித்தும்
வியத்தகுமாங் கலைவாணி பூஞ்சோலை
பொற்புறு காவலன் ஆதி சஞ்சிகைகள்
வெளியிட்டும் தமிழ்த்தாய்க்கும் சேவித்தார்.

தேங்குமொளிச் சைவசம யநெறிப் பின்னணியில்
சிறார்களுக்கு கல்வியறி வூட்டுதற்கும்
தீங்கில்லா ஒழுக்கநெறி பற்று தற்கும்
சிந்தைசெய் ராமகிருஸ்ண பரமஹம்சர்
வீங்குபுகழ் மிஷன்சார்ந்து வனப்பு வாய்ந்து
விளங்குமட்டு நகர்தன்னில் சிவாநந்தப்பேர்
ஓங்குமிசை வித்தி யாசாலை யோடு
உயர்மகளிர் பள்ளியும் தாபித்தார்.

காளியர் கோன்பாடல் பெறுதலமாம் கோணை
கவினாரும்மலை யிலிருந்துகல் விச்சாலை
சூழுமெழிலுற நிறுவிச் சைவசமயப் போதம்
துறுமிளார் வகையினில் மாணவரிடத்தே
ஆழமுற நெஞ்சதனில் படியும் பாங்கர்
அருந்தமிழும் ஆங்கிலமும் யூறிக்குன்றில்
வீழருவி போலினிய குரலின் பாடல்
விதவிதமாய்க் கற்பித்து மகிழ்வுகண்டார்.

(மாமன்றப் பொன்விழா மலர் - 2005)



# சித்தர் யோகர் சுவாமிகள்

**யா**ழ்ப்பாணத்து சித்தராகப் போற்றப்படும் தவத்திரு யோகர் சுவாமிகளது அடியார்களுள் ஒருவராக இருந்தவர் இந்தியா தமிழ்நாடு பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள். ஒரு தடவை அவரது வாழ்வில் ஏற்பட்ட எதிர்பாராத பிரச்சினை யொன்றை தனது அருட்சக்தி மூலம் யோகர் சுவாமிகள் நிவர்த்தி செய்த அந்த அற்புதமான சம்பவம் பற்றி பேராசிரியர் இவ்வாறு சொல்கிறார்.

1955 வாக்கில் யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள கரணவாய் தெற்கு என்ற ஊரில் பத்து நாட்கள் தொடர்ந்து சொற்பொழிவு செய்வதாக ஒப்புக் கொண்டு சென்றேன். மலாய்நாட்டு ஓய்வூதியம் பெறும் முருகப்பு என்பவர் வீட்டில் தங்கியிருந்தேன். பகல் முழுவதும் வேலையில்லை ஆதலாலும், இரவு ஒரு மணிக்கு சொற்பொழிவு தொடங்குவதாலும் அன்பர்கள் சிலர் எனக்காக ஒரு காரைக் கொடுத்து பகலில் எங்கு வேண்டுமானாலும் போய்வர ஏற்பாடு செய்தார்கள். முதல்நாள் சொற்பொழிவு முடிந்து வழக்கம்போல் சுவாமிகளிடம் சென்று வணங்கி வழிபட்டு இரவு மீண்டு விட்டேன்.

மறுநாள் பொழுது விடிந்தவுடன் பல்தேய்த்துக் கொண்டு நின்றேன். நண்பர் முருகப்பு வாலாயமாகக் கேட்கின்ற "நன்கு உறங்கினீர்களா ஐயா" என்ற கேள்வியைக் கேட்டார். அவருக்குப் பதில் கூறத் தொடங்கினேன். ஆனால் வாயிலிருந்து ஒரு சொல்லும் வரவில்லை. காற்றுத்தான் வெளிவந்தது. எவ்வளவோ முயன்றும் ஒரு எழுத்தைக்கூட உச்சரிக்க முடியவில்லை. அதிர்ந்து போன நான் என்ன செய்வது என்றறியாமல் திகைத்தேன். ஒன்பது மணியளவில் காரை நானே ஓட்டிச்சென்று சாவகச்சேரியில் ஓய்வு பெற்றிருந்த தொண்டை, காது, மூக்குநோய் நிபுண மருத்துவரைக் காணச்சென்று என் குறையை அவரிடம் எழுதிக் காட்டினேன். அவர் சோதனை செய்துவிட்டு "இன்று மாலை உங்களுடன் ஒருவரை அனுப்புகிறேன் கொழும்பில் சென்று சில சோதனைகள் நடத்திய பிறகு மருத்துவம் செய்யலாம்" என்று கூறினார். அவரிடம் எழுதிக் காட்டும் பொழுது Paralysis of Vocal chord என்று எழுதிக் காட்டினேன். அவருடைய வாக்கை ஏற்றுக் கொண்டு மாலை கொழும்பு போவதற்குத் தயாராக காரில் ஏறி அமர்ந்தேன். கண்ணீர் மாலை மாலையாக வந்தது. காரணம் என் பிழைப்பே வாயின் மூலம்தான் நடைபெற்றது. கல்லூரிப் பேராசிரியர், தொடர்ந்து சொற்பொழிவு செய்பவர் என்ற இரண்டும் போய்விட்டனவே. என்னுடைய பெரிய குடும்பம் என்னாவது என்ற கவலை மனம் முழுவதையும் சூழ்ந்து கொண்டது. இந்த நிலையில் காரை ஆயத்தப்படுத்த சாவியைச் செருகிய நிலையில் அந்த மருத்துவ நிபுணர் வெளியே வந்து காரின் கதவைப் பிடித்துக் கொண்டு, "அ. ச. ஐயா! யோகருடைய சீடர்தானே தாங்கள். அவரைப் போய்ப் பாருங்களேன்" என்றார். அந்த விநாடி வரை சுவாமிகளின் நினைவே என் மனதில் தோன்றவில்லை. அவர் கூறியவுடன் சுவாமிகளிடம் செல்லப் புறப்பட்டேன்.

அக்காலத்தில் பகலில் யாரும் சுவாமிகளிடம் செல்வதில்லை. அவருடைய தியானம் முதலியவற்றிற்கு இடையூறாக யாரும் போவதில்லை. மாலை ஆறுமணிக்கு மேற்றான் செல்வார்கள். அனைவருக்கும் தெரிந்த இந்தச் செய்தி எனக்கும் தெரிந்திருந்தது. எனவே ஒரு விநாடி சிந்தித்து உடனடியாகச் சுவாமிகளிடம் போவதே சரி என்ற முடிவிற்கு வந்தேன். நேரே வண்டியை ஓட்டிச்சென்று ஆச்சிரமத்தின் பக்கத்தில் நிறுத்திவிட்டு எதிரே உள்ள கேணியில் கைகால்களைச் சுத்தம் செய்து விட்டு மகானின் குடிலுக்குள் நுழைந்தேன். அடக்கமுடியாத அழுகையும், கண்ணீரும் என்னை ஆட்கொண்டிருந்தன. விழுந்து வணங்கிய நான் எழுந்திருக்க விரும்பவில்லை. ஓரிரு நிமிடங்கள் கழித்து ஏண்டா! பொடியா. "அந்த மருத்துவர் என்ன முருகன் என்ற நினைப்பா? எதற்காக அவரிடம் போனாய்" என்று திட்டியதோடல்லாமல் என்னுடைய அறியாமை பற்றியும் வெகுவாக ஏசினார்கள். "கடைசியில் பொடியா இங்கே உட்கார்" என்று நான் வழக்கமாக அமரும் இடத்தைக் காட்டினார்கள். அப்பொழுது இருந்த மனநிலையில் சுவாமிகள் பேசியது எதுவும் என் மனத்திற் பதியவில்லை. ஏதேதோ பேசிவிட்டு அரைமணி கழித்து அவர்கள் சொல்லிய வார்த்தைகளை ஏறத்தாழ அப்படியே கீழே தந்துள்ளேன். ஒரு சில சொற்கள் முன் பின்னாக இருக்கலாம். இத்தனை ஆண்டுகள் கழிந்தும் அச்சொற்களை மறக்க முடியவில்லை. காரணம் என்னுடைய வாழ்க்கையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திய சொற்கள் அவை. "பொடியா வழக்கம்போல மாலையில் பிரசங்கம் செய்து விட்டு இங்கே வா" என்று கூறிய சொற்கள் ஒரு பெரிய அதிர்ச்சியைத் தந்தன. அப்படியானால் நான் பேசமுடியும் என்பதைச் சுவாமிகள் குறிப்பாக உணர்த்தி விட்டார்கள். எழுந்து விழுந்து வணங்கிவிட்டு "உத்தரவுப்படியே செய்கிறேன்" என்றேன். அந்த இரண்டு வார்த்தைகள்தான் அப்பொழுது புதிதாகப் பிறந்த என் வாயிலிருந்து வந்த முதலிரண்டு சொற்கள் ஆகும். என்னை மறந்து அந்தச் சித்த புருஷன் எதிரே நிற்கும்போது திடீரென்று சுவாமிகள் பின்வருமாறு கூறினார்கள். "பொடியா சேக்கிழாரையும் கம்பனையும் நாங்கள் தானே வெட்டிப் புதைக்கனும் கவலையில்லாமல் போய்வா" என்றார்கள். இதன் பொருள் என்ன என்பதைப் பின்னர் விளக்குகிறேன்.

வெளியில் வந்து காரை ஓட்டிக்கொண்டு சுவாமிகளிடம் என்னைப் போகுமாறு பணித்த அந்த மருத்துவப் பெருந்தகையைக் காணச் சென்றேன். தெருவிலிருந்தபடியே "டாக்டர்" என்று பெருங் குரலெடுத்துக் கூவினேன். அந்த முதியவர் வீட்டினிலிருந்து வெளியே வந்து சாஷ்டாங்கமாக விழுந்து என்னை வணங்கினார். சற்றும் எதிர்பாராத இதனைக் கண்ட நான் பெரிதும் அதிர்ச்சியடைந்து, "இவ்வளவு முதியவராகிய தாங்கள் என்னைக் கும்பிடலாமா? இது முறையன்று" என்று கூறினேன். என்னுடைய இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்ட அவர் உள்ளே அழைத்துச் சென்று அமர வைத்தார். அதே நேரம் அவர் பணியாளர் ஒருவர் இரண்டு விமான டிக்கட்டுகளைக் கொண்டு வந்து அவரிடம் தந்தார். ஏதோ அவருக்கு அந்த டிக்கட்டு என்று நினைத்தேன். அப்பெருமகனார் டிக்கட்டை என்னிடம் கொடுத்து படிக்கச் சொன்னார். யாழ்ப்பாணத்திலிருந்து சென்னை செல்வதற்கு என் பெயரிலும் அப்பணியாளர் பெயரிலும் இரண்டு டிக்கெட்டுகள் இருந்தன. ஒன்றும் புரியாமல் திகைக்கும் என்னைப் பார்த்துப் பின்வருமாறு பேசினார். "அ. ச. ஐயா! இங்கு செய்த சோதனையிலேயே தாங்கள் எழுதிக் காட்டியது உண்மை என்பதைத் தெரிந்து கொண்டேன். இதற்கு இதுவரை மருத்துவ உலகம் ஒன்றும் செய்ய முடியவில்லை. கோடிக்கு ஒருவருக்கு இது வரலாம். வந்து விட்டால் அதுதான் அவருடைய முடிவு. ஆக உங்களிடம் சொல்லாமல் நாளைக்கு உங்களைச் சென்னைக்கு அனுப்ப முடிவு செய்தேன். பேச முடியாத தாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. ஆதலால் இந்த அன்பரையும் உங்களோடு அனுப்ப முடிவு செய்தேன். காரில் உங்களை ஏற்றுகின்ற வரை எனக்கும் சுவாமிகளின் நினைவு வரவில்லை. எப்படி உங்களை ஊருக்கு அனுப்புவது, என்ற எண்ணம்தான் என் மனத்தில் மேலோங்கி நின்றது. தாங்கள் வண்டியில் ஏறியபிறகு வண்டிக் கதவைத் தொட்டுக் கொண்டு "நீங்கள் சென்று வாருங்கள்" என்று விடை கொடுக்க முயலும்போது தான் சுவாமிகளின் எண்ணம் திடீரென்று மனதில் தோன்றிற்று. நாற்பது வருடங்களுக்கு மேல் E. N. T மருத்துவராக கொழும்பில் பணி செய்த எனக்கு அந்த விநாடி ஓர் எண்ணம் தோன்றிற்று. மருத்துவ உலகம் உதவ

முடியாத தங்களுக்கு இறைவனின் அருள் ஒன்றுதான் உதவமுடியும். அப்படியானால் அந்த அருளை வழங்கக் கூடிய இறைநேசர் சுவாமிகள் ஒருவராகத்தான் இருக்கமுடியும். அதனாற்றான் பகலில் யாரும் சுவாமிகளிடம் செல்வதில்லை யென்று தெரிந்திருந்தும் தங்களைப் போகுமாறு பணித்தேன். சுவாமிகளே என்மனத்தில் அந்த எண்ணத்தைத் தோற்றுவித்திருக்க வேண்டும். இத்தகைய அற்புதங்கள் பலவற்றைப் பிறர் அறியாமல் ஒரு சிலருக்கு சுவாமிகள் செய்கிறார்கள்" என்பதை தழுதழுத்த குரலில் கூறிவிட்டு, என்னை அங்கேயே தங்கி "மதிய உணவு உட்கொண்ட பிறகு போகலாம்" என்று பணித்தார்கள்.

அன்று மாலை வழக்கம் போலப் பேசினேன். பின்னர் சுவாமிகளிடம் சென்று ஆசி பெற்றேன். ஏனைய ஒன்பது நாட்களும் இதே முறையில் சுவாமிகளைச் சென்று தரிசனம் செய்து வந்தேன். இந்த நிகழ்ச்சி நடைபெற்ற காலத்தில் கம்பனைப் பற்றி "இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்" என்ற நூலையும், "நாடும் மன்னனும்" என்ற நூலையும் எழுதி வெளியிட்டிருந்தேன். அதன்பிறகு ஏறத்தாழ முப்பது நூல்கள் எழுதியுள்ளேன். என்றாலும் சுவாமிகளின் வாக்குப் பொய்க்கவில்லை. இந்நூல்களில் முக்கால் பங்குக்கு மேல் கம்பனையும் சேக்கிழாரையும் பற்றிய நூல்களே ஆகும்.

# மலேசியா பத்துமலை பகுதியிலுள்ள முருகன் கோயில்

மலேசியா நாட்டின் பத்துமலைப் பகுதிகளில் இருந்த சுண்ணாம்புக் குன்றுகளை 1878 ஆம் ஆண்டளவில் ஆய்வு செய்த அமெரிக்க தாவரவியலாளர் வில்லியம் ஹோர்னடே என்பவர் பத்து மலையைப் பற்றி வெளியுலகத்திற்கு அறிவித்தார். பத்துமலையின் பெயர் புகழடைந்தது. அதன் பின்னர் பதினான்கு ஆண்டுகள் கழித்து 1891 - இல் தம்புசாமிப் பிள்ளை அங்கு ஒரு கோயிலைக் கட்டினார். பத்துமலைக் கோயிலின் நுழைவாயில் ஒரு வேல் வடிவத்தில் இருந்தது அவரைப் பெரிதும் கவர்ந்தது.



பத்துமலைக் கோயில் முருகப் பெருமானுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது. பத்துமலையின் குகைக்கோயிலில் ஸ்ரீ சுப்ரமணியர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1892- இல் இருந்து பத்துமலையில் தைப்பூசம் கொண்டாடப்பட்டு வருகிறது. 1920- இல் குகைக் கோயிலுக்குச் செல்ல மரக் கட்டைகளிலான 272 படிக்கட்டுகள் கட்டப்பட்டன. குகைக் கோயில் 100 மீட்டர் உயரத்தில் இருக்கிறது.

**உலகின் உயரமான முருகன் சிலை**

உலகிலேயே உயரமான முருகன் சிலை பத்துமலையில் தான் உள்ளது. இதன் உயரம் 42.7 மீட்டர் (140அடி). இதை உருவாக்குவதற்கு மூன்று ஆண்டுகள் பிடித்தன. 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சிலையின் வழிபாட்டு ஆரம்பம் இடம்பெற்றது. இதன்போது பெருமளவு பண மதிப்பிலான சாமந்திப் பூ மாலை சூட்டப்பட்டது. அந்த மாலை சுமார் ஒரு தொன் எடை. அதனால், பளு தூக்கும் இயந்திரத்தின் உதவியோடு அந்த மாலை முருகப்பெருமானுக்கு அணிவிக்கப்பட்டது.

பத்துமலை ஸ்ரீ சுப்ரமணியர் கோவிலின் கலை ஓவியத்தை கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெறச் செய்ய முயற்சி நடந்து வருகிறது. இந்தச் சிலை ஏற்கனவே மலேசிய சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. சிலையை உருவாக்குவதற்கு 1,550 கன மீட்டர் சீமெந்து 250 தொன் எஃகு கம்பிகள், தாய்லாந்திலிருந்து வரவழைக்கப்பட்ட 300 லீட்டர் தங்கக் கலவை என்பன பயன்படுத்தப்பட்டன.

**300 லீட்டர் தங்கக் கலவைத்தொகுதி**

தமிழ்நாடு, திருவாரூரைச் சேர்ந்த சிற்பி ஆர்.தியாகராஜன் தலைமையில் முருகன் சிலை உருவாக்கம் கண்டது. அவருக்கு உதவியாக 14 சிற்பிகள் பணி புரிந்தனர். சிற்பி ஆர். தியாகராஜன் மலேசியாவில் பல ஆலய நிர்மாணிப்புகளுக்கு உதவியாக இருந்திருக்கிறார். செபாராங் பிறை, தாசேக் குளுகோர், மாரியம்மன் ஆலயம், பத்துமலை மீனாட்சி அம்மன் சிலை, பத்துமலை ஆஞ்சநேயர் சிலை, கோலாலம்பூர், ஜாலான் புடு, கோர்ட்டு மலை பிள்ளையார் கோயில் போன்றவை அவரின் கைவண்ணங்களாகும்

இந்தச் சிலை உலகின் பார்வையை தற்போது மலேசியாவின் பக்கம் திருப்பியுள்ளது. உலகிலேயே மிக உயரமான சிலை என்ற சிறப்பினையும் இந்தச் சிலை பெற்றுள்ளது. இந்தசிலையைக்காண்பதற்காகவே 2012ஆம் ஆண்டு தைப்பூசத் திருவிழாவில் பத்து லட்சம் பக்தர்கள் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**(நன்றி: இணையம்)**

# நாவலர் ஓர் சீர்திருத்தவாதி

இலக்கிய கலாநிதி க.சிவராமலிங்கம்பிள்ளை



செம்மனச் செல்வராய் சீரும் திருவும் பொலியும் சைவனாய், நேரிய நோக்குடைய தேசியவாதியாய் செந்தமிழ்க் காவலனாய் மாற்றாரிடத்தும் போற்றரும் பண்பு கண்டபோது தலைவணங்கும் மாண்புடையோனாய், மாற்றாரும் மனம் உருகிப் போற்றும் ஒழுக்க சீலனாய் வாழ்ந்து சைவத்தையும் தமிழையும் தான் பிறந்த நாட்டில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் காத்து வளர்த்த வித்தகன் நல்லைநகர் நாவலன் பெயர் நினைக்க இனிக்கும், சொல்ல வாய் மணக்கும். இவர் செம்மாந்து நின்று தொண்டாற்றிய செம்மை ஒரு தனிப்பெரும் இலக்கியம். இந்தியத் தமிழ் நிலமும் இலங்கையும் பெற்ற வரப்பிரசாதம் நாவலர்.

வெண்ணீறும், கண்மணியும் அழகுக்கு அழகு செய்ய உலாவிய சைவத்தமிழ்க் கோலம் ஆன்றவிந்தடங்கிய சான்றாண்மையை மட்டும் தான் காட்டி நிற்கவில்லை. அல்லன செய்யப்பட்ட போது அது ஆட்சியும் அதிகாரமும் படைத்தவர் செயலாக இருந்தாலும் இடித்துரைத்து நீதிக்குரல் எழுப்பிய வீர நாவலனை சீர்திருத்த வேட்கை படைத்த அறப்போர்த்தளபதியைக் காண்பதே இன்று என் வேலை.

எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள். நம்மை நாமே ஆள்கின்றோம் என்று அறை கூவும் ஒரு கால கட்டத்தில் நாவலர் வாழவில்லை. படைப்பலமும் அதிகார வெறியும் படைத்த அன்னியரின் கேட்பாரற்ற அடக்குமுறை ஆட்சி அவர்தம் அரவணைப்பில் புகுந்து ஆதரவால் அடிகோலி வளர்ந்த மதம் பழக்க வழக்கங்கள், இவற்றால் ஆட்டங்கண்ட தமிழ் சைவப்பண்பாடு ஏன் என்று கேட்க அஞ்சிய ஒரு சிலர், காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளக் கொடுக்குக்கட்டி நின்ற அங்குமில்லா இங்குமில்லா எத்தர் கூட்டம், இத்தனைக்கும் மத்தியில் தன்னந்தனியனாய் அருட்குரல் எழுப்பி வெற்றி கண்ட நாவலர் வரலாறு நாடறிந்த சரித்திரம்.

நாவலர் பெருமான் நக்கீரர் பரம்பரை. குற்றம் எங்கு காணப்பட்டாலும் சாடினார். வெற்றுப் பேச்சால் அல்ல, ஆதாரபூர்வமான ஆகமக் கருத்துக்கள் அவர் ஆயுதங்கள். தில்லைவாழ் அந்தணர்கள் நாங்கள் என்றாரைப் பார்த்து "இல்லை நீங்கள் தில்லை பாழ் செய்ய வந்த தீவினையோர்" என்றார். அடியார்களின் சவுக்கம் கட்டைகள் இக்கட்டைப் பிரமச்சாரியை, அருள்வீறு படைத்த அறப்போர் வீரனைக் கண்டு அஞ்சின என்றால் "நீற்றுக்கும் கண்டிகைக்கும் என் வணக்கம்".

ஆனால் "நும்பாக்கள் அருட்பாக்களாகா திருமுறைகளோடு எண்ணப்பட்ட மரபு வழிதராது" என்று வாதிட்டு வென்றார் என்றால்; பிறந்த மண்ணில் மண்டி எழுந்த, எழுப்பப்பட்ட எதிர்ப்பைச் சமயம் என்ற போர்வையில் நடந்த எதேச்சாதிகாரவெறியைத் தன் பார்வை ஒன்றாலேயே வெற்றிகண்டார் என்றால்; பணமும் பதவியாளர் பரிவு நிறைய இருந்த ஒரு பக்கத்தைத் தொண்டு அதுவும் நிஸ்காமியத் தொண்டு என்ற பலம் மட்டும் கொண்டு தமிழ்க்குரல் எழுப்பிச் சைவமும் தமிழும் காக்க மட்டுமல்ல காலப்போக்கில் தேசத்தின் மானங்காத்த வீரர் சேர்.பொன். இராமநாதனை ஈழத்துக்கு இனம் காட்டி வெற்றிவாகை சூடுவித்த பெருமைக்கு உரிய அறப்போர் வீரர் கூட்டத்தின் தலைவன் நாவலர் என்றால், பஞ்சம் அஞ்சேல் என்று சாதிச்சமயச் சளக்கறுத்து எல்லோரும் எம்பிரான் படைப்பு என்று செயலில் காட்டிப் பசிப்பிணி தீர்த்த "கஞ்சித்தொட்டித் தர்மவீரன் நாவலர்" என்றால் அரைக்காசுக்கு அவதிப்படும்போது ஆயிரம் தருகிறேன் என்று வந்த ஒழுக்கமிலா வழுக்கர் கூட்டத்தை ஓட்டிக்கலைத்த வழுக்கிலா ஒழுக்க சீலரான வீரன் நாவலர் என்றால், இவர் தம் சீர்திருத்த வேட்கைக்கு வேறு சான்றுகளும் வேண்டுமா? நாவலர் தம் சீர்திருத்த நெஞ்சு அருள்வழிப்பட்டது. அன்பு நெறிப்பட்டது.

**(நன்றி:- இந்துப் பண்பாட்டியல்)**

## வீடு பேற்றினை தரும் முருகப்பெருமான்

பகைவர்களை அழித்து நல்லவர்களைக் காப்பதற்காக, வேந்தனும் அவனின் படைவீரர்களும் தங்கியிருக்கும் பாசறைகளைப் படைவீடு என்பர். வீடு எனப்படும் முத்தியின்பத்தை அடைவதற்கு எமக்குத் தடையாக உள்ளவை ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலங்கள் ஆகும். மும்மலங்களின் கட்டிலிருந்து விடுபடுதல் வீடு எனப்படும். சூரபத்மன், சிங்கமுகாசுரன், தாரகன் ஆகிய மூவரும் மும்மலங்களை உருவகப்படுத்துபவர்களாக உள்ளனர். அவர்களை அழித்தற் பொருட்டே முருகப்பெருமான் ஆறுபடை வீடுகளில் தங்கியிருந்ததாகக் கந்தபுராணம் கூறும். மும்மலங்களிலிருந்து எம்மை விடுவித்து வீடு பேற்றினைத் தருபவன் முருகன்.



# Marriage Rites

When one is born as a human being one must seek and enjoy the good effects of "aram" (merit), "porul" (material), "inpam" (bliss), and "veedu" (moksha. For this one must have a life companion. That is one must marry and become a house holder. The day the union of two hearts. The Kiriyai known as "vivakam" marriage, has an important place in Hindu religion.

Sage Valuvar says in kural 41 on married life, "The ideal house holder is one who aids the three natural orders – the ancestors, God and Guests. This is the purpose of "vivakam" (marriage). Vivakam means that which bears well. Therefore in a marriage they must bear the burden of doing charitable acts. That is why it is known as "illaram" (house of charity). The domestic life does charitable deeds. marriage brings about auspiciousness, so it is called "kalyanam" and as it is a divine act in Tamil it is known as "thirumanam". Five aspects of marriage are of great importance.

1. Vakthanam
2. Kannikathanam
3. Varapreshanam
4. Paanikrahanam
5. Sapthapathi

"I am taking you as my wife to do charitable deeds" is vakthanam. (vak means word).

Then in the presence of elders the girl's parents vow to give their daughter in marriage to so and so. This is to make sure that marriage will take place (nichayathartham).

Once the horoscopes are compared and if they tally well according to astrology and confirmed by the astrologer, the bride's party goes to the groom's house on a good day and exchange a tray of betel leaves, along with turmeric, kumkum, arecanut, fruits and sweets with the groom's party thus confirming the marriage and desired the day of marriage.

### Ponnurukkal – melting the gold

For the nuptial pendant called "thaali" in the bride groom's house the gold smith will melt a sovereign gold of which the thaali is made. Barring the bride all the others and friends join in the ceremony. The bride's party brings sweet meats and short eats as a custom.

At the entrance to the groom's house a kumbam is set with a lighted lamp, kumkum and sandalwood paste and rose water pot beside it. This is by way of welcoming the guests. The same day or later the "koorai saree" for the bride could be bought. On that day in bride's house as well as in bride groom's house a branch of a tree called mulmuruku (Erythrina indica) is planted at the north east corner of the compound. This is called "kannikal naduthal". On the tip of the branch five mango leaves are tied with the cord dipped in turmeric powder dissolved in water. And the married women place the nine cereals called navathaniyam in side the pit before the branch is planted.



The tradition is that after planting the "kanikkaal" neither the bride's nor the bride groom's people should attend any sorrowful events.

### Inviting the bride groom

On the day of the marriage at an auspiscious hour, the bride's people go to the groom's house and invite and conduct the groom to the nuptial chamber.

Before that in the early morning some arugam pul (grass) is kept in a tray of fresh milk and this is put on the bride groom's head by elders and the bride groom is bathed. The bride also is treated in the same way.

The turban is kept on the bride groom's head by a maternal uncle or a cousin.

In the nuptial chamber is kept the kumbam and a lighted lamp. A make – do pillaiyar made with fresh cowdong, or turmeric paste or sandalwood paste is kept by the kumbam. A prayer is said to God Ganesha to manifest himself on it and a garland round the pillaiyar and a flower on the head of the make – do pillaiyar. The other objects like kumkum sandalwood paste, rose water pot are also kept to welcome the groom's party.



The best man (usually the bride's younger brother) leads the groom to the manavarai (nuptial chamber). At the entrance the best man washes the groom's feet. As a return the bride groom gives him a gold ring. Two married women perform aaraathi ( waving a lighted camphor on a tray before the bride groom to ward off evil eyes, and they dip the tip of the finger in the crimson solution of chunam and turmeric and put a dot on the forehead of the groom and best man.

In a brahmin's house, the groom feigns to renounce worldly life and to go on pilgrimage to kaasi – Benares. The bride's father begs him to return and pacified, the bride groom returns. This is like a drama enacted by the Brahmins only. Making peace by the bride's party is called samavarthanam. Then the bride groom and bride sit on a

swing and a song is sung by the women folk to the swaying of the swing this is a to show the ties between the earth and the sky.

The best man leads the groom to the manavarai. At first a kiriyai known as sangatpam is performed for Pillaiyar. In order for the marriage kiriyai to be conducted without any obstruction. At the end of the poojah the three philosophies are brought to mind taking in a handful of water followed by aasamanam, punniyagam and panchakaviya poojah also takes place.

### Wearing the pavithram (leaf)

Twisting the holy grass and forming a ring, the saiva priest wears the ring on his finger and seeks permission (anugnai) from God, and elders and then make a sankatpam (determine), to do the work well. In order for all the kiriyais to be done to perfection seek the grace of God Pillaiyar who is above all Gods and perform Pillaiyar poojah. Then thinking of the three philosophies drink a little water. This is called aasamanam. This kiriyai will make the mind pure and tread the spiritual way. To clean the place and items is punniyaham. In this panchakavya poojah also takes place.

Angurarpanam - (anguram – seedling, arpanam - planting) This is called palihaiidal. The seedling of the nine cereals are planted in a clay pot with soil in it. Just as the seedlings flourish, may the couple also fare well in life. As the cereals are planted for the use of man so the husband and wife also should help others to the best of their ability. May the couple live long like the married women who performed the kiriyai called palihaiidal. This kiriyai is done for both the bride and the groom. The bride sits on the right hand side of the groom.

### Radchapanthanam

This is performed with the view to carry on the function without any obstruction. And the mind is set only on the function and absolve from all sins and make them pure. In tamil it is called "Kaappu kadduthal". Both the groom and the bride have it tied separately. Once it is done to the bride groom, he has to be taken to another place and the bride is brought to the nuptial chamber. The reason for this is the bride should not see the groom without the tying of the thread for protection. There is another custom regards this. As a bride's face is covered with a veil, the bride groom may remain seated in the manavarai while the sacred thread is tied on the bride's wrist.

Till the thaali ceremony is over the groom and the bride are seen as luxmi narayana and after the thaali ceremony they are imagined as Siva sakthi. That is why after the tying of the thaali the bride is made to sit on the left hand site of the groom. Vishnu bears Luxmi on his right chest and Shiva has given his left side of the body to Sakthi is the philosophy in this arrangement. After radchapandanam, the priest in order to seek the grace of Siva and Sakthi does poojah to Shiva kumbam and Sakthi kumbam. There is some connection between the navagrahas ( nine planets) and life. Hence Navagraha poojah is performed to entreat the planets to remove any faults on the part of the priest.

Then the Homa pit is attended to make the yahaswara and yahaswari (Shiva Sakthi) manifested in the kumbam to grant grace, the kiriyai with fire God (agni) is done and the fire lit in the pit is called Shiva agni. It will burn all sins and bestow grace upon them.

### Blessings of the forefathers

To start a family life the blessings of the forefathers is necessary. So for them to attend the wedding a kiriyai is done to invite them to the function. So they will be present in spirit and bless the couple. This kiriyai is called naanthi srartham. This is done by the fathers of both the bride and the groom.

### Kannikathanam



The parents of the bride formally give away their daughter to the groom. Earlier tradition was to do so by pouring water. At present the parents of both the bride and groom treat each other with respect. This is not mentioned in the kiriyai. It is done now to lend glamour to the occasion.

Then the bride's father sits facing east for the guests to see. On a tray betel, arecanuts, fruits, lime, coconut a piece of turmeric, small change, gold, and flowers are kept and the girl's hands are placed on the tray and the father will hold the tray and the girl's hand and the priest reads out the names of the forefathers of both bride and the groom (these should be written in a piece of paper and given to the priest) , and the priest announces that the father is giving away a virgin to the groom. at that time a manthra is chanted. The meaning of the manthra is, "I am handing over this woman who is beautiful intelligent and healthy and is beautifully dressed to you. She will safeguard the merits, wealth and love.

While the manthra is being chanted, the girl's mother will pour drops of water on the tray and for the beating of the wedding drums and the blowing of trumpets called nathaswaram the virgin (kanni) is handed over to the groom. As it is done with water it is called "tharathatham". The bride groom accepts her and takes her as his life partner. If either the bride or the groom has no parents then their elder brother and wife, or elder sister and husband or paternal uncle and aunt, or those close relatives can be nominated to perform this kiriyai of kannikathanam. The bride thereafter will cooperate with him to do deeds of merit. The kaniyathanam is done with agni, God Vinayagar, Shiva Parwathy, thirty million thevas (celestial beings), Vedic Brahmins, kith and kin and visitors as witnesses.



### Tying the Thali

On the "Thali" it is best to have the image of Vinayagar or Shivalingam or Goddess Luxmi engraved. On the tray the nuptial chain (Thalikodi) with the "Thali", the koorai saree,

garland, minchi (a ring for the second toe of the right foot) and other auspicious items are kept. It is taken around to the parents of the couple and those present for their blessings. Then the bride groom gives the tray to the bride and asks her to change into the koorai saree. When the bride comes back donned in the koorai, she garlands the groom and sits on his right hand side. The priest performs a poojah for the "Thali" and the groom comes to the right side and while the priest the parents and those present bless them with flowers and the special drums beat and the trumpets blow, the groom ties the "Thali" around the bride's neck. This is called "Mankala naan poonal" in Tamil. "Thal" in Sanskrit means the Palmyra tree it also means the Ola – dried leaf of the Palmyra. In ancient days instead of gold the Ola was used according to some notes on this subject. In olden days a cord soaked in turmeric paste in water and used as the "Thali" chain. Now-a-days gold is used. Yet in some families yellow cord is still used.

(It seemed among the Tamils of yore, girls preferred to marry courageous men. A man has to fight a tiger, kill it and tie its tooth on a cord and present it as "Thali" to the woman. The present "Thali" is in the shape of a tiger's tooth. This was the tamil tradition long before Sanskrit came into being)

While tying the "Thali" the following manthra is chanted.

"Mangalyam thanthu nane
Mama jeevana hethuna
Kande pathname subage
Thuvam jeeva sarath satham"

Meaning – "This auspicious manthra is suitable for life so, I am tying this around your neck. May you live for a hundred years in good health". While tying the "Thali" people should not express inauspicious words, or sneeze which is a bad omen". The loud drums quell such untoward utterances. The yellow thread contains nine yarns. They denote -

1. To understand life as it is
2. Greatness of mind
3. Ability
4. Purity
5. Spiritual notions
6. Noble nature
7. Intelligence
8. Humility
9. Service

The bride must accept all this is the philosophy of the nine threads of the nuptial cord. Then the bride groom stands on the right side of the bride and facing east takes the nuptial chain with both hands and while a married woman keeps a lighted lamp behind the bride( Luxmi as witness) ties the "Thali". Usually three knots are put in the chain. The bride groom puts the first knot, that is to denote she is under the control of her husband. The second and third knots are by the groom's sister to show that she is under the control of her parents–in-law and God.

**Exchanging garlands**

After the "Thali" ceremony, they exchange garlands to show that they are one in two bodies. The garland worn by the bride is put round the groom's neck and the garland worn by the groom is taken out and put round the bride's neck. This is done three times. According to the sasthras the garland worn by one should not be worn by another. But they are one in two bodies. As such this is allowed as an act of deep love for each other. Then the bride groom gives the gifts he has brought for her. These are auspicious items like turmeric kumkum, comb, mirror, powder etc. Both will have a look at themselves in the mirror and be happy.



**Taking the first meal of milk and fruits**

That their life should be as sweet, they are given milk with fruits in it. Then they should set eyes on a cow after their first meal or they could see a lighted lamp.

**Panikrahanam – holding hands**

This is called "Kaipidithal" in tamil. The bride groom holds the right hand of the bride with his right hand. Then a manthra meaning, "Even when you and I reach old age we will not leave in each other" will be chanted.



**Taking seven steps (Sapthapathi)**

Holding her right hand and holding her right toe, the groom makes her take seven steps called "Sapthapathi" this is done while the fire burns in the agni kundam (pit). Paddy is strewn in seven places and the groom makes her walk on these in seven steps. These are for: Sapthasagaram (seven oceans), Sapthalogankal ( seven worlds), Sapthanaadikal (seven blood vessels), Saptha kannikaikal (seven virgins) ,Saptha vaarankal (seven weeks)and such like.

All these are examples in their life. To do and to hear and to gratify. The meaning is the husband satisfies her needs and cooperates with her by the seven steps. Not only that but also it denotes seven items they need in their life. They should jointly make an effort to get these items:



Food items, good health, faith in God, good deeds, and peace of mind good knowledge and all luxuries, items that are found at different times and the enjoyment which will be a good companion for the yaha.

There is another interpretation for this kiriyai called sapthapathy

| | | |
|---|---|---|
| One step | - | for God |
| Second step | - | for the husband |
| Third step | - | to protect the clan |
| Fourth step | - | to denote the qualities expected of a woman they are |

"Achcham" – awe
"Madam" – (feigned) ignorance
"Payirppu" – sensitiveness
"naanam" – shyness
All these qualities a woman should have and preserve.

Fifth step - May both have intelligence directed towards that which is good and proper.

Sixth step - The six arts to be introduced to the husband

Seven step - To wish that she should have him as a husband for seven times seven births.

## Stepping on the grinding stone



The bride groom places the bride's left foot on the grinding stone and puts the toe ring on the second toe. The four corners of the rectangular stone stand for the four qualities expected of a woman – Achcham – awe; Madam – (feigned) ignorance; payirpu – sensitiveness; naanam – shyness. While doing so it is meant "May you be as strong as this stone and be firm in your faith and be chaste". She should be strong like the stone and face the enemies bravely. This makes the woman chaste and morally good and bear the joys and sorrows of life and be steady and firm in her principles.

The grinding stone is an essential item in every house and family. In the olden days women wear toe ring made of iron to ward off evil spirits. Now-a-days it is made of silver. Silver metal also can ward off evil spirit. So wearing a toe ring is very important. As the couple walk round the fire on the eastern side there will be a vessel full of turmeric water in which the priest will drop a ring. The couple must try to get it. This happens three times. This is by way of teaching them to make concessions in life.

## Prayachiththam (atonement)

In order to atone for any faults, this homa is performed. At the end of this kiriyai the best man takes a hand full of roasted maize (popcorn) and hands it over to the groom. He in turn hands it over to the bride and holds her hands with his hands and the priest takes a wooden spoon of ghee and pour into the fire chanting a manthra which means "O God Agni please grant us all luxuries" and the roasted maize is dropped into the fire.

## Viewing Arunthathi

Arunthathi wife of sage Vasishta was made to be a star because of her high morals and chastity. Mythology says once Lord Indra saw the seven maidens (Saptha kannikai) on earth and yearned for them. His wife Indrani took the form of each of them and made him happy. She could not however take the form of Arunthathy because she surpassed all women by her high morals and chastity. Hence she was given the status of being a star in the firmament. The priest takes the couple out and points to the bright star that is Arunthathy and advises them to follow her in her conduct. If the star is not visible, they could face the side where the star is and worship. In some places, to honour Arunthathy a kumbam is set up and worshipped. The puranas say that close to the polar star galaxy among seven stars (the plough star) is a bright star which is Vasishta and beside it is the star Arunthathy.

## Picking the ring

This is not mentioned in the kiriyai. As stated earlier it teaches them to give concessions. Another reason is for the couple to get over their shyness.

## Arasaani



This is not mentioned in the kiriyai. This could be a custom of the land. The Bo tree has been worshipped as Shiva and the neem tree (Margosa) as Goddess Umathevi. The banyan tree is considered as Vishnu. So Bo tree and the banyan tree are worshipped as Shiva and the Sakthi as Vishnu. And these are planted and are referred to as Arasaani (Arasu means Bo tree, aal - the banyan tree). Later on it has become Arasaani. Now instead of arasu and aal, mulmurukku (Erythrina indica) is used. This is to make the couple that there should be conjugal fidelity. (Once Lord Indra, by mimicking a cock, crowed an hour before sun rise. The sage Gawthama husband of Ahaliya, got up and went for a bath. Indra who had an eye on Ahaliya took the form of the sage and walked in. Ahaliya believed him to be the sage. While they were enjoying each other's company the sage walked in. Angry, he cursed his wife to be turned into a stone and Indra to be born as the mulmurukku tree. This kiriyai is done to remind the couple of the infidelity of Indra and to warn them of the ill effects of such conduct. All these trees - Bo tree banyan tree and the mulmurukku are considered as Brahma, Vishnu and Rudra. They should be worshipped.

## Wishing the couple

All those present wish the couple a long and happy wedded life and elders bless and wish them. The arugam pul (grass) is well rooted and spreads horizontally and it cannot be destroyed easily, and it is resilient. May the couple also live well like the way the grass flourishes. In a tray some rice mixed with turmeric powder and some arugam pul is put in it. The elders take a little of the rice and the grass and bless them by putting it on their heads. The proper way to bless is to put



these on their heads three times. Now-a-days some start from the knees, shoulder and head and some others start from the head to the shoulder and the knees. Only the people who know the philosophy of it do it the right way. Now philosophy has given place to such absurdities.

In thiruthondar puranam it is described when saint Sekilar finished reading the Periya puranam (ancient legend) he was brought on an elephant and blessed by throwing arugam pul on his head and wishing him. The custom of using arugam pul for worship gave placed to using paddy and flower along with arugam pul. Then paddy became rice and this act was called "adchathai idal".

**Aaraathi – waving a lighted camphor before an idol**

At the end of the marriage ceremony, the thread bound on wrist of the bride and groom are taken out and kept on a tray of betel leaves. The parents keep the thadchanai (fees) for the service by the priest on it, and the priest blesses the couple. The couple only should remove the thread from their wrists. Then aaraathi takes place to ward off evil eyes. Some kumkum powder is dissolved in water and kept in a tray with three pieces of a banana. On these wicks are kept and lighted and the aaraathi is done. The married ladies who perform aaraathi dip a finger in the liquid and put a dot on the forehead of the bride and the groom.



After this the best man, the bride groom, and bride and the bride's maid also enter the shrine room putting the right foot in first. Leading them will be some married women carrying the kumbam and the lamp. These are kept in the shrine room and the couple receive blessings from their respective parents.

***(This is a chapter from the Compendium for Hindus published by All Ceylon Hindu Congress)***

# கந்தபுராணம் சொல்லும் முருகன் அவதாரம்

உலகத்தை மீண்டும் ஒழுங்காக்கிச் சீர் செய்ய வேண்டிய தேவை உணரப்பட்டது. பரமபதிக்குக் கருணை, உண்டாக முருக தோற்றம் நிகழ்ந்தது. முருகு என்றால் அழகு. அழகு என்றால் ஒழுங்கு, செம்மை, சீர்மை, நன்மை ஆகும். உலகினைச் சீர் செய்து ஒழுங்கு படுத்த, உயர்ந்தோர் செய்த தவப்பயனாக வந்து உதித்தவன் முருகன்.

*"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்*
*பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்*
*கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே*
*ஒருதிருமுருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய"*

இவ்வாறு உலகில் உள்ள யாவரினதும் உய்விற்காக, முருகப் பெருமான் உதித்தனன், என்பது கந்தபுராணம் தரும் செய்தி. கந்தபுராண கலாசாரம், அழகும், அறிவும், அறமுந்தழுவி, மானிடத்தை உய்விக்க எழுந்தது என்பது இன்றைய காலகட்டத்தில் உணரப்பட வேண்டியது.



கந்தபுராணத்தின் மகிமையையும், அருமையையும் அறிந்து, அதனை உச்சி மேல் கொண்டு, மற்றையோரையும் அவ்வாறு செய்யவைத்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். கந்தபுராண கலாசாரமாக யாழ்ப்பாணத் தமிழ்மக்களிடையே பரவி, வாழ்க்கை நெறியாக மிளிர்ந்தது. நாவலருக்குப் பின், பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் கந்தபுராண கலாசார விருத்திக்குப் பெரும்பணியாற்றியுள்ளார்.

*(கலாநிதி கு. சோமசுந்தரம்)*





**அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழா வெளியீடு**

**A Compendium For Hindus**

மாமன்றத்தின் வெளியீடான 'இந்து மக்களுக்கு ஒரு கையேடு' நூலில் அடங்கியுள்ள பெரும்பாலான விஷயங்களுடன், மேலதிகமான பல தகவல்களையும் தாங்கியதாக "A Compendium For Hindus" என்ற ஆங்கில நூல் வெளிவந்துள்ளது.

**நூலின் விலை ரூபா. 1000/=**

கொழும்பிலுள்ள மாமன்றத் தலைமையகத்திலும், யாழ் பிராந்திய பணிமனையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 011 2434990 (மாமன்றத் தலைமையகம்)
021 222 1075 (யாழ் பிராந்திய பணிமனை)

# இந்து ஒளி (தீபம் : 19 – சுடர் : 07) நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழ் – ஒரு பார்வை

**சைவவித்தகர் யோ.கஜேந்திரா**
சேனைக்குடியிருப்பு, கல்முனை

**சை**வமும், தமிழும் தழைத்தோங்கும் சீர்பூத்த சிவபூமியாகிய ஈழத்திருநாட்டில். அகவை அறுபது கண்டு சமய நிறுவனங்களுக்கு தலைமையாக இருந்து எம்மக்களை அறப்பாதையில் வழிநடாத்திச் செல்லும் இந்து மாமன்றத்தின் சீரிய பணிகளுள் ஒன்றாக ஆன்மீக சஞ்சிகையை வெளியிட்டு எம் சமூகத்துக்கு வழிகாட்டி வருகிறது.

இந்து ஒளி (தீபம் - 19, சுடர் - 07) மன்மத வருடம் ஆவணித் திங்கள் 23ஆம் நாள் (09.09.2015) நல்லைக்கந்தன் சிறப்பிதழாக ஒளிவீசியிருந்தது.

இதன் உள்ளடக்கங்களாக அட்டையின் முகப்பினை வற்றாத தனிப்பெருங்கருணையால் தன்னை நாடி வரும் பக்தர்கள் துயர்துடைக்கும் நல்லைக்கந்தன் குபேரவாசல் குடமுழுக்கு காட்சியுடன் கந்தனின் எழில் வடிவக்காட்சி அமைந்திருக்கின்றது. இதழின் முதலாவது பக்கத்தில் பஞ்சபுராணத்தின் இணைப்புடன் முகவுரையானது “நல்லூர் கந்தன் குபேரவாசல் இராஜகோபுரம்” எனும் தலைப்பினூடாக புதிதாக 108 அடி உயரமாக நிர்மாணிக்கப்பட்ட இராஜகோபுரத்தின் சிறப்பையும், எட்டுத்திக்கு பாலகர்களுள் ஒருவரான குபேரனுடைய மகிமையையும் குபேர வழிபாட்டு சிறப்பையும் கூறியுள்ளது. அத்தோடு நிதிக்கு அதிபதியாக வடக்கில் இருக்கும் குபேரன் வடபுலத்து மக்களை வாழவைக்க வேண்டும் எனும் நோக்கில் இந்த இராஜ கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது என அம்முகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனையடுத்து ஆன்மீகச்சுடரின் அருள்மடல் பிரசுரமாகியிருந்தது. இம்மடல் ஊடாக “நல்லூர் முருகனுக்கு வாஷிங்டனிலும் தேர்த்திருவிழா” எனும் தலைப்பில் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளால் நல்லூர் திருவிழாவின் மகிமையையும், வாஷிங்டன் நகரில் எழுந்த முருகப்பெருமான் ஆலயம் தோன்றிய வரலாற்றினையும், ஆலய அமைப்பு, பக்தர்கள் சிறப்பு என்பவற்றையும் கூறியதுடன் நல்லூர் திருவிழாவைப்போல் அங்கும் நல்லூர் - கதிர்காமம் முருகன் தேர்த்திருவிழா என நடைபெறும் செய்திகள், சைவத்தின் உலகளாவிய வளர்ச்சியை எடுத்தியம்புகிறது. மேலும் முருகன் கருணையால் அமெரிக்க தலைநகரில் ஒரு புதிய சைவத்தமிழ் தலைமுறையினர் உருவாகுவதையிட்டு மனம் பூரிப்படைகிறது என்ற வாக்கியத்துடன் சுவாமிகளது ஆசியுரையானது காணப்படுகிறது.

இதனையடுத்து இந்து மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் தொடர்ந்தும் மாமன்றத்தின் பயணம் அமைய வேண்டும் எனும் தலைப்பில் யாழில் இடம்பெற்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டு ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாணசபை முதலமைச்சர் சத்தியவித்தகர் க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் நிகழ்த்திய உரை கட்டுரையாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.இக் கட்டுரையை நோக்குமிடத்து அகில இலங்கை இந்து மாமன்றம் அறுபது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இந்து ஆராய்ச்சி மாநாட்டினை நடத்துகிறார்கள். எம்மைப்பற்றி ஆராய வேண்டிய காலம் கனிந்துள்ளது என்பதனைக் கூறாமல் கூறியுள்ளார்கள் என்று கூறுகிறார். மேலும் இலங்கையில் தமிழர்களின் அடிப்படையினை நிருபிக்க வேண்டிய அவசியத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்து மாமன்ற பணிகளுள் இந்து ஒளி, உரை தொகுப்புக்களென்ன இந்து மக்களுக்கு ஆன கையேடு என்ன, தெய்வத்திருமகள் பற்றிய படைப்புக்கள் என்ன இவ்வாறான பலவித வெளியீடுகளை இதுவரை காலமும் வெளியிட்டு வெற்றி கண்டுள்ள மாமன்ற பணிகள் பற்றியும் கூறியுள்ளார்.

மேலும் சிவதொண்டர்களினை வடமாகாண கிராமங்களில் சுத்தப்படுத்தும் திட்டங்கள் மற்றும் எழுச்சித் திட்டங்கள், ஆலய சிரமதான பணி செய்ய முன்வரவேண்டும் என்றும், அவர்களுக்கான ஒன்றிணைவை ஏற்படுத்தி அலுவலகம் திறக்கப்படல் வேண்டும், அடுத்து சைவவித்தகர்களாக பாடம் பெறுபவர்கள் வடமாகாண ஆலயங்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும் என்கிறார்.

மேலும் இந்து ஆலய பரிபாலனம் உள்ளடக்கிய சட்டத்தினை உருவாக்கல் அவசியத்தையும் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி கட்டுரைத் தொகுப்புக்களில் இருந்து சில விடயங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. “ஈழத்தில் புராண படனமும் திருமுறை மரபும்” எனும் தலைப்பில் பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் பாடல் பெற்ற கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம் பற்றிய பதிகங்கள் பன்னிரு திருமுறையில் இடம்பெற்றுள்ளது. அட்டவீரட்டான தலங்கள் பாரதகண்டத்தில் உள்ள சிறப்புகள், ஈழத்தில் சைவ, தமிழ் வளர்ச்சியினை இங்கு விஜயம் செய்யும் அறிஞர்கள் மெச்சுவதாகக் கூறியுள்ளார்.

மேலும் ஈழத்து தலபுராண வரலாற்றில் தட்சின கைலாச புராணம் எனும் தலைப்பில் பேராதனை பல்கலைக்கழக தமிழ்துறை விரிவுரையாளர் பெருமாள் சரவணகுமார் இலக்கிய வளத்திலும், வரலாற்று அம்சங்களையும் பிராந்திய வாழ்வியல் கோலங்களையும் வெளிப்படுத்துவதில் தட்சின கைலாச புராணம் சிறப்பிடம் பெறுவதாக கூறுகிறார்.

அடுத்து நல்லூரின் பெருமையும், நல்லூரான் மகிமையும் எனும் தலைப்பில் நல்லூர் ஆலய சிறப்பு, திருவிழா நாட்கள் சிறப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக அச்செய்தி காணப்படுகிறது.

இதன் தொடர்ச்சியாக திருவருட் பொலிவு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் எனும் தலைப்பில் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் நல்லூர் ஆலய அமைவிடச் சிறப்பு நல்லூர்பதிபற்றி தவத்திரு யோகசுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பாடிய பாடல்களினை ஆதாரம் காட்டி அப்பதியின் மகிமை பற்றி கூறியுள்ளார். புவனேகபாகுவினால் ஆலயம் கட்டப்பட்ட செய்தி காணப்படுகிறது. அதனையடுத்து யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட மன்னர்கள் ஆற்றிய பணிகள் ஒல்லாந்தர் படையெடுப்பால் நிர்மூலமாக்கப்பட்டு பின்னர் இவ்வாலயம் மீண்டெழுந்த வரலாறு, மற்றும் இரகுநாதமாப்பாண முதலியார் வம்சத்தினர் ஆலய அறங்காவலர்களாக இருந்து சிறப்பாக இன்றுவரை பராமரிப்பதனை தனது கட்டுரையில் கூறியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு தேசம் - வரலாற்றுப் பின்னணியும் தனித்துவமான இந்துப் பண்பாடும் எனும் தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் விவேகானந்தராஜா துலாஞ்சனன் இந்து ஆராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை குறிப்பு காணப்படுகிறது.

அடுத்து திருமுருகாற்றுப்படை சொல்லும் ஆறு படைவீடு சிறப்புக்கள் உள்ளடக்கிய குறிப்பு காணப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து ஈழநாட்டில் இந்துமத வளர்ச்சிகள் மடங்கள் எனும் தலைப்பில் கலாபூஷணம் தம்பு துரைராஜா அவர்கள் அதன் தோற்றம் பணிகள் பற்றி கூறியிருக்கிறார்.

சேனாதிராய முதலியாரால் இயற்றப்பட்ட நல்லைக்கந்தன் திருவூஞ்சல் பாட்டு இவ்விதழுக்கு மேலும் அழகு சேர்க்கிறது.

அடுத்து "கௌமார வழிபாட்டு மரபில் முருகக் கடவுளின் வடிவங்களும் நாமங்களும்" எனும் தலைப்பில் கலாநிதி ம.பாலகைலாசநாத சர்மா அவர்கள் தனது ஆய்வுக் கட்டுரையின் அறிமுகத்தில் முருகனை முழுமுதற் கடவுளாக போற்றும் நெறி கௌமாரம், இதில் முருகனுக்குரிய வழிபாட்டு அம்சங்கள் இலக்கியங்கள் சிறப்பாக உள்ளதாக அமைகிறது. மேலும் வழிபாடு, ஸ்கந்த சொல் விளக்கம், முருகனின் மூன்று சக்திகள், முருகனுக்கு மூன்று மயில்கள் எனும் சிறு தலைப்பில் கட்டுரை சிறப்பாக அமைகிறது. மேலும் பல்வேறு வடிவங்கள் திருப்புகழுக்கும் முருகனுக்கும் உள்ள சிறப்பினையும் கட்டுரையில் காணலாம்.

முருகனது ஏனைய வடிவங்கள் எனும் தலைப்பில் நீண்ட விளக்கமாய் முருக வடிவ சிறப்புகளை அறிய முடிகிறது. அவரது முருகன், கந்தன், தேவசேனாதிபதி, சுப்பிரமணிய மூர்த்தி களிற்றூதிப் பெருமான், சரவணபவன், கார்த்திகேயன் போன்ற வடிவங்களின் தத்துவத்தைப் புராணம், இலக்கியம் வாயிலாக விளக்கப்பட்டுள்ளது. அத்தோடு அவ்வடிவங்கள் அமைந்த இடத்தின் சிறப்புகளும் இக்கட்டுரையில் இடம்பெற்றிருப்பது குறிப்பாக உயர்கல்வி பயிலும் மாணவர்கள், கட்டுரையாளர்கள் என்பவர்களுக்கு சிறந்த வகையில் உதவும் என்பதில் ஐயமில்லை.

அடுத்து யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் கால ஆகமம் சாராத வழிபாட்டு மரபுகள் - வையா பாடல், கோணேசர் கல்வெட்டு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு, ஆசிரியர் செல்வி ஹறோசனா ஜெயசீலன் அவர்களால் வாசிக்கப்பட்ட கட்டுரைக்குறிப்பு காணப்படுகின்றது.

இவ் இந்து ஒளிக்கு அழகு சேர்க்கும் விதமாக நல்லைக்கந்தனை வந்தனை செய்வோம் எனும் தலைப்பில் கலாபூஷணம் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் நல்லூர் ஊரின் சிறப்பு தலச்சிறப்பு என்பவற்றினை கூறியதை அடுத்து ஆலயத்தின் மகோற்சவ காலங்களில் முருகன் எழுந்தருளிவரும் நிலை, பக்தர்களின் பிரார்த்தனைக் காட்சிகள் முருகனின் வடிவத்தினை நயப்புற தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

அடுத்து யோகர் சுவாமிகள் நல்லைக்கந்தன் மீது பாடிய பாடல்கள் பிரசுரமாய் இருக்கிறது.

அடுத்து கந்தபுராணம் தோன்றிய வரலாறு எனும் தலைப்பில் கி.வா.ஜகந்நாதன் அவர்களது கந்தவேள் கதையமுதம் எனும் நூலில் இருந்து பெறப்பட்ட கட்டுரை காணப்படுகின்றது. இதில் முருகனின் அருளாட்சி, கந்தபுராண சிறப்பு என்பன கூறப்பட்டுள்ளது.

இவற்றைத் தொடர்ந்து நாவலர் பக்கத்தில் சைவ வரலாற்றில் தனது இருப்பை நிலை நிறுத்திய நல்லைநகர் நாவலர் எனும் தலைப்பில் திருமதி. நாச்சியார் செல்வநாயகம் அவர்கள், சைவமறுமலர்ச்சிக்கு வித்திட்ட யுகபுருசர் நாவலர் குறிப்பாக சரித்திர, தோத்திர நூல்களை எளிய மக்களும் பயனடைய உரை எழுதுதல், பதிப்பு முயற்சி புராண படனம் பிரசங்கம் செய்தல், கண்டன நூல்கள் எழுதி 19 ஆம் நூற்றாண்டில் சைவந்தழைக்க தன்னை ஆகுதியாக்கிய மகான் நாவலர் பெருமானின் கல்விப் பணி, சமுதாயப்பணி என்பனவற்றை நயமுற இக்கட்டுரையில் காட்டியுள்ளார்.

இதனைத்தொடர்ந்து ஈழத்து இந்துப்பண்பாடும் ஆடற்கலையும் எனும் தலைப்பில் யாழப்பாண பல்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளர் திருமதி.அ.கிருபைராஜா அவர்கள் நாட்டிய கலைக்கும், கோயிலுக்கும் உள்ள தொடர்பு, நடராஜர் ஆடற்கலை விளக்கம் என்பன கட்டுரையில் காணப்படுகின்றது.

அடுத்து நல்லூரும், நாவலரும் எனும் தலைப்பில் காலாநிதி.கு.சோமசுந்தரம் அவர்கள் ஈழத்து ஆலயங்கள் யாழ் மாவட்ட திருத்தலங்கள் பாகம் - 01 இல் இருந்து பெறப்பட்ட தொகுப்பு காணப்படுகிறது.

மேலும் இந்து ஆராய்ச்சி மாநாட்டுக் கட்டுரையாகிய இலங்கையின் வடக்கில் நாட்டார் பெண் தெய்வ வழிபாடு காணப்படும் பகுதிகள் எனும் தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் விவேகானந்தராஜா துலாஞ்சனன் துர்க்காதேவி, கண்ணகியம்மன் பத்தினியம்மை, முத்துமாரியம்பாள், பத்திரகாளி, திரௌபதையம்மன், நாச்சியம்மன் போன்ற நாட்டார் தெய்வ வழிபாடுகள் இடம்பெற்ற இடங்கள் முறைகள் பற்றிக் கூறுகிறார்.

இறைபணி நிற்கும் இந்து மக்களின் உச்ச நிறுவனம் எனும் தலைப்பில் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் அவர்கள் யாழ் இந்து ஆராய்ச்சி மாநாட்டின் ஆரம்ப நிகழ்வின் போது தலைமை வகித்து ஆற்றிய உரையில் இந்து மக்களின் உச்ச நிறுவனமாக குரலாக ஆறு தசாப்த காலமாக அகில இலங்கை இந்து மாமன்றம் இறைபணி நிற்க என்ற இலட்சியத்திற்கமைய பணியாற்றிய வரலாற்றுடன் அறுபதாண்டு நிறைவைக்கண்டுள்ளது என அறிமுகம் அமைகிறது. மற்றும் மாமன்ற வளர்ச்சியில் தூண்களாக பணியாற்றிய தலைமைகள் பெருந்தகைகள் பற்றிக் கூறுகிறார்.

அடுத்து ஆன்மீகப்பணிகள் சமுதாயப்பணிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்து இளைஞர் சமுதாயம் குறிப்பாக யுத்ததால் பாதிப்படைந்த மாணவர்களுக்கு அவர்கள் கல்வியில் ஆற்றிய பணிகள், அத்தோடு மன்ற வெளியீடுகளாக இந்து ஒளி, இந்து மக்களுக்கு ஒரு கையேடு, சிவவழிபாட்டு மலர் போன்ற பல நூல் வெளியீடுகள்பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சிவதொண்டர் அணி, சைவவித்தகர் பயிற்சி அதாவது இவற்றில் சேர்ந்து தொண்டாற்ற இளஞ்சமுதாயம் முன்வரவேண்டும் என்கிற செய்தியும், மற்றும் மன்றப்பணிகளாகிய நடுத்தீர்ப்பு மையப்பணிகள், அங்கத்துவ சங்கங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், மக்களின் குரலாக மன்றம் செயற்படுகின்றது. மேலும் யாழ் மண் சிவபூமியாக மிளிர வேண்டும். ஆலயங்கள், சிவாச்சாரியார்களின் பங்கு, மத வளர்ச்சி போன்றவைகளின் பங்கு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மூட நம்பிக்கையிலிருந்து விடுபடல், இந்து அறக்கட்டளைக்கூட்டம் நடாத்தல், ஊடகத்தின் பங்கு, இளைஞர் வகிபாகம், பல்கலைக்கழகங்கள் சைவத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்பாக இவ்வுரையில் காணப்பட்டுள்ளன. "கல்வி வளர்ச்சியில் சமய நிறுவனங்களின் கடமைகள்" எனும் தலைப்பில் அகில இலங்கை இந்து மாமன்ற கல்விக்குழுத் தலைவர் மா.கணபதிப்பிள்ளை அவர்கள் கட்டுரை அறிமுகத்தில் கல்வி வளர்ச்சியினை பொறுத்த வகையில் தமிழர் மரபில் கோவில்கள் முக்கிய இடத்தினை நிறுவனமயப்படுத்தப்படாத வகையில் உள்ளதாகக் கூறுகிறார்.

போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலத்தில் கோயில்கள், சமய நூல்கள் பற்றிய சிந்தனையினை தடுக்க ஆலயங்களை அழித்தனர். தமிழர்கள் தம் மதத்தினை பின்பற்றும் உரிமை மறுக்கப்பட்டது. இந்தக் காலத்தில் எந்த நிறுவனமயப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் காணப்படவில்லை என்கிறார்.

ஆறுமுகநாவலர் வருகையால் சமய விழிப்புணர்வு சமயக்கல்வி என்பன கிடைக்கப்பெற்றன என்பதனை உப தலைப்பின் ஊடாக காணலாம். மேலும் அகில இலங்கை இந்து மாமன்ற தலைமைச் செயலகம் மற்றும் இந்து மாமன்றப் பணிகளான சட்ட ஆலோசனை, சமூக நலக்குழு என்ற குழுக்கள் அமைத்து பணிபுரிந்தும் மேலும் கல்விக்குழு எனும் உப தலையங்கத்தில் க.பொ.த. (சா/த), க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கு கல்வியில் ஆற்றிய பணி, ஆசிரியர்கள் கல்வியில் ஆற்றிய பணிகள், இந்து மக்களுக்காக மாமன்ற வெளியீடாக பல நூல்கள் மலர்ந்திருப்பதுடன் ஆன்மீக சேவையூடாக பல பணிகளை புரிந்ததனையும் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

அடுத்து நாட்டார் மரபில் மாரியம்மன் வழிபாடு எனும் தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி சோதிமலர் ரவிந்திரன் அவர்களின் ஆராய்ச்சி மாநாட்டு கட்டுரை சுருக்கம் காணப்படுகின்றது.

அடுத்து மாமன்ற அனுதாபமாக அண்ணா தொழிலக அதிபர் அமரர்.சு. பொ. நடராசா மற்றும் அமரர். கனகநாயகம் சண்முகநாயகம் அவர்களுக்கான அனுதாபச் செய்தி காணப்படுகின்றன.

மாமன்றச் செய்தியில் மாமன்றத்தில் நடந்த மூன்று நூல்களின் வெளியீடு, கீரிமலையில் நீத்தார் நிகழ்வு, தருமபுர ஆதீன குரு முதல்வருக்கு கொழும்பில் வரவேற்பு, யாழ்ப்பாணத்தில் மாமன்றத்தின் இந்து ஆராய்ச்சி மாநாட்டு பற்றிய நிகழ்வுகள் நிழல் படங்களாக காணப்படுகின்றன.

இந்து ஆராய்ச்சி மாநாட்டுக் கட்டுரைகளாக ஈழத்துப் பாடசாலை கல்வி முறையில் தற்போது சைவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்கள் எனும் தலைப்பில் யாழ் தேசிய கல்வியற் கல்லூரி உபபீடாதிபதி திரு.பா.தனபாலன் அவர்களது கட்டுரைச் சுருக்கம் காணப்படுகின்றது.

மேலும் இலங்கையில் குருகுலக்கல்வி - ஒரு பார்வை எனும் தலைப்பில் இந்து குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ. க. வைத்தீஸ்வர குருக்கள் அவர்களுடைய கட்டுரைச் சுருக்கம் இடம்பெற்றது.

எம் சமூகத்திற்காக அறுபதாண்டுகளாக தவவாழ்வு வாழ்ந்து பல தியாகங்களுக்கு மத்தியில் இந்து மதம் சிறக்க அரும்பாடுபட்டு ஆற்றி வருகின்ற சேவைகளுள் முத்தாய்ப்பான சேவையாகிய இந்து ஒளி சஞ்சிகை இளம் சமுதாயத்தினர் இந்து மதம் பற்றிய பல்வேறு உண்மைகளை கண்டறியும் கலைக்களஞ்சியமாக காணப்படுகின்றது.

## முருகன் புகழ்பாடும் நூல்கள்



கந்தபுராணம் முருகனின் தோற்றம், புனித வரலாறு, வீரதீரங்கள், அருள்திறன், மற்றும் மனிதர்கள் வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய அறநெறிகள், விழுமியங்கள், ஆன்மிகப் பண்பாடுகள் பற்றி எடுத்து இயம்புகிறது. அது கந்தபுராண கலாசாரம் ஆக மக்கள் மத்தியில் மலர்ச்சி பெற்றுள்ளது. அதை மதித்து நடப்பவர்கள், வாழ்க்கையில் புன்னெறியதனிற் செல்லும் போக்கினை மாற்றி நன்னெறியிற் செல்ல வழியேற்படுகின்றது. அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் முருகனின் பெருமையையும், புகழையும் அவன் எழுந்தருளியுள்ள திருத்தலங்களின் மகிமையையும் கூறுகின்றது. முருகன் புகழ்பாடும் நூல்கள் பல உள்ளன.

நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படை நூல், சங்ககாலத்து நூல் ஆகும். இந்நூலில் முருகன் புகழ், பெருமை, சிறப்பு என்பனபற்றிப் பேசப்படுவதோடு, அவன் விரும்பி உறைகின்ற ஆறுபடை வீடுகள் - திருக்கோயில்கள் பற்றிய அருட்குறிப்புகளும் அடங்கியுள்ளன. பன்னிரு சைவத்திருமுறைகளுள் பதினொராந் திருமுறைப் பிரபந்தங்களுள் ஒன்றாக இந்நூல் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முருக வழிபாட்டின் தத்துவ சிந்தனைகள்

முருகனின் ஆறு முகங்கள் ஆறு அத்துவாக்களை விளக்குவனவாக உள்ளன. அத்துவாக்கள் என்பது ஆன்மாக்களின் மலங்களை நீக்கி முத்தியின்பத்தைக் காட்டும் வழியைக் குறிக்கும் அவையாவன: மந்திராத்துவா, பதாத்துவா, வருணாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்துவா, தலாத்துவா என்பனவாகும். இவ் அத்துவாக்களுக்குள் அடங்கும் கலைகளும், மந்திரங்களும் பதங்களும் யாவுமே ஆறுமுகப்பெருமானிடத்தில் அடங்கியுள்ளதாக குமரகுருபர சுவாமிகள் தமது கந்தர் கலிவெண்பாவில் கூறியுள்ளார். குமரனின் ஆறு அழகிய முகங்களும் ஆறு குணங்களை எடுத்துக் காட்டுவதாகவும் கூறுவர். ஆறு குணங்களாவன: முற்றுணர்வு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயமுடைமை, பேரருள், வரம்பிலாற்றல் என்பனவாகும்.

முருகனின் தோற்றமும் அவனது வரலாறும் சைவ சித்தாந்தத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு ஆராயப்படுகின்றது. திருவருள் வடிவமான முருகன் அசுரர்களை அழித்தமை ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களை அழித்ததாகவே கருதப்படுகிறது. ஆன்மா திருவருள் பெறுவதற்கு முதலில் மாயையிலிருந்து விடுதலை பெறுதல் வேண்டும். இதனை விளக்குவதற்கு பத்தாயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து (10,345) பாடல்களைக் கொண்ட கச்சியப்பரின் கந்தபுராணம் தாரகாசுர வதத்தை எடுத்துக் கூறுகின்றது. சிங்கமுகன் கன்ம வினையின் பிரதிரூபமாகக் காட்டப்படுகிறான். வினைகளில் நல்வினைகளும், தீவினைகளும் இருப்பதற்கு அடையாளமாகச் சிங்கமுகனிடம் நற்பண்புகளும் தீயபண்புகளும் காணப்பட்டன. முருகப்பெருமான் முழுமுதற் கடவுளான சிவனே என்பதனையும் அவரை வெல்லல் இயலாது என்பதனையும் ஞானவானாகிய சிங்கமுகன் உணர்ந்திருந்தான்.

ஆணவத்தின் முழுவடிவமாக சூரபன்மன் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறான். குமாரக் கடவுளின் ஞானசக்தியால் வீழ்த்தப் பட்ட சூரபன்மன் அழியாது வேலும் மயிலுமாக வருவது பணிந்து நிற்பதுமாகிய செய்திகள் அழிவுறாத ஆணவம் இறுதியில் அடங்கி ஒடுங்கும் நிலையைப் புலப்படுத்துகின்றன. ஆணவம் வலி ஒடுங்கிய நிலையில் திருவருள் பதித்தலாகிய சக்திநிபாதம் நிகழ ஆன்மா பேரின்பப் பெருவாழ்வு பெறும் நிலை கைகூடுமென்பதனை சூரபன்மனின் வரலாறு எடுத்துக் கூறுகிறது. கந்தபுராணம் சிறந்த காவியமாக மட்டுமன்றி சிறந்த பக்தி இலக்கியமாகவும், திகழ்கிறது. இதில் பக்திச் சுவை மாத்திரமன்றி வீரம், சிருங்காரம், அவலம் முதலிய சுவை நிறைந்த பாடல்களும் உண்டு.

முருகனின் திருவுருவம் அருவமும் உருவமுமாகி நிற்கும் தன்மையையே காட்டுகிறது. தந்தைக்கு ஞான உபதேசம் செய்த ஞானபண்டிதனான முருகன் மகிழ்ச்சியைக் கொடுப்பனவாகவே உள்ளான். இவனது வேல் ஞானத்தைக் குறிக்கும் சின்னமாகவே உள்ளது. வள்ளியம்மை இச்சாசக்தியாகவும், தெய்வயானை கிரியா சக்தியாகவும் கருதப்படுகிறார்கள். அத்துடன் வள்ளி ஆன்மாவாகவும், முருகன் குருவாகவும், வேடர்கள் ஐம்புலன்களாகவும் தத்துவ நோக்கில் கொள்ளப்படுகின்றனர்.

**- கி. புண்ணியமூர்த்தி**

(இந்து நாகரிகம் - மாமன்ற வெளியீடு)

## முருகனின் படைவீடுகள்

செந்தமிழ் முருகனுக்கு இன்று உலகெங்கும் திருக்கோயில்கள் உள்ளன. எனினும், தமிழ் நாட்டில் ஆறு தலங்கள், முருகனின் ஆறுபடை வீடுகளாகத், திருமுருகாற்றுப்படை எனும் நூலில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. அவையாவன, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவிநன்குடி (பழனி), திருவேரகம் (சுவாமிமலை), குன்று தோறாடல், பழமுதிர்சோலை என்பனவாகும். குன்று தோறாடல் என்பதால் குன்றுகள், மற்றும் சோலைகள் தோறும் முருகன் உறைந்தும் உலாவியும் வருகின்றான். என்பது உணரப்படுகின்றது. திருத்தணிகை, மற்றும் இலங்கையில் கதிர்காமம் ஆகிய தலங்கள் இந்த வகையைச் சார்ந்தவையாகலாம்.

இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள நல்லூர், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், கிழக்கில் அமைந்துள்ள மண்டூர், சித்தாண்டி மற்றும் தெற்கே அமைந்துள்ள கதிர்காமம் ஆகிய ஆறு கந்தன் ஆலயங்களையும் ஈழநாட்டு ஆறுபடை வீடுகளாகக் கொள்ளப்படும் வழக்கமும் உள்ளது.

கதிர்காமம், நல்லூர் முருகன் ஆலயங்கள் மீது அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய திருப்பணிகள்

ஸ்ரீ செல்வச்சந்நிதி வேல் பெருமானின் அடியார் களினதும், ஆலய உரிமையாளர்களினதும் நிதிப் பங்களிப்புடன் சென்ற ஆண்டும் இவ் ஆண்டும் நடந்து முடிந்த திருப்பணிகள் பின்வருமாறு. ஆலய வள்ளியம்மன் வெளிவில் மண்டபம் மற்றும் நீராடி விட்டு எம்பெருமான் அடியார்கள் ஆடைமாற்றுமிடம் ஆலயத்தில் ஒரே நாளில் பல திருமணங்கள் நடைபெறுவதால் மணப்பெண் கூறை மாற்றுமிடம் புதிதாகக் கட்டப்பட்டது.ஆலயக் கணினி அறை புதிதாகக் கட்டப்பட்டது.வள்ளியம்மன் கேணியில் மேல் கூரை வேலைப்பாடு செய்யப்பட்டது. வள்ளியம்மன் தீர்த்தக் கிணற்றடி மேல் கூரை வேலைப்பாடு செய்யப்பட்டது. பூ மண்டப வடக்குப் பக்கமாக மழைகாலங்களில் ஏற்படக் கூடிய நீர் சிதறல்களை தடுப்பதற்கு கூரை அமைக்கப்பட்டது.விநாயகப் பெருமானுக்கான தேர்திருத்த வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. சுற்றுமண்டப தெற்கு நுழைவாயில் கட்டி முடிக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டது. ஆலய உள்வீதியின் நான்கு பக்கங்களும் மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. விநாயகப் பெருமானின் வெளிமண்டபம் புதிதாகக் கட்டப்பட்டது. சரஸ்வதி அம்மனுக்கு வர்ணப்பூச்சு வேலைகள் செய்வித்தமை, ஆலயத்தில் செயற்பாடுகளைக் கவனிக்க பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்பட்டமை ஆகிய திருப்பணிகள் திறம்பட செய்து முடிக்கப்பட்டுள்ளது. இதனை விட மேலும் பல திருப்பணிகள் நடைபெற இருப்பதால் எம்பொருமான் அடியார்கள் ஆலய திருப்பணியில் கலந்து சிறப்பித்து வேல் பெருமானின் அருள் ஆசிகளைப் பெற்றேகுமாறு வேண்டுகின்றோம்.

**- பரிபாலன சபை (செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்)**



# சைவசாதனங்களில் ஒன்றாக முக்கியத்துவம் பெறும் திருநீறு


**இரா.ஜீவன் பிரசான்**

தலைமையாசிரியர், கொ/கப்பித்தாவத்தை கயிலாசநாதர் அறநெறிப் பாடசாலை


சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடுஞ் சமயம் சைவசமயமாகும். சைவசமயிகளின் திரு அடையாளங்களாக (சைவசாதனங்கள்/சிவசின்னங்கள்) திருநீறு, உருத்திராக்கம், சந்தனம், குங்குமம், சைவதீட்சை போன்றவற்றை கைக்கொள்கின்றனர். இவற்றுள் மேன்மையான இடத்தில் வைத்து போற்றப்படுவது 'திருநீறு' ஆகும். திருநீறானது விபூதி, பசுமம், ஷாரம், இரட்சை, பசிதம் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

தன்னை தரிப்பவர்களுக்கு மேலான செல்வத்தையும், ஐஸ்வரியத்தையும் தருவதால் 'விபூதி' எனவும், ஒளியை கொடுப்பதால் 'பசிதம்' எனவும், தன்னை தரித்தவர்களைக் காத்து இரட்சிப்பதால் 'இரட்சை' எனவும், ஆன்மாக்களுடன் (உயிர்கள்) கலந்துள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை நீக்குவதால் 'ஷாரம்' எனவும், எம்மால் செய்யப்பட்ட பாவங்களை எரித்து நீறாக்குவதால் 'பசுமம்' எனவும் பெயர் வழங்கலானது.

குற்றமற்ற பசுவின் சாணத்தினை அக்கினியில் எரித்து பெறப்படும் நீறே தூய திருநீறாகும். திருநீறு வெண்மை நிறமானது. வெண்நிறமான திருநீறே அணிவதற்கு பொருத்தமானதாகும். ஏனைய, வெண்மைக்கு பாதகமானவைகள் அணிய தகாதவைகளாகவும் விலக்கப்பட்டவைகளாகவும் கொள்ளப்படும். தூய வெண்ணீறு தரிப்பதால் எம் அகமும், புறமும் தூய்மையடைகின்றது. இங்கே நீறாக்க எடுத்துக்கொண்ட சாணம் ஆன்மாக்களையும், சாணத்திலே படிந்துள்ள அழுக்குகள் மும்மலங்களையும், எரித்தல் செயன்முறை திருவருளையும், எரித்தவுடன் பெறப்படும் வெண்ணீறு மலங்கள் நீங்கத் தூய்மையடையும் ஆன்மாவையும் குறிக்கும் என்பது சான்றோர் வாக்கு.

திருநீறானது இருமுறைகளில் தரிக்கப்படும். அவையாவன உத்துளணம், திரிபுண்டரம் எனும் இரண்டுமாம். உத்துளணம் என்பது பரவிய வண்ணம் பூசுதலாகும். திரிபுண்டரம் என்பது மூன்று குறிகள் படும் வண்ணம் பூசுவதாகும். சமய தீட்சை பெற்றோர் ஆசார சீலர்கள் மாத்திரமே இம்முறையிலான தரிப்பு முறையினை பின்பற்றலாம். இம்முறை குறிகள் வளையா வண்ணமும், இடையறாதும், ஒன்றையொன்று தீண்டாவண்ணமும், அகலாதும், ஒடுங்காவண்ணமும், ஒவ்வொரு அங்குல இடைவெளியிருக்குமாறு பூசுவது விதியாகும். திரிபுண்டரமானது உச்சி, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள், புயங்கள், முழங்கைகள், மணிக்கட்டுக்கள், விலாபுறங்கள், முதுகு, கழுத்து எனும் பதினாறு இடங்களிலே தரிக்கலாம்.

திருநீறு அணியும்போது உத்தம திசைகளான வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் நின்று அண்ணாந்து நிலத்திலே சிந்தாவண்ணம் 'சிவசிவ' என்று தரித்தல் வேண்டும். தரிக்கும்போது வலக்கை நடுவிரல் மூன்றினாலும் தரிப்பது விதியாகும். நிலத்திலே தற்செயலாக திருநீறு சிந்தினால் அவ்விடத்தை சுத்தி செய்தல் வேண்டும்.

திருநீற்றினை சந்தியாகாலமான காலை, உச்சி, மாலை ஆகிய மூன்றும், சூரியோதயம், சூரிய அஸ்தமனம், நித்திரைக்கு செல்லும் தருவாயிலும், நித்திரை விட்டு எழுந்தவுடனும், தமது காலை கருமங்களை பூர்த்தி செய்தவுடனும், தம் கடமைகளை ஆரம்பிக்க முன்னும், சிறப்பு நிகழ்ச்சிகளின் போதும் கட்டாயமாகத் திருநீறு அணிதல் வேண்டும்.

மேன்மையான சைவசாதனமான தூய திருநீற்றை புதிய பாத்திரத்திலேனும், மண்முட்டியிலேனும் இட்டு முல்லை, மல்லிகை, கொன்றை போன்ற நறுமலர்களை இட்டு வாயை தூய துணியினாற் கட்டி பாதுகாக்க வேண்டும். திருநீறு வைத்திருக்கும் பாத்திரத்தை சிவாலயமாகவும், திருநீற்றை சிவமாகவும் கருதல் வேண்டும். திருநீற்றின் மேல் சந்தனமேனும், குங்குமமேனும் அணிதலாகாது. அவை திருநீற்றுக்கு தாழ்வாக பூசப்படல் வேண்டும். 'திருநீறணியாதான் நெற்றி பாழ்' எனவும் கூறுவர். அதாவது திருநீற்றினை அணியாதவர்களுடைய நெற்றி சுடுகாட்டுக்கு சமமானது என்பதாகும்.

திருநீற்றின் மகிமையினையும் அதனை தரிப்பதால் கிட்டும் பலாபலன்களையும் அநுபூதிமான்கள் என அழைக்கப்படுகின்ற நாயன்மார்களின் திருமுறைகளிலும், புராண வரலாற்றினூடாகவும் அறியமுடிகின்றது என்றால் அது மிகையாகாது. சைவத்தமிழ் நூல்களில் முதன்மையான தேவாரங்கள் ஊடாக சமய குரவர்களில் தேவார முதலிகள் திருநீற்றின் மகத்துவத்தினை பறைசாற்றியுள்ளனர்.

திருநீற்றின் பெருமையினை திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் 'திருநீற்றுப் பதிகம்' எனும் பத்து பாடல்களினூடாக கூறுகின்றார். 'மந்திரமாவது நீறு…', 'முத்திதருவது நீறு…', 'சுந்தரமாவது நீறு…', 'தேசம் புகழ்வது நீறு…' போன்ற திருநீற்று பதிகத்தினூடாக சம்பந்தப் பெருமானின் திருவாக்குகளால் திருநீற்றின் மகிமையினையும் உணரலாம். திருநீறு அணியும் போது திருவைந்தெழுத்து மந்திரத்தை உச்சரித்தல் வேண்டுமென்பதை பின்வரும் தேவாரத்தினூடாக அறிய முடிகின்றது.

*'கருவாக் கிடந்துண் கழலே நினையுங் கருத்துடையேன்*
*உருவாத் தெரிந்துன்ற நாமம் பயின்றே னுனதருளால்*
*திருவா பொலியச் சிவாய நமவென்று நீ றணிந்தேன்*
*தருவா சிவகதி நீபா திரிப்புலி யூரரனே!'*

மேலும் அப்பர் பெருமான் தன்னுடைய திருத்தாண்டகங்களில் 'திருக்கோயிலில்லாத திருவிலூருந்.....' எனும் பாடலினூடாக சைவசின்னங்களில் மேன்மையான திருநீற்றின் தன்மையினையும் கூறியுள்ளார். இப்பாடலினூடாக திருநீறு அணியாத மக்கள் காட்டுவாசிகளுக்கு சமம் என மேலோட்டமாக எடுத்தியம்பியுள்ளார்.

அப்பர் வயிற்று நோவினால் துடித்தபோது திலகவதியார் தமது தமையனை திருவதிகை திருவீரட்டானத்திற்கு அழைத்துச் சென்று திருநீற்றை மருந்தாகப் பூசினார். அதன் பின்பே 'கூற்றாயினவாறு........' எனும் பாடலை (தேவாரத்தை) பாடியருளினார் என்பது புராணங்களினூடாக திருநீறு அதிசிறந்ததொரு மருந்து எனவும், நோவை தவிர்க்கவல்லது எனவும் அறியமுடிகின்றது.

மூலனின் உடலிலே புகுந்து மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து, ஒவ்வொரு வருடமும் ஒரு பாடல் வீதம் மூவாயிரம் பாடல்களை பாடிய தவயோகியான திருமூலநாயனாராலும் திருநீற்றினை 'கங்காலன் பூசும் கவசத் திருநீற்றை....' எனும் பாடலினூடாகவும், மாணிக்கவாசகப் பெருமான் 'வெண்ணீற்றான்' என சிவனை சுட்டியுள்ளமையும், திருநாவுக்கரசர் பெருமான் 'பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு...." என்றும், சம்பந்தப் பெருமான் 'காடுடைய சுடலைப்பொடி பூசியென்...' என்றும் திருநீற்றினையும் அதனை சிவத்திற்கு ஒப்பிட்டும் குறிப்பிட்டுள்ளார்கள்.

சைவசாதனமான திருநீற்றை பூலோக வாசிகள் மட்டுமல்ல சிவனும் வானவர்களும் கூட அணிந்துள்ளார்கள் என 'வானவர் மேலது நீறு.....' எனும் பதிகத்தினூடாக சம்பந்தர் தெளிவுபடுத்தியுள்ளார். திருநீற்றினை குரு, சிவனடியார்கள் தந்தால் அமைதியாக அடக்கத்துடன் அவர்களை வணங்கி, இரு கைகளையும் நீட்டிய வண்ணம் வாங்கி உரியவாறு அணிதல் வேண்டும். திருநீறு என்றால் என்ன? எப்படி எவ்வாறு அணிதல் வேண்டும்? எவ்வாறு பாதுகாக்க வேண்டும்? போன்றவற்றுக்கான விளக்கத்தினை சைவ மறுமலர்ச்சியின் தந்தையும் விடிவெள்ளியுமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் முதலாம் சைவ வினாவிடை எனும் நூலில் விபூதி இயல் எனும் குறிப்பில் சிறப்பாக தெளிவுபடுத்தியுள்ளார்.

ஒருவன் சைவசமயி என அடையாளப்படுத்தவும், மனிதனை மனிதனாக ஒழுக்க சீலத்துடன் வாழவைக்கவும், துன்பங்களை பொடியாக்கவும், இம்மைக்கும் மறுமைக்கும் மூலமாகவும் விளங்குகின்ற சைவசாதனமானது மேன்மையானது எனவும், அவை படியும் இடமெங்கும் சிவலிங்கமாகின்றதெனவும் சைவ நூல்கள் கூறுகின்றன. இத்தகைய சிறப்புமிகு திருநீற்றை அணிவது மட்டுமல்லாது அதனை உரிய வண்ணம் பேணவும் வேண்டும்.

# என் குறைதீர்த்த சந்நிதி வேலன்

**- ஒரு அடியவரின் மனக்கருத்து -**

எனது பெயர் நடராசா அன்னலட்சுமி. நாங்கள் இருபாலையில் வசிக்கின்றோம். எனக்கு மூன்று பெண் பிள்ளைகளும் ஒரு மகனும் உள்ளார்கள். மகள்மார் மூவரும் திருமணம் செய்து விட்டார்கள். ஆனால் மகனுக்கு 36 வயது வந்தும் மாங்கல்யம் கிடைக்கவில்லை. நான் மகனை நினைத்து எல்லாக் கோயில்களுக்கும் போய் வருவேன். இப்படி இருக்கும் போது நானும் மகனும் 2010 ஆம் ஆண்டு சந்நிதியானின் தேர் காணச் சென்றோம். அப்போது "அற்புதங்களும் அனுக்கிரகங்களும்" என்ற ஒரு புத்தகம் கிடைத்தது. அதை வாசித்ததும் "முருகா எனது மகனுக்கு மாங்கல்யம் தா. நான் உன்னுடைய ஆலயத்தில் வந்து மகனுடைய தாலிகட்டு நிகழ்வை நடத்துவேன்" என்று நேர்த்தி வைத்தேன். பின் ஆறு மாதங்களுக்குள் மாங்கல்யம் கிடைத்தது. எனது மகனின் திருமண நிகழ்வு சந்நிதி ஆலயத்தில் என் மனம் குளிர நடந்தது.

நல்ல மனதுக்கு நல்ல மருமகளும் கிடைத்தது. இப்போது இரண்டு பெண் பேரக்குழந்தைகளும் முருகன் தந்துள்ளார். 2010 ஆம் ஆண்டில் இருந்து தவறாது தேர் காணச்செல்வோம். அன்று கிடைக்கும் அற்புதப் புத்தகத்தை எப்பாடுபட்டாவது வாங்கி வருவேன். அது படித்தால் மனத்திற்கு பெரிய ஆறுதல் கிடைக்கும் அத்தோடு யாராவது துன்பப்படும் போது அப்புத்தகத்தை போட்டோக் கொப்பி அடித்து கொடுப்பேன். அதைப் படிப்பவர்கள் என் மூலம் முருகன் கிடைத்ததாக நன்றி கூறுவார்கள். நான்கு வருடம் எனது நோய்க்கும் சிகிச்சை பெற்றேன். எவ்வித பலனும் கிடைக்கவில்லை. ஆனால் இப்போது சிகிச்சையை கைவிட்டு மாதத்தில் ஒரு தடவையாவது சந்நிதியானின் ஆற்றில் மூழ்கிக் குளித்து வருகிறேன். வைத்தியர் கூறிய நோய்களையும் சந்நிதியானின் ஆற்றில் இறக்கி விட்டு சுகமாக இருக்கிறேன்.



2014 ஆம் ஆண்டு தேருக்கு நானும் மகளும் சென்றோம். இம்முறை முருகனின் அற்புதப் புத்தகம் கிடைக்குமா? என்ற ஏக்கத்தில் சென்ற போது பஸ்ஸில் இருந்து இறங்கியவுடனே முருகனின் புத்தகம் கையிற்கு கிடைத்தது. அப்புத்தகம் கிடைத்ததும் முருகன் நேரில் வந்து இருப்பது போன்று பெரு மகிழ்ச்சி அடைந்தோம். இவ்வாறு சந்நிதி முருகனின் அருளிற்கும், அன்பிற்கும் அளவே இல்லை. எனவே நான் துயரத்தில் இருந்து விடுதலை பெற்றது போல் ஏனைய அன்பர்களுக்கும் முருகையாவின் அருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

**(நன்றி : சந்நிதியானின் அற்புதங்களும் அநுக்கிரகங்களும்)**

# மாமன்றத்தின் அனுதாபம்

## அமரர் சிவசோதி வல்லிபுரம்



அகில இலங்கை இந்து மாமன்றத்தில் முன்னர் களஞ்சியக் காப்பாளராகப் பணியாற்றிய திரு. சிவசோதி வல்லிபுரம் அவர்களின் மறைவையிட்டு மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது.

ஒவ்வொரு நிறுவனத்தின் செயல் திறனிலும், வளர்ச்சியிலும் அதன் முகாமையுடன் ஒத்துழைக்கும் பணிக் குழுவின் பங்கு முக்கியமானதாகும். பணிக்குழுவின் சேவை மனப்பாங்குடனான பங்களிப்பின்றி முகாமை, நிறுவனத்தை இயக்குவது கடினம். இவ்வகையில் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் பணிபுரிந்தோரில் மறைந்த திரு. சிவசோதி வல்லிபுரம் அவர்களின் பங்கு அளப்பரியது என்றால் அது மிகையாகாது.

யாழ் சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அமரர் சிவசோதி வல்லிபுரம். இவர் மாமன்றத்தில் பணிபுரிந்த காலத்திலேயே மாமன்றத்தின் தலைமையகக் கட்டடம் முகாமையால் திட்டமிடப்பட்டது. அதன் அப்போதைய தலைவர், பொதுச் செயலாளர் உட்பட செயற்குழு உறுப்பினர்களின் அயராத முயற்சியாலும் கட்டடக்கலைஞர்கள், பொறியியலாளர்கள் ஆகியோரது வழிகாட்டலிலும் உருவாகிவரும் காலத்தில் திரு. சிவசோதி வல்லிபுரம் அவர்கள் மாமன்றக் களஞ்சியக் காப்பாளராகப் பணியாற்றினார். கடமை நேரத்தில் தனது சேவையை ஒழுங்காகவும் வினைத்திறனுடனும் ஆற்றி வந்ததற்கு மேலாக தேவையைக்கருதி கடமை நேரத்திற்குப் புறம்பாகவும் முகாமைக்கு வேண்டிய ஒத்துழைப்பையும் வழங்கி வந்தார். முகாமையால் ஆரம்பிக்கப்பட்ட ஐந்து மாடிக் கட்டட நிர்மாணத்திற்காகப் பெருந்தொகையான கட்டடப் பொருட்களை "பெறுதல், களஞ்சியப்படுத்தல், விநியோகம்" என்ற படிநிலைகளைப் பேணிச் சிறப்பாகவும், நேர்மையாகவும் பணியாற்றினார். மாமன்றத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய பணியாளர்களில் அமரர் சிவசோதி வல்லிபுரம் அவர்கள் குறிப்பிடத்தக்கவராவார்.

தனது முதுமைக் காலத்தில் தனது குடும்பத்தினருடன் நியூசிலாந்து நாட்டில் வாழ்ந்து வந்த திரு. சிவசோதி வல்லிபுரம் கடந்த செப்டம்பர் 20 ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்தார் என தகவல் கிடைத்துள்ளது.

அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றது.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுருகாவெனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும் செங்கோடன் மயூரமுமே!

# இந்தச் சுடரில்...


- பஞ்ச புராணங்கள் 1
- ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
- மாமன்றத் தலைமையகத்திலிருந்து.... 4
- மாத்தளை சிந்தாகட்டி குமரமலை அருள்மிகு குமரப்பெருமான் ஆலயம் 5
- குமரமலை திருக்குமரன் நமக்கு வளமான வாழ்வளிக்கத் தோன்றிவிட்டான் 6
- மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வரலாறு 7
- மாத்தளை மாவட்ட திருத்தலங்கள் 9
- ஆறுமுகமான பொருள் 12
- ஆறுமுகம்... அழகனவன் முருகனுக்கு அழகுமுகம் ஆறு 13
- சஷ்டியில் மா அறுத்த சங்கரன்பிள்ளை 15
- ஈழத்திற் கந்தபுராண கலாசாரம் - ஓர் ஆய்வு 17
- முருக வழிபாடு - தோற்றமும் சிறப்புகளும் 20
- கார்த்திகை விளக்கீடும் வழிபாடும் 21
- முருகப்பெருமானின் திருநாமங்கள் 23
- உள்ளத்தை ஒளிப்படுத்தும் திருநாள் தீபாவளி 24
- வித்தையிற் சிறந்த வித்தகர் விபுலானந்தர் 25
- சித்தர் யோகர் சுவாமிகள் 26
- மலேசியா பத்துமலை பகுதியிலுள்ள முருகன் கோயில் 27
- நாவலர் ஓர் சீர்திருத்தவாதி 28
- Marriage Rites 29
- இந்து ஒளி (தீபம் : 19 - சுடர் : 07) நல்லைக் கந்தன் மகோற்சவ சிறப்பிதழ் - ஒரு பார்வை 34
- சைவசாதனங்களில் ஒன்றாக முக்கியத்துவம் பெறும் திருநீறு 38
- மாமன்றத்தின் அனுதாபம் 40

# மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாடு நிகழ்வுகள் (01.08.2015 - 02.08.2015)



02.08.2015 காலை சுவாமிஜி ஜீவானானந்த மகராஜ் அரங்கில் இடம்பெற்ற சமகால அமர்வு - 9 நிகழ்வின் போது




02.08.2015 காலை தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கில் இடம்பெற்ற சமகால அமர்வு - 10 (மங்கையர் அரங்கு) நிகழ்வின்போது தருமபுர ஆதீன குருமுதல்வர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் சிறப்புரையாற்றுகிறார்.



HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/41/NEWS/2015

# மாமன்ற இந்து ஆராய்ச்சி மாநாடு நிகழ்வுகள் (01.08.2015 - 02.08.2015)



மாமன்ற யாழ் பணிமனை பேரம்பலம் நினைவு விரிவுரை மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு பூசை வழிபாடு



01.08.2015 காலை சேர்.பொன். இராமநாதன் அரங்கில் இடம்பெற்ற சமகால அமர்வு - 1 நிகழ்வின்போது




01.08.2015 காலை வே.பாலசுப்பிரமணியம் அரங்கில் இடம்பெற்ற சமகால அமர்வு - 2 நிகழ்வின்போது




01.08.2015 காலை சேர்.பொன். அருணாசலம் அரங்கில் இடம்பெற்ற சமகால அமர்வு - 3 நிகழ்வின்போது



02.08.2015 காலை தவத்திரு செல்லப்பா சுவாமிகள் அரங்கில் இடம்பெற்ற சமகால அமர்வு - 7 நிகழ்வின்போது



02.08.2015 காலை தவத்திரு யோகர் சுவாமிகள் அரங்கில் இடம்பெற்ற சமகால அமர்வு - 8 நிகழ்வின்போது

இவ்விதழ் இல. 48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.